பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 11, வியாழக்கிழமை 27.07.2017 கதிர் 263

## தீர்ப்பு திருப்பு முனை ஸ்டாலின் மகிழ்ச்சி



விடுதலைப் புலிகள்மீதானதடையை ஐரோப்பியஒன்றிய நீதிமன்றம் நீக்கியுள்ளமை உலகத் தமிழர்களை மகிழ்ச்சிக்குள்ளாக்கியிருப்பதாகதிராவிடமுன்னேற்றக் கழகத்தின் செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் பக்கம் 18

### வடக்கு மாகாண சபையின்

## நூறாவது அமர்வு இன்று

### இதுவரையில் பயனற்ற தீர்மானங்களை நிறைவேற்றியதே மிச்சம் எனக் கண்டனம்

வடமாகாணசபையின் ஆட்சியைதமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றி 3வருடங்கள்9மாதங்கள் நிறைவடைந்திருக்கும் நிலையில், சபையின் நூறாவது அமர்வு இன்று மாகாண சபையின்பேரவைசெயலகசபா மண்டபத்தில் அவை தலைவர் சி.வீ.கே.சிவ பக்கம் 18




## சொத்துக்கள் மீதான முடக்கம் ரத்து

**லக்ஸம்பேர்க், ஜூலை 27**

**ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாதக் கறுப்புப் பட்டியலில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை ஐரோப்பிய உயர் நீதிமன்றம் நீக்கியுள்ளது.**

**ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் புலிகளின் சொத்துக்கள், நிதிகள், வங்கிக் கணக்குகள் மீது விதிக்கப்பட்டிருந்த தொடர்ச்சியான முடக்கமும் இந்தத் தீர்ப்பின் மூலமும் ரத்துச் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

**நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு மூலம் புலிகள் இயக்கத்தின் மீதான தடை 11 ஆண்டுகளின் பின்னர் விலக்கப்படுகின்றது.** பக்கம் 18

## நாளை பாடசாலைகளில் வகுப்புகள் நடக்கமாட்டா!

### டெங்கு ஒழிப்பு வேலையே முன்னெடுப்பு

கொழும்பு ஜூன் 27

நாட்டில் வேகமாகப் பரவிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாடு முழுவதுமுள்ள பாடசாலைகளில் டெங்கு நுளம்பு ஒழிப்பு வேலைதிட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார். பக்கம் 18

## கேப்பாபிலவு காணி விடயத்துக்கு முடிவு கட்ட 10 - 12 நாள் அவகாசம் கேட்கிறார் சம்பந்தன்



கொழும்பு, ஜூலை 27

கேப்பாபிலவு காணி விவகாரம் தொடர்பில் ஜனாதிபதியுடனும், படைத்தளபதிகள், மூத்த அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்டஅமைச்சர்கள்ஆகியோருடன் பேசித் தாம் திட்டவட்டமாக ஒருமுடிவுக்குவருவதற்குபத்து முதல் பன்னிரண்டு நாள்கள் கால அவகாசம் வழங்கும்படி மேற்படிகேப்பாபிலவில்காணி மீட்புக்காகப் போராடி வரும் மக்களின் பிரதிநிதிகளிடம் நேரில் கோரினார் எதிர்க் கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன்.

கேப்பாபிலவு காணி விவகாரம்தொடர்பாகநேற்றுசிறைச்சாலைகள்மறுசீரமைப்பு, புனர்வாழ்வளித்தல், இந்து கலாசாரஅமைச்சர்டி.எம். சுவாமிநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தமக்கு ஏற்பட்ட அதிருப்தியை அடுத்தே மேற்படி மக்கள் பிரதிநிதிகளிடம் இவ்வாறு கால அவகாசம் பக்கம் 18

## அமெ.மேரிலண்ட் ஆளுநர் பதவி; தேர்தல் களத்தில் தமிழ்ப் பெண்!



அமெரிக்காவின் மேரிலண்ட் மாநிலஆளுநர்தேர்தலில்இலங்கைத் தமிழ்ப்பெண்ணான 37 வயதுடைய கிரிசாந்திவிக்னராஜாபோட்டியிடவுள்ளார் என அமெரிக்க ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் முன்னாள் முதல் பெண்மணியான மிச்சேல் ஒபாமாவின் கொள்கைப் பணிப்பாளர்களில் ஒருவராகச் செயற்பட்ட கிரிசாந்தி விக்னராஜா பக்கம் 18

## பெற்றோலிய வேலை நிறுத்தம் செவ்வாய் வரை இடைநிறுத்தம்

### அத்தியாவசிய சேவைப் பிரகடனத்தை அடுத்து இராணுவத் தலையீடு

கொழும்பு, ஜூலை 27

பெற்றோலிய தொழிற் சங்கங்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தப் போராட்டம், எதிர்வரும் செவ்வாய் கிழமை வரை தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேனவிற்கும் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்றிரவு இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்தே இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக, மேற்படி வேலை நிறுத்தத்தால் பெற்றோலிய வகைகளுக்கான பற்றாக்குறை, தட்டுப்பாடுஏற்பட்டுநாட்டில் பக்கம் 18

## சுட்டுக் கொல்லப்பட்ட மெய்க்காவலரின் இரு பிள்ளைகளதும் பொறுப்பை ஏற்றார் இளஞ்செழியன்!



நீதிபதி இளஞ்செழியனை இலக்கு வைத்து மேற் கொள்ளப்பட்டதாக கூறப்படும் துப்பாக்கிச் சூட்டுசம்பவத்தில் உயிரிழந்த மெய்ப்பாதுகாவ பக்கம் 18

## மாகாண அதிகாரங்களில் மத்திய அரசு தலையிட முடியாதமை உறுதிப்படுத்தப்படும்

### வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 27

★ மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகார விடயங்களின் மீது மத்திய அரசு தலையிடவே முடியாது.

★அதுபோலமாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மத்திய அரசு திரும்பப்பெறவும்முடியாது.

- இந்த இரண்டு பக்கம் 18

## மெய்க் காவலரின் பூதவுடல் சிலாபத்தில் நேற்று நல்லடக்கம்



யாழ். நல்லூர்பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில்உயிரிழந்த சார்ஜண்ட்ஹேமச்சந்திரவின் பூதவுடல் நேற்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

கடந்த சனிக்கிழமை யாழ். நல்லூர் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப் பக்கம் 18

## முதல்வரின் விடயத்தில் தமிழரசுக்கட்சி தேவையில்லாமல் அத்துமீறித் தலையீடு

### இது அவசியமா என்று கேட்கிறார் சுரேஷ்




யாழ்ப்பாணம், ஜூலை 27

வடக்கு மாகாண முதலமைச்சருக்கு உரித்தான விடயங்களில் தேவையற்ற தலையீடு அவசியம்தானா என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பில் அதன் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

அண்மையில் வடக்கு முதல்வருக்கும் பக்கம் 18

### அளப்பு அருணாசலம்



வெறுமனே கூடிப் பேசி, குழம்பி, கலைஞ்சது தான் மிச்சம்...!

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

# வங்காலை புனித ஆனாள் ஆலய திருவிழாக் காட்சிகள்







மன்னார் மறைமாவட்டத்திலுள்ள வங்காலை பங்கின் பாதுகாவலாளியாம் புனித ஆனாள் ஆலய வருடாந்தத் திருவிழா நேற்று நடைபெற்றது. திருவிழாவுக்கு பிரதம விருந்தினராக அழைக்கப்பட்ட மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கின்றமையையும் வலம்புரிச் சங்கு சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் அன்னையின் திருச்சுருபம் பக்தர்கள் மத்தியில் வலம் வருவதையும் திருச்சுருப ஆசீரை ஆயர் வழங்குகின்றமையையும் படங்களில் காணலாம். (எ-112)

# வறட்சி நீங்கவும் நல்லிணக்கம் வரவும் இறைவனிடம் கையேந்தி வேண்டுங்கள்!

## பக்தர்களுக்கு விசேட வேண்டுகோள் விடுத்தார் மன்னார் ஆண்டகை சுவாம்பிள்ளை

மன்னார், ஜூலை 27

நாட்டில் வறட்சி நீங்கவும் நல்லிணக்கம் ஏற்படவும் அனைவரும் இறைவனை நோக்கிக் கையேந்துங்கள் என்று மன்னார் மறை மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகை பக்தர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

மன்னார் மறை மாவட்டத்தில் வங்காலை புனித ஆனாள் ஆலயத் திருவிழா நேற்று நடைபெற்றது. மன்னார் ஆயர் ஆண்டகை இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு விசேட வேண்டுகோளாக அதனை அங்கு குழுமியிருந்த பக்தர்கள் மத்தியில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



நாட்டில் சமாதானமும் நல்லிணக்கமும் இன்னும் உருவாகாத நிலை காணப் படுகின்றது. எனவே,இந்த நிலை மாறி நாட்டில் நீதியுடனான சமாதானமும் நல்லிணக்கமும் உருவாக வேண்டும். எல்லா சமூகமும் ஒற்றுமையில் திளைக்க வேண்டும்.

அத்துடன், எமது நாடு வறட்சியைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றது. மரங்கள், பறவைகள், மிருகங்கள் மட்டுமல்ல மனித இனத்துக்கும் இந்த வறட்சி பெரிய பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டு வருகின்றது. ஆகவே, நாம் இதற்காக இறைவனிடம் கையேந்தி இறை வேண்டுதலைக் கேட்க வேண்டும் என உங்களிடம் நான் இந்த வேளையில் வேண்டி நிற்கின்றேன்.

அதுமட்டுமல்ல, நாட்டில் நல்லிணக்கம் இன்னும் ஏற்படாமையாலும் நாட்டில் வறட்சியின் கொடுமை தொடர்கதையாக இருந்து வருவதாலும் எமது எதிர்காலச் சந்ததியினர் மிகவும் பாதிப்புக்குள்ளாகும் நிலை உள்ளது. நாம் உருக்கமாக இறைவனிடம் வேண்டுதல் கேட்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். (எ-112)

## புராதன சிலைகளை விற்பனை செய்ய முயன்ற ஐவர் கைது!

மினுவாங்கொடை, தேவலபொல பிரதேசத்தில் தொல்லியல் பெறுமதி மிக்க உலோகத்தால் செய் யப்பட்ட தெய்வச்சிலைகள் மற்றும் விலங்குகளின் சிலைகளை 7 கோடி ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்ற 5 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அந்த சந்தேகநபர்களை பாணந்துறைவலானமோசடி தடுப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சிலைகளைக் கொள்வனவு செய்யும் வர்த்தகர்கள் போன்று மாறு வேடத்தில் சென்ற பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில், சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சந்தேக நபர்களிடம் இருந்த சிலைகளைப் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். (எ)

# போதைப்பொருள் பாவனையை எதிர்த்து கிளிநொச்சியில் பேரணி






போதைப்பொருள் பாவனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கிளிநொச்சியில் நேற்று கவனவீர்ப்புப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கரிதாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில், நேற்றுக்காலை 9.30 மணிக்கு கரடிப்போக்குச் சந்தியில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பேரணி, போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் இழப்புக்களைச் சித்திரிக்கும் பதாதைகளை ஏந்தியவாறு மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்தது. அங்கு, போதைப்பொருள் பாவனையைத் தடுப்பது தொடர்பான மகஜர் ஒன்று, மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் கையளிக்கப்பட்டது. இந்தப் பேரணியில், கிராம மட்ட அமைப்புகள், மதத் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர். (எ)

# வீட்டுத்திட்டம் வழங்கக் கோரி தாலிக்குளம் மக்கள் ஆர்ப்பாட்டம்



வவுனியா, ஜூலை 27

வவுனியா, தாலிக்குளம் பகுதியில் வசிக்கும் மக்கள் வீட்டுத்திட்டம் கோரி நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்தக் கிராமத்தில் உள்ள பிள்ளையார் ஆல யம் முன்பாக நேற்றுக்காலை ஒரு மணிநேரம் இந்தக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

வவுனியா, பூவரசன்குளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள தாலிக் குளம் கிராமத்தில் கடந்த 10 வருடங்களாக வசித்து வருகின்ற சுமார் 30 குடும்பங்களுக்கு இது வரை வீட்டுத் திட்டம் வழங்கப்பட வில்லை. அத்துடன், அங்கு வசிக்கும் உபகுடும்பங்கள்பலவற்றுக்கும் இதுவரை வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை. இதன் காரணமாகவே அந்தப் பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

இதுதொடர்பில்அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கையில்:-

'போரால் பாதிக்கப்பட்டு எமது உடைமைகள் அனைத்தையும் இழந்து அகதி வாழ்வு வாழ்ந்து இங்கு குடியேறியிருந்த நிலையில் கூட, எமக்குத் தற்போது வரை வீட்டுத் திட்டம் வழங்கப்படாமையால் எமது சொந்த நிலத்திலேயே அகதி போன்று வாழவேண்டிய நிலைமையே தற்போது உள்ளது. அத் துடன் சமுர்த்திக் கொடுப்பனவுகள் எவையும் எமக்கு வழங்கப்படவில்லை.

எமது கிராமத்துக்கான வீதிகள் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது உள்ளன. குடிதண்ணீர்பிரச்சினையையும் எதிர்நோக்கி வருகின்றோம். எமது கிராமத்தை அரச அதிகாரிகள் கைவிட்டு விட்டார்களா...?' -என்று கேள்வி எழுப்பினர். (எ-100)

# புலிகளின் மீதான தடை நீடிக்கும்: ஐரோப்பிய ஒன்றியம் மீள் அறிவிப்பு

## நீதிமன்ற உத்தரவு 2011 – 2015 இற்கு உரியதாம்

பிரஸல்ஸ், ஜுலை 27

விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படுவதாக ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ள போதிலும் –

அந்த அறிவிப்பு 2011 – 2015 இற்கு உரியது என்றால், புலிகள் மீதான தடை தொடர்கின்றது என இலங்கை நேரப்படி நேற்றிரவு ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்ந்தும் பயங்கரவாத இயக்கமேயாகும் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளை பயங்கரவாத இயக்கமாக பட்டியலிடுவதற்கு பயன்படுத்திய முறைமை குறித்தே நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2011 முதல் 2015ஆம் ஆண்டுக் காலப் பகுதி வரையிலான மதிப்பீடுகளின் அடிப்படையில் ஐரோப்பிய நீதிமன்றம் இந்தத் தீர்ப்பினை வழங்கியுள்ளது.

எனினும், ஐரோப்பிய ஒன்றியம் 2015 முதல் 2017ஆம் ஆண்டுவரையிலான காலப்பகுதியின் அடிப்படையில் புலிகள் தடைசெய்யப்பட்ட இயக்கமாகவே பட்டியலிட்டுள்ளது.

நீதிமன்றின் தீர்ப்பு உன்னிப்பாக ஆராயப்பட்டு தேவை ஏற்பட்டால் எதிர்காலத்தில் தடை உத்தரவு குறித்த திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் – என ஐரோப்பிய ஒன்றியம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# துவராகேஸ்வரனைக் கைது செய்ய நீதிமன்றம் நேற்றுப் பிடியாணை

கொழும்பு, ஜுலை 27

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் எனத் தம்மைக் கூறிக் கொள்பவரும், யாழ்ப்பாணவர்த்தகரும், கொழும்பு – யாழ். தனியார் பஸ் சேவையை நடத்துபவருமான தியாகராஜா துவாரகேஸ்வரனைக் கண்ட இடத்தில் கைது செய்யுமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று பிடியாணை பிறப்பித்தது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அலுவலகத்துக்குள் புகுந்து அடாவடித்தனத்தில் ஈடுபட்டார் என்று செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே இந்தப் பிடியாணை நேற்றுப் பிறப்பிக்கப்பட்டதாக அறியவந்தது.

கடந்த திங்களன்று கொழும்பில் உள்ள மேற்படி ஆணைக்குழுவின் வாசலை மறித்தமை மற்றும் ஆணைக்குழு உறுப்பினர்கள், அதிகாரிகளுடன் அடாவடித்தனம் பண்ணியமை ஆகிய குற்றச்சாட்டுகள் தொடர்பாக அவருக்கு எதிராக அவசர பொலிஸ் சேவையிடம் முறைப்பாடு செய்யப்பட்டதாகத் தெரிகின்றது.

எனினும் பொலிஸார் விரைந்து வருவதற்கு இடையில் அவர் அங்கிருந்து நழுவி விட்டார் என்றும் –

அதையடுத்து அவருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு, நீதிமன்றம் ஊடாகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் – தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு நாரஹன்பிட்டிய பொலிஸாருக்கு இந்தப் பிடியாணை உத்தரவை புதுக்கடை நீதிமன்றம் வழங்கியுள்ளது.

இந்தவிடயங்களை பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் உறுதிப்படுத்தியுள்ளார். (உ)

# நீதிபதியின் கூற்றை மறுதலித்த இரு பொலிஸாருக்கும் சிக்கல்?

கொழும்பு, ஜுலை 27

நல்லூர் துப்பாக்கிப் பிரயோக சம்பவம் தொடர்பில் யாழ். பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரனிஸ்லஸ் மற்றும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ருவான் குணசேகர ஆகிய இருவருக்கும் புதிய சிக்கல் நிலை தோன்றியுள்ளதாக சில செய்தி ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தேசிய பொலிஸ் ஆணைக்குழு மிகவிரைவில் இந்த இருவரையும் விசாரணைகளுக்காக அழைக்கலாம் என பொலிஸ் வட்டாரத்தை மேற்கோள்காட்டி ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்தத் தீர்மானம் நாட்டின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட விசேட கூட்டத்திலேயே எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்தத் துப்பாகிப் பிரயோக சம்பவம் தொடர்பில் குறிப்பிட்ட இரு பொலிஸ் அதிகாரிகளும் முன்னுக்குப் பின் முரண்பட்ட அறிவிப்புக்களை வெளியிட்டிருந்தனர் என்றும், சந்தேக நபர் கைதாகாத நிலையில் எந்தவித வலுவான விசாரணைகளும் நடத்தப்படாமல் நீதிபதி இளஞ்செழியனின் கூற்றை மறுதலிப்பதாக இருவரது அறிவுப்புக்களும் வெளியாகி பலத்த சர்ச்சைகளைஏற்படுத்தியிருந்தனஎன்றும் கூறப்படுகின்றது.

இந்த நிலையிலேயே இவர்கள் இருவரும் விசாரணைக்கு அழைக்கப்படலாம் என்ற தகவல் ஊடகங்களில் கசிந்துள்ளது.

## பொலிஸ் அதிகாரி மீது இளைஞர் குழு தாக்குதல்

யாழ்ப்பாணம் ஜுன் 27

யாழ்ப்பாணம் துன்னாலைப் பகுதியில் பொலிஸ் அதிகாரி மீது 3 பேர் கொண்ட இளைஞர் குழுவொன்று நேற்று இரவு தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் அதிகாரி ஒருவரே தனது கடமையை முடித்து விட்டு வீடு திரும்பும் போது அவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இத்தாக்குதலுக்கு இலக்கான பொலிஸ் அதிகாரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## செயலமர்வில் பங்குபற்றுவது கட்டாயம்

உயர்தரப் பரீட்சைகள் தொடர்பில் ஏற்பாடு செய்யப்படவுள்ள அறிவுறுத்தல் செயலமர்வில் பங்கு பற்றாத அதிகாரிகளின் நியமனங்கள் இரத்துச் செய்யப்படவுள்ளனப்பரீட்சைகள்திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஓகஸ்ட் உயர்தரப் பரீட்சையில் இடம்பெறும் மோசடிகளை இல்லாமல் செய்யும் பொருட்டு, அறிவுறுத்தல் செயலமர்வு ஒன்றை இலங்கை பரீட்சைகள் திணைக்களம் ஏற்பாடு செய்யத் தீர்மானித்துள்ளது. அச் செயலமர்வில் அனைத்து அதிகாரிகளும் பங்குபற்றுவது அவசியம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கேப்பாபிலவு...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவம் கோரியுள்ளதாகச் சுட்டிக்காட்டிய அமைச்சர் சுவாமிநாதன் அந்தத் தொகையை அமைச்சரவைப் பத்திரம் மூலம் தாம் விரைந்து பெற்றுக் கொடுப்பார் என அங்கு உறுதியளித்தார்.

எனினும், அப்படி நிதி கிடைத்தாலும், அந்தக் காணியை விடுவிக்கத் தங்களுக்கு 6 மாதம் வரைத் தேவைப்படலாம் என்றனர் படைகளின் பிரதிநிதிகள்.

அதனை ஏற்பதற்கு காணி மீட்புக்காகப் போராடும் மக்களும் அவர்களின் ஜனநாயகப் பிரதிநிதிகளும் மறுத்தனர்.

அதேசமயம் எஞ்சியுள்ள 70 ஏக்கர் காணி விடுவிப்பு குறித்து திட்டவட்டமான பதில் தரவும் இராணுவத் தரப்பு மறுத்தது.

அதுகுறித்து சீற்றமடைந்தார் சம்பந்தன் எம்.பி.

"முதலில் மக்களின் காணிகளில் உங்கள் பாட்டில் கட்டடம் கட்டியதே பெருந்தவறாகும். அந்தக் காணிகளை விடுவிப்பதற்கு கட்டடங்களுக்கு நஷ்டஈடு கேட்பது அதைவிடத் தவறு. அது தரப்படும் என்ற பிறகும் விடுவிக்க ஆறு மாதம் கோருவதும், எஞ்சிய காணிகளை விடுவிக்க மறுப்பதுவும் பெருந்தவறு. இதை உங்களால் விடுவிக்க முடியாவிட்டால் உரிய இடத்தில், உரிய முறையில் பேசி விடுவிக்க நடவடிக்கை எடுப்போம். ஆறு மாத காலம் வரை காத்திருக்க முடியாது. ஏற்கனவே மக்கள் ஆறு மாத காலம் போராடிக்களைத்து விட்டார்கள்." – என்றார்.

இதன் பின்னர் மேற்படி நில மீட்புப் போரில் ஈடுபட்டிருக்கும் மக் களின் பிரதிநிதிகளைச் சந்தித்த சம்பந்தன், இந்த விடயம் குறித்துப் பேசி ஏதேனும் திட்ட வட்டமான முடிவை அறிவிப்பதற்குத் தமக்கு 10 முதல் 12 நாள்கள் அவகாசம் தரும்படி அவர்களிடம் கோரினார். (உ)

## முதல்வரின்...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தருக்கும் இடையில் கடந்த 23.07.2017 ஞாயிற்றுக்கிழமை அன்று கொழும்பில் ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது. ஏறத்தாழ ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்ற பேச்சின் முழு விவரங்களும் பத்திரிகைகளுக்கு வெளியிடப்படாத நிலையில், வடக்கு மாகாணசபையின் அண்மைக்கால நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக ஊடகசெய்திகள் தெரிவிக்கின்றன.

அது மாத்திரமல்லாமல், வடக்கு மாகாண முதலமைச்சர் முன்னெடுக்க இருந்த விசாரணைகளை நிறுத்தும்படியும் அமைச்சர் டெனீஸ்வரனை மாற்றும்படியான ரெலோவின் கோரிக்கைகளை நிறுத்தும்படியும் இவை தொடர்பாக கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற பங்காளிக் கட்சித் தலைவர்களுடன் பேசியே முடிவெடுக்க வேண்டும் என்று சம்பந்தன் கூறினார் எனவும் அதற்கு முதலமைச்சர் உடன்பட்டார் எனவும் அவ்வாறான தொரு கூட்டத்தை ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி சம்பந்தன் யாழ்ப்பாணம் வரவிருப்பதால் அன்றைய தினம் நடத்தலாம் என்றும் முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அறிகின்றோம்.

இப்பொழுது தமிழரசுக் கட்சியின் தலைமை, அவ்வாறான ஒரு கூட்டத்திற்கு முன்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் கலந்துரையாடி, ஒரு முடிவை எட்ட வேண்டும் என்றும் அதற்குப் பின்னர் முதலமைச்சருடன் பேசலாம் என்றும் கருதுவதாக சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

2013ஆம் ஆண்டு வடக்கு மாகாணசபை உருவாக்கப்பட்ட போது, பங்காளிக் கட்சிகளுடன் பேசி அமைச்சர்கள் நியமிக்கப்படவில்லை. இப்பொழுது பல்வேறு ஊழல்கள், குழப்பங்கள் நடைபெற்றிருக்கக்கூடிய சூழலில், இதற்கான விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டு முதலமைச்சர் சில அமைச்சுக்களை மாற்றிய சூழ்நிலையிலும் ஏனைய அமைச்சர்கள் தொடர்பாக விசாரணைக் குழு ஒன்றை நிறுவவிருக்கும் சூழலிலும், இவை தொடர்பாக பங்காளிக் கட்சிகள் கூடி பேச வேண்டும் என்று சம்பந்தன் குறிப்பிடுவதும் பங்காளிக்கட்சிகள் ஒருமித்த கருத்துக்கு வரவேண்டுமென்று தமிழரசுக் கட்சி குறிப்பிடுவதும் இவ்வாறானவர்களை தொடர்ந்து அங்கீகரிக்கும் முயற்சியா என்ற ஐயமும் ஏற்படுகின்றது.

நாடாளுமன்ற அரசியல் சாசன வழிநடத்தல் குழுவானது 63முறை கூடியதாக தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் கூறுகின்றார். ஆனால், எமது கடுமையான முயற்சியின் காரணமாக இந்த அரசியல் சாசன முயற்சிகள் பற்றி அங்கத்துவக் கட்சிகளுடன் ஒரேயொருமுறை மட்டுமே கலந்துரையாடப்பட்டுள்ளது. 63முறை பேசியும்கூட இவை தொடர்பான சாதக, பாதகங்கள், முன்னேற்றங்கள் தொடர்பாக இதுவரை பங்காளிக்கட்சிகளுக்கு எந்தவிதமான விளக்கமும் அளிக்கப்படவில்லை. தமிழ் மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கக்கூடிய தீர்க்கமான முடிவெடுக்க வேண்டிய தருணங்களில் கூட பங்காளிக்கட்சிகளுடன் கலந்துபேச விரும்பாத சம்பந்தன் போன்றோர் இன்று மாகாணசபையில் முதலமைச்சரால் மேற்கொள்ளப்படவுள்ள – அவருக்கு உரித்தான – நடவடிக்கைகளில் தலையிட்டு அதனை தவறாக வழிநடத்த முயற்சிப்பதும் அதற்காகப் பங்காளிக்கட்சிகளின் ஒப்புதலைப் பெற முயற்சிப்பதும் அநாகரிகமாகும்.

யுத்தத்திற்குப் பின்னர், தமிழ் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். மீள்குடியேற்றம், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகளின் விடுதலை, இராணுவ வெளியேற்றம் போன்ற விடயங்கள் தமிழ் மக்களுக்கு முன்னால் உள்ள பிரதானபிரச்சினைகளாக உள்ளன. இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக எமது மக்கள் கடந்த 150 நாள்களுக்கும் மேலாக வடக்கு – கிழக்கு மாகாணம் முழுவதும் போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த போராட்டக்காரர்களுக்கு எந்த விதமான தீர்வையும் பெற்றுக்கொடுக்க சம்பந்தருக்கும் தமிழரசுக் கட்சிக்கும் முடியவில்லை. இவற்றை எவ்வாறு கையாளலாம், தீர்வுகளைப்பெற்றுக்கொள்வதற்கு எத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றலாம் என்கின்ற விடயங்கள் தொடர்பாக கலந்தாலோசிப்பதற்கு இதுவரை பங்காளிக்கட்சிகள் அழைக்கப்படவில்லை.

இன்னும் கூறுவதாக இருந்தால் போராட்டங்கள் கொச்சைப் படுத்தப்பட்டன. போராடும் மக்களிடம் சென்று ஆண்டவனை வேண்டும்படி சம்பந்தன் கூறியுள்ளார்.

சர்வதேச சமூகத்துடன் பேசுகின்றபொழுதும் பலவிடயங்களில் முன்னேற்றம் இருக்கிறது என்று கூறினாரே தவிர, அரசாங்கத்தின் உண்மையான சுயரூபத்தை இவர் தோலுரித்துக் காட்டவில்லை. இன்னும் சொல்வதாக இருந்தால் அரசாங்கத்தைப் பாதுகாப்பதில் இவர்கள் முனைப்பாகச் செயற்பட்டனர்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் விசேட அறிக்கையாளர் இலங்கை அரசாங்கத்தின் மிக மோசமான மனித உரிமைகள் மீறலையும் ஐ.நா. தீர்மானங்களைக் கண்டுகொள்ளாமல் இருப்பதையும் இலங்கையில் தொடர்ந்து நடைபெறக்கூடிய சித்திரவதைகள் தொடர்பாகவும் பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் இன்னும் தமிழர்கள் கைது செய்யப்படுவதையும் தோலுரித்துக் காட்டியமை மாத்திரமல்லாமல், இலங்கை அரசாங்கத்தின் இனவாதப்போக்கையும் தெளிவாக வெளிக்காட்டியுள்ளார்.

மகாநாயகர்கள் புதியதொரு அரசியல் சாசனமோ அல்லது இருக்கின்ற யாப்பில் திருத்தங்களோ தேவையில்லை என்று சொல்லிய போதிலும் அவர்களை மீறி நாம் எதுவும் செய்ய மாட்டோம் என்று ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் உறுதிமொழி அளித்திருக்கும் நிலையில் அரசியல் சாசன விடயங்கள் தொடர்பாக தமிழ் மக்களுக்கு உண்மைக்குப் புறம்பான செய்திகளையே சம்பந்தன், சுமந்திரன் போன்றோர் தெரிவித்து வருகின்றனர்.

யதார்த்த நிலைமைகள் இவ்வாறிருக்கையில், மக்களுக்கு இன்றைய அரசியல் நிலை தொடர்பாக உண்மையான கருத்தை வெளிபடுத்த வேண்டியவர்கள் அவை எல்லாவற்றையும் மறந்து முதலமைச்சருக்கு உரித்தான மாகாணசபை விடயங்களில் மூக்கை நுழைத்து, அதனை தொடர்ந்தும் ஒரு பிரச்சினையாக்குவது இன்றளவில் தேவைதானா? எனவே பிரச்சினைகளை திசைதிருப்பாமல், தமிழ்மக்களின் நலன் சார்ந்த விடயங்களில் வினைதிறனுடன் ஈடுபடுமாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வேண்டுகிறது.– என்று உள்ளது. (உ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## படைகளைக் காப்பதில் ஒற்றுமை

காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் சில தினங்களுக்கு முன்னர் இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தோம்.

வெறுமனே காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்தைத் திறந்து செயற்படுத்துவதன் மூலம் மட்டும் இப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது என்பதையும் -

அப்படி அலுவலகத்தைத் திறக்கும் நடவடிக்கை மட்டும், காணாமற்போனோரைத் தேடி நீண்ட காலம் காத்துக் கிடந்து துவண்டு போயிருக்கும் அவர்களது உறவுகளைத் திருப்திப்படுத்துவதாக அமையாது என்பதையும் - அந்த ஆசிரியர் தலையங்கத்தில் விலாவாரியாகக் குறிப்பிட்டிருந்தோம்.

அதே கருத்தை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்றுமுன்தினம் மாலையில் நாடாளுமன்றத்தில் விளக்கமாக சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

காணாமற்போனோரின் உறவுகளைத் திருப்திப்படுத்துவதற்கு - அவர்களின் குறைந்த மட்ட எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதற்கு - யாது செய்ய வேண்டும் என்று ஏற்கனவேயும், திரும்ப நேற்றுமுன்தினமும் தமது நாடாளுமன்ற உரையில் வலியுறுத்தியிருக்கின்றார் சரவணபவன்.

காணாமற்போனோர் விவகாரம் சம்பந்தமாக நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு வேளையில் விசேட பிரேரணை ஒன்றை முன்மொழிந்து எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனும் உரையாற்றியிருக்கின்றார். அதில் அவர் கூறிய விடயங்கள் சில இப்போது கவனிப்புக்கு உள்ளாகின்றன.

காணாமற்போனோர் விவகாரத்தை ஒட்டி அமைக்கப்படும் அலுவலகம் தொடர்பான விடயத்தை, தமது குறுகிய அரசியல் லாபங்களுக்கான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வேண்டுமென்றே திசை திருப்புகின்றார் என்று நாடாளுமன்ற உரையில் அப்பட்டமாகக் குற்றம் சுமத்துகின்றார் இரா.சம்பந்தன்.

அந்த அலுவலகத்தை அமைப்பது அரசமைப்புக்கு முரணானது என்று பௌத்த மத பீடங்களுக்குத் தாம் எழுதியுள்ள கடிதத்தில் மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளமை தமிழர்களைப் பொறுத்தவரை கண்டிக்கப்படவேண்டிய ஒரு கூற்றாகும்.

எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் கூறியிருக்குமாற்போல, அந்த அலுவலகம் அமைப்பது அரசமைப்புக்கு முரண் என்றால், முதலில் அது தொடர்பான சட்டமூலம் நாடாளுமன்றுக்கு வந்த போது, நாடாளுமன்றத்திலே அதன் மீதான விவாதத்தின்போது சுட்டிக் காட்டியிருக்க வேண்டும். அதை மஹிந்தர் செய்யவில்லை.

அப்படி இல்லாவிடின், அந்தச் சட்ட மூலத்தை உயர் நீதிமன்றம் பரிசீலித்தபோது அங்கு மனுச்செய்து, அதனைச் சுட்டிக்காட்டி வாதிட்டிருக்க வேண்டும். அதையும் மஹிந்தர் செய்யவில்லை.

இரண்டையும் செய்யாமல் வாளாவிருந்துவிட்டு, இப்போது வந்து நாடாளுமன்றுக்கு வெளியில் மகாநாயக்கர்களுக்குக் கடிதம் அனுப்புகின்றமை மஹிந்த ராஜபக்ஷ செய்யும் தவறுதான்.

அதனைச் சுட்டிக்காட்டும் சம்பந்தன், காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் இன்னொரு விடயத்தையும் சுட்டிக்காட்டியிருக்க வேண்டும். சுட்டிக் காட்டாமல் தவிர்த்திருக்கின்றார் என்பது தமிழர் தரப்புக்கு சற்று விசனத்தைத் தருகின்றது என்பதை நாம் சொல்லியே ஆகவேண்டும்.

"காணாமலாக்கப்பட்டோரில் பெரும்பாலானோர் நிராயுத பாணிகளாகப் படையினரால் பிடித்துச் செல்லப்பட்டவர்கள்; அல்லது பொறுப்பேற்கப்பட்டவர்கள். அப்படி பொறுப்பேற்றவர்களைக் காணாமலாக்குவது யுத்த நடவடிக்கை அல்ல. அத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்டோரைத் தண்டிப்பது என்பது யுத்தத்தில் வெற்றி கொண்டோரைத் தண்டிக்கும் செயலாக அர்த்தம் கொள்ளக்கூடாது.

"நிராயுத பாணிகளாகப் பொறுப்பேற்கப்பட்டவர்கள் கொல்லப் பட்டவர்கள்; பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார்கள். இவற்றை நாம் 'சனல் -4' இல் கண்டோம். இவை யுத்த நடவடிக்கையும் அல்ல, இத்தகைய செயலால் கிடைத்ததற்குப் பெயர் யுத்த வெற்றியுமல்ல." - என்று சுட்டிக்காட்டும் சம்பந்தன் பிறிதொரு விடயத்தையும் சுட்டி நிற்கின்றார்.

"அரசாங்கத்தின் கட்டளைப்படி, சரியான யுத்தம் ஒன்றை முன்னெடுத்த யாரையும் தண்டிக்கும் எண்ணம் கிடையவே கிடையாது." - என்றும் அவர் விரித்துக் கூறுகின்றார்.

"உண்மையில் அத்தகைய குற்றங்களைப் புரிந்தோரை மூடி மறைத்துக் காப்பாற்றுவதுதான் உண்மையான யுத்த வீரர்களைக் கொச்சைப்படுத்தும் நடவடிக்கையாகும்." - என்றும் சம்பந்தன் கூறியிருக்கின்றார். அது முற்றிலும் சரியானது.

ஆனால், அத்தகைய குற்றம் புரிந்தோரைக் காப்பதில் தனித்து முனைப்பாக நிற்பது கூட்டு எதிரணியோ, அதன் தலைமையான மஹிந்த ராஜபக்ஷ அணியோ மட்டும் அல்ல.

இன்று சம்பந்தன் யாருடன் சமரசம் பேசித் தீர்வுகாண எத்தனிக்கின்றாரோ, அந்தத் தரப்பும் கூட - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கூட - அப்படித்தான் கருதிச் செயற்படுகின்றார்கள்.

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணல், உண்மையை நிலை நாட்டல், நீதியை நிலைநிறுத்துதல் என்று வரும்போது சிங்களத் தேசியவாதம் தமக்குள் ஒன்றிணைந்து விடும். அது அவர்களது பரவணிப் பழக்கம். இதில் ஆளும் தரப்பு வேறு, எதிர்த்தரப்பு வேறு என்று பிரித்துக்கூற எதுவும் இல்லை.

# அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து சர்வமதத் தலைவர்களுக்கு மகஜர்கள்!

## அருட்தந்தை சக்திவேல் கையளித்தார்



யாழ்ப்பாணம், ஜூலை 27

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக யாழ். மறைமாவட்ட ஆயர், நல்லை ஆதீனம் மற்றும் முதல்வர் ஆகியோரிடம் மகஜர்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

தமிழ் அரசி யல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு இந்த மகஜரைக் கையளித்துள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுக் காலை விஜயம் மேற்கொண்ட தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் தலைவர் அருட்தந்தை மாரிமுத்து சக்திவேல் அந்த மகஜரை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளிடம் நேரடியாகக் கையளித்தார். அத்துடன், யாழ். மறைமாவட்ட ஆயர் வண. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையிடமும் கையளித்தார்.

தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றான தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக, பல்வேறு போராட்டங்கள் இடம் பெற்ற நிலையிலும், இன்று வரை எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகத் தொடர்ச்சியாக அரசுக்கு அழுத்தம் கொடுத்துவரும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு, தற்போது சர்வமதத் தலைவர்களின் உதவியை நாட தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடபகுதிப் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பிலான கருத்தரங்கு

## யாழ்.மாவட்ட செயலகத்தில் இரு தினங்கள்

'யுத்தத்தின் பின்னரான சூழலில் வடபகுதிப் பெண்கள் எதிர்நோக்கும்சவால்கள்'-என்ற தலைப்பிலான தேசியக் கருத்தரங்கு யாழ்.மாவட்டச் செயலகத்தில் இன்றும் நாளையும் நடைபெறுகின்றது.

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் 'யுத்தத்தின்பின்னரானசூழலில் வடபகுதிப்பெண்கள்எதிர்நோக்கும் சவால்கள்' என்ற தலைப்பிலான, தேசியக்கருத்தரங்கை ஒழுங்கு செய்துள்ளது. 20க்கு மேற் பட்ட வல்லுநர்கள்,புலமையாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள்தமதுஆய்வுரைகளையும் கருத்துரைகளையும் இந்தக் கருத்தரங்கில் வழங்கவுள்ளார்கள்.

'எங்கள் பலத்தில் எழுந்து நிற்போம்'என்றதொனிப்பொருளில் இந்தக் கருத்தரங்கு நடைபெறுகின்றது. பல்வேறு துறைசார்ந்த நிபுணத்துவமுடையவர்களும் கல்விப்புலம் சார்ந்தோரும் சமூகப்பணியாளர்களும் களநிலைப்பட்டறிவாளர்களும் எனப்பலரும் இதில் ஒன்று கூடுவார்கள். பல்வேறு தரப்பினரதும் கருத்துக்களின் ஊடாட்டகளமாக இது அமையும்.

யுத்தம் முடிவடைந்து ஏழு வருடங்கள் கடந்த போதும் போரில்பாதிக்கப்பட்டமக்களின் தேவைகள் சரியான முறையில் இனங்காணப்பட்டு அவற்றிற்கான தீர்வுகள் முன்வைக்கப்படவில்லை என்ற குறைப்பாடு பலவேறுதரப்பினராலும்முன்வைக்கப்படுகின்றன. குறிப்பாக சனத்தொகையில் அரைவாசிக்கு மேலுள்ளபெண்களின்தேவைகள்அவர்களால்இனங்காணப்பட்டு முன்வைக்கப்படவில்லை என்ற குறைபாடு உண்டு. இதனால் கொழும்பிலும் மேலைநாடுகளிலும்இருந்துவடபகுதிப் பெண்களுக்கான தேவைகள் தீர்மானிக்கப்பட்டுதிட்டங்கள்தீட்டப்பட்டு அமுல்படுத்தப்படுகின்றன. இதனால்விளைந்தபயன் என்னஎன்றுகேட்டால்அதற்கான பதில்களைக்காணமுடியவில்லை. இதனால் 'எங்கள் பலத்தில் எழுந்து நிற்போம்' என்ற கருப்பொருளில் இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. இதில் களத்தில்பெற்றுக்கொண்டஅனுபவங்கள்,பட்டறிவுகள்பகிரப்படும். பல்வேறு துறைசார்ந்த எதிர்வினைகள் ஊடாக வடபகுதிப் பெண்களின் தேவைகள் எவை என்பதுதொடர்பானகொள்கைத் திட்ட மான்றை உருவாக்குவது இதன் நோக்கமாகும்.

அவ்வாறு உருவாக்கப்படுகின்ற கொள்கைத் திட்டங்களை முன்வைத்து எதிர்காலத்தில் திட்டங்கள்தீட்டப்படவேண்டும்.அதற்கானதொடர்ச்சியானமுன்னெடுப்புக்களுக்கானஅழுத்தங்களை வழங்குவதும்இந்தக்கருத்தரங்கின் நோக்கமாக உள்ளது.

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் தேவநாயகம் தேவானந் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாண மகளிர் விவகார சமூக சேவை புனர்வாழ்வு மற்றும் கூட்டுறவு அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் மற்றும் யாழ். மாவட்டமேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் ஆகியோர் கலந்து கொள்வர். கௌரவ விருந்தினர்களாக கே. பாலித பெர்னான்டோ (பிரதிப் பொலிஸ்மா அதிபர்), திருமதி ஆர்.மோகனேஸ்வரன், (திட்டமிடல் பணிப்பாளர், யாழ். செயலகம்), பொ. ஜமுனாதேவி, (அறங்காவலர்,வட இலங்கை சர்வோதயம), செல்வி உதயனி நவரட்ணம் (பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர்) ஆகியோர் பங்குபற்றுவர்.

உளமருத்தவத்துறைசார்ந்த வைத்தியர்களான வைத்தியர் எஸ்.சிவயோகன், எஸ். சிவதாஸ் ஆகியோரும், உளமருத்துவப் பேராசிரியர்தயா.சோமசுந்தரம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களான திருமதி கோசலை மதன், கலாநிதி எஸ். ஜீவசுதன், திருமதி ஜனனீதேவானந் ஆகியோரும், பெண்ணியச் செயற்பாட்டாளர்களான திருமதி வாசுகி ஜெய்சங்கர், ரஜனி சந்திரசேகரம், தன்னார்வத் தொண்டுப் பணியாளர் களான எஜ். ஜீவமுகுந்தன், கே. சித்திரா, எம். ஜன்சிலா, பிரியதர்சினி, வெற்றிச் செல்வி, அருட்தந்தை வின்சன்பற்றிக், என். சுகிர்தராஜ், ஏ.சுமதி ஆகியோரும், சட்டத்தரணி ரூபினி நிசாந்த், உளசமூக உத்தியோகத்தர் கே.கௌதமன், பொலிஸ்சப் இன்ஸ்பெக்டர்சிந்து பாமினி ஆகியோரும் தங்கள் கருத்துரைகளை நிகழ்த்தவுள்ளார்கள்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள், யுத்தத்தின் பின்னரானஉளசமூகப்பிரச்சினைகள், பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவமும் சட்ட ஏற்பாடுகளும், நிதிநெருக்கடியும்பெண்களும், பணியாற்றும்பெண்களின்பிரச்சினைகள், வறுமைமற்றும்பாலியல் தொழிலாளர்கள், மாற்றுத் திறனாளிகள் எதிர்நோக்கும் சவால்கள் போன்ற பல்வேறு விடயங்கள் இந்தத்தேசிய கருத்தரங்கில் ஆராயப்படவுள்ளன.

பெண்கள் அமைப்புக்கள் சார்ந்தவர்களும், தன்னார்வத் தொண்டுப் பணியாளர்கள் மற்றும் அரச உத்தியோத்தர்கள் என்று பலரும் இந்த கருத்தரங்கில் பங்குபற்றவுள்ளார்கள்.

"கருத்தரங்கு முடிவில் எதிர் வரும் காலத்தில் பெண்கள் தொடர்பான திட்டமிடல்களில் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய விடயங்கள் தொடர்பாக சுட்டிக்காட்டிய கொள்கை வரைவொன்றை வடிவமைத்துக் கொள்ளவுள்ளோம்'' - என இணையத்தின் தலைவர் தேவநாயகம் தேவானந்த் தெரிவித்தார். (உ)

## பார்வையை அவதானியுங்கள்

— கண்களில் இரசாயனப் பொருள்கள், சுண்ணாம்பு போன்ற பொருள்கள் விழுந்து விட்டால், சுத்தமான ஓடும் நீரினால் 15 — 20 நிமிடங்கள் வரை கழுவுங்கள்.

— கண்களை கசக்கக் கூடாது.விரைவாக கண் வைத்தியரின் ஆலோசனை பெறவும்.



தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

## நாளை

28.07.2017
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : உத்தரம் மு.ப 9.02 வரை
திதி : பஞ்சமி மு.ப 10.44 வரை
சுபநேரம் : 6.02 – 7.32 வரை
இராகுகாலம் : 10.32 – 12.02 வரை

# மஹிந்த அரசின் கடன்களை மீளச் செலுத்த 3 லட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபா தேவை!

## அமைச்சர் மங்கள சமரவீர கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 27

மஹிந்த ராஜபக்ஷ அரசு பெற்றுக் கொண்ட கடன்களை மீளச் செலுத்த 2019 ஆம் ஆண்டு 3 லட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபா தேவைப்படுகிறது என நிதி அமைச்சர் மங்கள சமரவீர நாடாளுமன்றத்தில் தெரி வித்துள்ளார்.

வெளிநாட்டுச் செலாவணி சட்டமூலம் தொடர்பான இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மங்கள இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசு பதவியேற்ற பின்னர், சர்வதேச அரங்கிலிருந்து மனித உரிமைப் பிரச்சினை, பெரும் கடன்சுமை, ஊழல் மோசடி, குப்பைப் பிரச்சினை என பல்வேறு குப்பைமேடு களை சுமக்க வேண்டி ஏற்பட்டது.

கடந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் எவருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வில்லையென்ற குற்றச்சாட்டு காணப்படுகிறது.

இந்நிலையில், ராஜபக்ஷ குடும்பத்தில் வீடு வாங்கியமை, கறுப்புப் பணப் புழக்கமென 3.1 பில்லியன் ரூபா பெறுமதியான மோசடி குறித்த தகவல்கள் நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டு வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. எனினும் வெளிநாட்டில் மறைத்து வைக்கப்பட்ட நிதி தொடர்பான விவரங்களைப் பெற முடியாதுள்ளது.

நாட்டின் கடன்சுமைகளுக்காக இந்த வருடத்தில் அரசு 2ஆயிரத்து 85 மில்லியன் டொலர்களைச் செலுத்தியுள்ளது. இதில் 72 வீதம் கடந்த அரசின் காலத்தில் பெறப்பட்ட கடன்களுக்கான கொடுப்பனவாகும்.

எதிர்வரும் 2019 ஆம் ஆண்டாகும்போது வருடத்துக்கான கடன் மீள் கொடுப்பனவுக்காக 3.2 ட்ரில்லியன் ரூபா தேவைப்படுகிறது. இதில் 82 வீதமானவை கடந்த அரசின் காலத்தில் பெறப்பட்டவையாகும். இது வருமானத்தைவிட மூன்று மடங்கு அதிகமானதாகும்.

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டாகும் போது 3 ஆயிரத்து 752 மில்லியன் அமெரிக்க டொலர்கள்செலுத்தவேண்டியிருக்கும். எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு தலையைத் தூக்க முடியாதளவுக்கு கடன்பெறப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் எமது நிதி நிலைமைகளின் பலத்தை அறிந்து உதவி வருகிறது.இவ்வாறான நிலையிலேயே வெளிநாட்டுச் செலாவணியை தாராளமயப்படுத்தும் வகையிலான சட்டத்தை அரசு கொண்டுவந்துள்ளது.

இதனூடாக வெளிநாட்டு மூலதன முதலீடுகளை நாட்டுக்குள் கொண்டுவர முடியும். இச்சட்டத்தின் மூலம் வரி ஏய்ப்புக்கள் மற்றும் கறுப்புப் பணப் பரிமாற்றத்தை கட்டுப்படுத்த முடியும் என எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## நாடாளுமன்றத்தில் முதல் முறையாக இலத்திரனியல் முறையில் வாக்கெடுப்பு!

இலங்கை நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் முதல் முறையாக இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரத்தைப் பயன்படுத்திவாக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டு நாணயப் பரிமாற்ற சட்டம் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் திருத்தங்களுக்குப் பின்னர் நிறைவேற்றப் பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, 94 உறுப்பினர்கள் ஆதரவாகவும், 18 பேர் எதிராகவும் வாக்களித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் முதல் முறையாக இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரங்களைப் பயன்படுத்தித் தமது வாக்குகளைப் பதிவு செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரவி கருணாநாயக்க மீதான குற்றச்சாட்டுகள் என் மீது சுமத்தப்பட்டால் உடன் இராஜினமா!

## பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 27

வெளிவிவகார அமைச்சர் ரவி கருணநாயக்க மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு என் மீது சுமத்தப்பட்டிருந்தால் பதவியை ராஜினாமா செய்திருப்பேன் என பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நல்லாட்சி அரசில் கள்வர்கள் இருக்கின்றார்கள் என அம்பலப்படுத்திய போது சிலர் எனக்கு அழுத்தம் பிரயோகித்தனர். சிலர் விலகிச் செல்லுமாறும் கூறினார்கள்.

தற்போது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் யார் விலகிச் செல்லப் போகின்றார்கள் என்பது தொடர்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றேன்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் விசாரணை ஆணைக்குழுக்கள் இருக்கவில்லை.

இந்த அரசு சுயாதீனமானமுறையில்விசாரணைகளை நடத்துகின்றது. கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் பல கள்வர்கள் இருந்தார்கள். எனினும் இந்த அரசு சுயாதீனமாக முறைப்பாடு குறித்தும் விசாரணைநடத்துகின்றது.

இந்தக் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் யார் விலகிக்கொள்கின்றார்கள் என நான் அவதானித்துக்கொண்டிருக்கின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஈழ அகதிகளுக்கு ஆஸியில் குடியுரிமை இனிக் கிடையாது

கொழும்பு, ஜூலை 25

அகதி அந்தஸ்த்து கோரிய நிலையில், நவுறு மற்றும் மனுஸ் தீவில் தடுப்பில் உள்ள இலங்கையர்கள் உள்ளிட்ட அகதிகள் ஆஸ்திரேலியாவில் குடியமர்த்தப்படமாட்டார்கள் என அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இது குறித்து வெளியாகியிருந்த செய்திகளும் உண்மைக்குப் புறம்பானவை எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தடுப்பில் உள்ள ஆயிரத்து 250 அகதிகள் அமெரிக்காவில் குடியேற்றப்பட்டதன் பின்னர், எஞ்சியுள்ளவர்களுள் ஆஸ்திரேலியாவில் நெருங்கிய உறவினர்கள் இருப்பார்களாயின் அவர்கள் அந்த நாட்டில் குடியேற்றப்பட வேண்டும்.


இதன்படி, அகதிகளை ஆஸ்திரேலியாவில் குடியேற்றுவதில்லை என்ற கொள்கையை ஆஸ்திரேலியா மறுபரிசீலனை செய்யத் தீர்மானித்திருக்கிறது என்று ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் அலுவலகத்தின் உயர்ஸ்தானிகர் தெரிவித்திருந்தார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த விடயம் உண்மைக்குப் புறம்பானது என ஆஸ்திரேலியா வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், அகதிகள் ஆஸ்திரேலியாவில் குடியமர்த்தப்பட மாட்டார்கள் என்பதில் உறுதியாக இருப்பதாக ஜூலி பிஷப் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆஸ்திரேலியாவில் தடுப்பில் உள்ள புகலிடக் கோரிக்கையாளர்களில் 250 இற்கும் மேற்பட்டவர்கள் இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு பயணம் மேற்கொள்ள டிரான் அலஸுக்கு நீதிமன்றம் அனுமதி!



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ள மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மருத்துவ சிகிச்சைக்காக ஒரு மாத காலத்திற்கு சிங்கப்பூர் செல்ல கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி விகும் களுவாராச்சி நேற்று முன்தினம் அனுமதி வழங்கியுள்ளார்.

இருபது கோடி ரூபா பணத்தை மோசடி செய்தார் என டிரான் அலஸ் மீது குற்றம் சுமத்தி வழக்குத் தொடரப்பட்டுள்ளது.சுனாமி வீடமைப்பு திட்டமொன்று தொடர்பில் இவ்வாறு மோசடி இடம் பெற்றுள்ளது என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஒரு மாத காலத்திற்கு வெளிநாடுகளுக்கு செல்ல அவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற்கு நீதிமன்றம் அறிவித்துள்ளது. பத்து லட்சம் ரூபா தனிப்பட்ட பிணையின் அடிப்படையில் டிரான் அலஸின் கடவுச்சீட்டு விடுவிக்கப்படவுள்ளது. இதேவேளை, கடவுச் சீட்டை மீளவும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி நீதிமன்றில் ஒப்படைக்க வேண்டுமென நீதிமன்றம் அறிவித்துள்ளது.

# இலங்கையில் விமான சேவைகள் முற்றாகத் தடைப்படும் அபாயம்!

கொழும்பு, ஜூலை 27

இலங்கையிலிருந்து வெளி நாடுகளுக்கான விமான சேவைகள் பாதிப்படையலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மூன்று கோரிக்கைகளை முன்வைத்து கனியவள ஊழியர்கள் தொடர்ந்து பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த இரண்டு தினங்களாக ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமையால், பல்வேறு அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளன.

நாடு முழுவதும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் பெரிய வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதால் அனைத்து தரப்பினரும் பாதிப்படைந்துள்ளனர்.

தமது கோரிக்கைகளுக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வுக் கடிதம் கிடைக்கும் வரையில் பணிப் புறக்கணிப்பு கைவிடப்படாதென கனியவள ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், விமானங்களுக்கான எரிபொருள் வழங்கும் நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலை நீடிக்கும் பட்சத்தில் விமான சேவைகள் முற்றாகத் தடைப்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## மட்டக்களப்பில் போராட்டம் கைவிடப்பட்டது

கிழக்கு மாகாண சபையின் வாக்குறுதிக்கு அமைய, வேலையில்லா பட்டதாரிகளால் மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டுவந்த தொடர்போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்திலுள்ள பட்டதாரிகள் 144 பேருக்கு பரீட்சை அடிப்படையில் நியமனங்கள் பெற்றுக்கொடுக்கப்படும் என்ற கிழக்கு மாகாண சபையின் வாக்குறுதிக்கு அமையவே நேற்று முன்தினம் இந்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

நீண்ட நாள்களாக முன்னெடுக்கப்பட்டு வந்த இந்தப்போராட்டத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் துரைராஜசிங்கம் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

# 2020 ஆம் ஆண்டுவரை அரசை எவருமே அசைக்க முடியாது!

## மட்டக்களப்பில் நம்பிக்கை வெளியிட்டார் போக்குவரத்து பிரதி அமைச்சர்

மட்டக்களப்பு, ஜூலை 27

நல்லாட்சி அரசைக் கவிழ்ப்பதென்பது, எதிரணியினர் காணும் பகல் கனவாகும் என்று போக்குவரத்து பிரதி அமைச்சர் அசோக் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்புக்கு நேற்றுமுன்தினம் மாலை விஜயம் செய்த பிரதி அமைச்சர், ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட தலைமையகத்தில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவைவருமாறு:-

ஆட்சிக் கவிழ்ப்பு பற்றி பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. ஆனாலும், எதிர்வரும் 2020ஆம் ஆண்டு வரை அரசை எவராலும் அசைக்க முடியாது. அரசு மிகவும் பலம் பொருந்திய நிலையிலேயே காணப்படுகின்றது.

ஒரு காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் பலம் பொருந்திய கட்சியாகக்காணப்பட்டது. கல்குடாவில் கே.டபிள்யு



தேவநாயகம், மட்டக்களப்பில் பரீத் மீரா லெப்பை மற்றும் சின்ன லெப்பை, பட்டிருப்பில் தங்கராசா மற்றும் ராசமாணிக்கம் போன்ற பலம் பொருந்திய தலைவர்கள் இருந்துள்ளனர்.

இந்தநிலையில், மீண்டும் இந்த மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியைக்கட்டியெழுப்புவதே எமது இலக்காகும்.

இதேவேளை, மட்டக்களப்பில் நிலவும் பொதுப் போக்குவரத்துப் பிரச்சினைகளைநிவர்த்திசெய்ய மட்டக்களப்பு டிப் போக்களுக்கு 10 புதிய பஸ்கள் வழங்கப்பட உள்ளன.

அத்துடன், பயிற்சியளிக்கப்பட்ட சாரதிகள் 25 பேர் மற்றும் நடத்துநர்களும் நியமிக்கப்பட உள்ளனர்.- என்றார்.

இந்தச் சந்திப்பில், கட்சியின் மாவட்ட அமைப்பாளர் வீ.மகேஸ்வரன், காத்தான்குடி அமைப்பாளர் எம்.எம்.முஸ்தபா, தொகுதி மற்றும் மகளிர் பிரிவு அமைப்பாளர்கள் எனப் பலர்கலந்து கொண்டனர். (எ)

## கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கிழக்குப் பல்கலை மாணவர்கள்

மட்டக்களப்பு, ஜூலை 27

வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று முன்தினம் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 23 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற 'சைட்டம்' தனியார் கல்லூரிக்கு எதிரான பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்டதாக்குதல் மற்றும் மாணவர்கள் 13பேர்கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழக விவசாய பீட மாணவர் ஒன்றியத் தலைவர் மாலக தலைமையில்



நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த சிங்கள மாணவர்கள் மாத்திரம் கலந்துகொண்டனர்.

இந்தஆர்ப்பாட்டத்தின் போது 'கல்வி உரிமை கோரி போராடிய மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம்', 'சுதந்திர வைத்தியத்தின் மீது கை வைப்பதை நிறுத்து!' போன்ற பதாதைகள் ஏந்திய வண்ணம் மாணவர்கள் ஊர்வலமாகச் சென்றனர். (எ)

## பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் ஏறாவூர் உணவகங்கள் சுற்றிவளைப்பு

நுகர்வோர் சுகாதார ஏற்பாடுகளின்கீழ் ஏறாவூர் நகரில் உள்ள ஒரு சில உணவு நிலையங்கள் சுற்றி வளைக்கப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன என்று ஏறாவூர்நகரசுகாதார வைத்திய அதிகாரி பிரிவின்மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் முத்துலிங்கம் புலேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட இந்த பரிசோதனையின் போது மனித நுகர்வுக்குப் பொருத்தமில்லாத உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டதாக அவர்மேலும் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை



காலாவதியான உணவுப்பொருள்கள் அழிப்பு

வருமாறு:-

பரிசோதனையின்போது உணவு விடுதிகள் மற்றும் பேக்கரி உரிமையாளர்களுக்கு எச்சரிக்கைவிடுக்கப்பட்டது. அத்துடன், இரு வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

இதேவேளை, காலாவதியான உணவுகள், பாவனைக்கு உதவாத சுத்தமில்லாத பாத்திரங்களைப் பயன்படுத்தி தயாரித்த உணவுகள், நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பூஞ்சனம் பிடித்த பாண்கள் மற்றும் பேக்கரியில் தயாரித்த உணவுகள், கொள்கலன்கள், அச்சிடப்பட்ட பத்திரிகையைப் பயன்படுத்திப் பொதிசெய்யப்பட்டிருந்த உணவுகள் போன்றன கைப்பற்றப்பட்டன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட மனித நுகர்வுக்குப் பொருத்த மில்லாத உணவுப் பொருள்கள் அனைத்தும் பாதுகாப்பாக அழிக்கப்பட்டன.-என்றார்.(எ)

# சுயாட்சியை அடைய ஒற்றுமை அவசியம்

## வலியுறுத்துகிறார் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கருணாகரன்

மட்டக்களப்பு, ஜூலை 27

பொலிஸ், காணி அதிகாரங்களுடன் கூடிய ஒரு சுயாட்சி எமக்குத் தேவை. அந்தசுயாட்சியை அடையும் வரை நாம் அனைவரும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தம் கருணாகரன் தெரிவித்தார்.

எமக்குச் சுதந்திரம் கிடைக்கும் வரையாவது நாம் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும். தற்போது பாதுகாப்பு இருப்பதாலும் எதுவித அச்சுறுத்தல்கள் இல்லாத காரணத்தாலும் தேர்தலில் குதிப்பதற்காகப் பலரும் தயாராகுகின்றார்கள் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

வெல்லாவெளி, திக்கோடையில் ஆரம்ப வைத்திய பராமரிப்புப் பிரிவு வைத்தியசாலைக் கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம்நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவைவருமாறு:-

தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓரளவேனும் ஒரு சில அபிவிருத்திகளைச் செய்து வருகின்றது.

போர் காரணமாக தமிழ் மக்கள் பலவற்றை இழந்துள்ளார்கள். இந்த நிலையில், நாம் இன்னும் நிலையான அபிவிருத்தியை நோக்கிச் செல்லவில்லை. எமக்கு நிலையான தீர்வுத் திட்டம் வேண்டும்.

தமிழர்கள் ஏனைய இனத் தவர்களுக்கு வாக்களிக்கும் நிலைமையும், தமிழர்கள் அல்லாதவர்கள் தமிழர்களுக்குவாக்களிக்காத நிலைமையுமே கிழக்கு மாகாணத்தில் இருக்கின்றது. எனவே, எதிர்வரும் தேர்தல்களில் எமக்குரிய தேர்வு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மாத்திரம் இருக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையின் கீழ்செயற்படுபவர்களுக்கே எமது மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாக்களிக்க வேண்டும்.

எதிர்வரும் செப்ரெம்பருடன் கிழக்கு மாகாண சபையின் ஆயுட்காலம் முடிவடைகின்றது. மீண்டும் ஒரு தேர்தலைச் சந்திக்கவுள்ளோம்.



கடந்த முறை போலல்லாமல், 2012ஆம் ஆண்டில் மாகாணசபை உறுப்பினர்கள் 6 பேரைப் பெற்றுக்கொடுத்த எமது மக்கள், நடைபெறவுள்ள தேர்தலில் மாகாண சபை உறுப்பினர்கள் 8 பேரை மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பெற்றுக்கொடுக்க வேண்டும். இதற்காக வேண்டி 85 சதவீதத்துக்கும் அதிகமாக எமது மக் கள் வாக்களிக்க வேண்டும். -என்றார். (எ)

# காணாமற்போனோர் அலுவலகம் தொடர்பில் மஹிந்தவின் குற்றச்சாட்டு அடிப்படையற்றது!



## அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 27

காணாமற்போனோர் அலுவலகம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுமத்தி வரும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என சமூக நலன்புரி மற்றும் மலையக உரிமைகள் தொடர்பான அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல செத்சிறிபாயவில் அமைந்துள்ள அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

காணாமற்போனோர் அலுவலகம் எவருக்கும் தண்டனை விதிக்கும் நோக்கில் உருவாக்கப்படவில்லை.

படைவீரர்களைத் தண்டிப்பதற்காக இந்த சட்டம் உருவாக்கப்படுகின்றது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தி வருகின்றார். எனினும், அவ்வாறான எவ்வித நடவடிக்கைகளும் இடம்பெறப் போவதில்லை.

தற்போதைய அரச எந்த வொரு சந்தர்ப்பத்திலும் படைவீரர்களைக் காட்டிக் கொடுக்கப்போவதில்லை.

இந்தச் சட்டத்தின் ஊடாக காணாமற்போனவர்கள் தொடர்பிலான விவரங்களை அனைவராலும் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும், இந்தச் சட்டத்தின் மூலம் அனைத்து தரப்பினரும் நிவாரணங்களை வழங்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், காணாமற்போயுள்ள 5 ஆயிரத்து 101 இராணுவத்தினர் தொடர்பிலும் காணாமல்போனோர் தொடர்பான பணியகம் அவதானம் செலுத்தும்.

சர்வதேச ரீதியில் செயற்படும் பல மனித உரிமை அமைப்புகள் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் காணாமற்போனோர் தொடர்பில் கேள்வி எழுப்பி வருகின்றன.

இந்த நிலையில், இராணுவத்தின் கௌரவத்தைப் பாதுகாக்கும் நோக்கில் காணாமற்போனோர் தொடர்பான பணியகம் உருவாக்கப்படவுள்ளது.

காணாமல் போயுள்ள 5 ஆயிரத்து 101 இராணுவத்தினர் தொடர்பிலும் இந்தப் பணியகம் ஊடாக அவதானம் செலுத்தப்படும்.

இந்த அலுவலகம் காணாமற்போனவர்களை தேடி கண்டுபிடிக்கவும், அவர்கள் காணாமல் போனமைக்கான காரணங்களை அறியவும் செயற்படும்.

மேலும், அவர்களது உறவினர்கள் யதார்த்த ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் முகம் கொடுத்துள்ள பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கவுமே உருவாக்கப்படுகிறது.

இந்தச் செயற்பாடுகளின் போது குற்றவாளிகளுக்கு எதிரான ஆதாரங்கள் கிடைக்குமாயின், பலவந்தமாக காணாமற்போதலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க யாருக்கும் உரிமை உண்டு.

இவ்வாறான நிலையில், காணாமற்போனோர் பணியகம் தொடர்பான போலியான அச்சம் ஏற்படுத்தப்படக்கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

### தாஜுதீன் கொலை தொடர்பில் ஷிராந்தி ராஜபக்ஷவிடம் இன்று விசாரணை!

பிரபல ரகர் வீரர் வசீம் தாஜுதீன் கொலை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷ விடம் இன்று விசாரணை நடத்தப்படவுள்ளதுடன் நாளை அவரது மகன் யோசிதவிடம் நாளை விசாரணை நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளுக்காக ஷிராந்தி ராஜபக்ஷ மற்றும் யோசித ராஜபக்ஷ ஆகியோர் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தாஜுதீன்கொலை தொடர்பில் விசாரணை நடத்தி வரும்புலனாய்வுப்பிரிவினர் இவ்வாறு அறிவித்துள்ளனர்.

இதேவேளை, தாஜுதீன் கொலை தொடர்பில் வாக்குமூலமொன்றை அளிப்பதற்காக தம்மையும் மகன் யோசிதவையும் புலனாய்வுப் பிரிவினர் அழைத்துள்ளனர் என ஷிராந்தி கொழும்பு ஊடக மொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

## அனுராதபுர மருத்துவமனையில் கால் மாற்று அறுவைச் சிகிச்சை!

### தமிழ் மருத்துவரின் சாதனை



இலங்கைவரலாற்றில், முதல் முறையாக, கால் மாற்று அறுவைச்சிகிச்சை ஒன்றைச்செய்து தமிழ் மருத்துவர் ஒருவர் தலைமையிலான மருத்துவக் குழுவினர்சாதனைபடைத்துள்ளனர்.

அனுராதபுர மருத்துவமனையில் கடந்த திங்கட்கிழமை இந்த அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

மூளைச் சாவு அடைந்த ஒருவரின் காலை அகற்றி, அங்கு சிகிச்சை பெற்று வந்த மற்றொருவருக்குப் பொருத்தி, இரத்தநாள மற்றும் மாற்று அறுவைச்சிகிச்சை நிபுணரான மருத்துவ கலாநிதி ஜோயல் அருட்செல்வம் தலைமையிலான மருத்துவர்கள் குழு இந்தச் சாதனையைப் படைத்துள்ளது.

உலகம் முழுவதிலும், இது போன்ற 10இற்கும் குறைவான அறுவைச் சிகிச்சைகளே இது வரை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விபத்து ஒன்றில் ஓர் ஆண்டுக்கு முன்னர் முழங்காலுக்கு மேல் வரையான பகுதியை இழந்த 32 வயதுடைய இளைஞனுக்கே, இந்த கால் மாற்று அறுவைச்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவருக்கு மூளைச்சாவு அடைந்த 52 வயதுடைய ஒருவரின் கால் பொருத்தப்பட்டுள்ளது.

இந்த அறுவைச் சிகிச்சைக்கு, மூளைச்சாவடைந்தவரின் குடும்பத்தினரும், காலை இழந்திருந்த இளைஞனும் ஒப்புதல் அளித்திருந்தனர்.

இந்த அறுவைச்சிகிச்சையை மருத்துவர் ஜோயல் அருட்செல்வம் தலைமையில், மருத்துவர்களான அமில இரத்நாயக்க, நுவான் விஜேசிங்க, லேவன் காரியவசம் ஆகியோர் அடங்கிய குழுவினர் இணைந்து மேற்கொண்டனர்.

இத்தகைய உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைகளுக்கு, இரண்டு பேருடைய இரத்த வகைகள், தோலின் நிறம், மற்றும் ஏனைய பௌதிக காரணிகள் அனைத்தும் ஒத்துப் போக வேண்டும் என்று மருத்துவர் அருட்செல்வம் தெரிவித்துள்ளார்.

இளைஞனுக்குப்பொருத்தப்பட்ட கால் நன்றாக செயற்படத் தொடங்கியுள்ளது என்றும், அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டவர் தற்போது தேறிவருகிறார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### இந்திய – இலங்கை உடன்பாடே பிரபாகரனைத் தோற்கடிக்க உதவியது!

அமைச்சர் நவீன் திசநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, ஜுலை 27

கடந்த 1987ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இந்திய- இலங்கை சமாதான உடன்பாடே, வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தோற்கடிக்க உதவியது என்று அமைச்சர் நவீன் திசநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்திய- இலங்கை சமாதான உடன்பாடு கையெழுத்திடப்பட்டபோது, எனது தந்தை காமினி திசநாயக்க ஐ.தே.க. அரசில் அமைச்சராக இருந்தார். அப்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி அந்த உடன்பாட்டை எதிர்த்தது.

அந்த உடன்பாடு கைச்சாத்திடப்படாது போயிருந்தால், வேலுப்பிள்ளை பிரபாகரனைத் தோற்கடிக்க, இலங்கைக்கு இந்தியா ஆதரவு அளித்திருக்காது.

கடந்த 1987ஆம் ஆண்டுக்குப் பின்னர், பிரபாகரனைத் தோற்கடிப்பதற்கான இலங்கையின் நகர்வுகளுக்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

பிரபாகரனுக்கு இந்தியா உதவியிருந்தால், இலங்கையின் நிலைமைகள் மோசமாக இருந்திருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## 18 சிறுமிகளை துஷ்பிரயோகம் செய்தவர் கைது!

18 சிறுமிகளை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்தவர் என்று சந்தேகப்படும் நபர் ஒருவரை நேற்றுமுன்தினம் கொஹூவெல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பிற்கு அருகில் உள்ள நகரமொன்றின் சிறுவர் இல்லத்தில் தங்கியிருக்கும் 18 சிறுமிகளை இந்த நபர் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

சிறுவர் இல்லத்தின் பராமரிப்பாளராகக் கடமையாற்றி வரும் பெண்ணின் கணவரே இவ்வாறு பாலியல்துஷ்பிரயோகக் குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குகிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபரை கொஹூவெல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பத்து வயது முதல் பதினேழு வயது வரையிலான 18 சிறுமிகளையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து விசாரணை செய்து தகவல்களை பெற்றுக் கொண்டோம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சிறுவர் இல்லம் அமைந்துள்ள கட்டடத்தின் மேல் மாடியில் படுக்கை அறைகள் காணப்பட்ட போதிலும் அவற்றை சிறுமிகள் பயன்படுத்த இடமளிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சிறுமிகளுக்கு உரிய முறையில் உணவு கூட வழங்கப்படுவதில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சிறுமிகள் சர்வதேச பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வருகின்றனர் என்றும் சிறுமிகளை அழைத்துச் செல்லும் வாகனத்தின் சாரதியாக சந்தேக நபர் கடமையாற்றி வந்தார் எனவும் பொலிஸ் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

துஷ்பிரயோகத்திற்கு இந்த நபரின் மனைவி உதவினாரா? சிறுமிகள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளனரா? என்பவை குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

## நல்லூர் உற்சவ காலத்தின் போது

### 27 நாள்களும் மாலைவேளை இசையரங்கு

# துர்க்கா மணி மண்டபத்தில்!

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி, தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு, நல்லூர்க் கந்தனின் கொடியேற்ற நாளான நாளை 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து இடம்பெறும்.

இந்த இசையரங்கு நிகழ்வு நல்லூர் உற்சவ காலமான 27 நாள்களும் எதிர்வரும் ஓகஸ்ட் 23 ஆம் திகதி வரை நாளாந்தம் மாலை 6.45 மணி முதல் 8 மணி வரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறும். முருகன் அடியார்கள், இசை ரசிகர்கள் அனைவரும் இந்த இசையரங்கு நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு மன்ற நிர்வாகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

இதேவேளை, நல்லூர் உற்சவ காலத்தில் யாழ்.சின்மயா மிஷன் ஆன்மிக அருளுரைகள், பஜனைகளை நடத்தவுள்ளது. அந்த வரிசையில் நாளை முதல் காலை, மாலை இருவேளைகளிலும் கந்தப்பெருமான் உள்வீதி, வெளிவீதி உலாவரும்போது பஜனைகள், ஆன்மீக அருளுரைகள் என்பன இடம்பெறும். (இ)

## தினசரி ராசி பலன் 27.07.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆடித் திங்கள் 12 ஆம் நாள் சதுர்த்தித்திதி காலை 7.01 மணி வரை. பின்னர் பஞ்சமி. நட்சத்திரம்: உத்தரம் பி.இ. 4.39 மணி வரை. பின்னர் அத்தம் மரணயோகம் பி.இ. 4.39 மணி வரை. பின்னர் சுபயோகம். ராகுகாலம்: பகல் 1.50 மணி முதல் 3.24 மணி வரை. சுபநேரம் காலை 7.34 மணி முதல் 9.04 மணி வரை. பிறந்த நட்சத்திர வழிபாடு: உத்தரம்.**

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** அனுகூலமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். நீண்ட காலமாக தடைப்பட்ட காரியங்கள் தடை நீக்கி சீராகும். குடும்பத்துடன் யாத்திரை செல்வதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

**ரிஷபம்:** கவலையான நாள். பணமுடை ஏற்படும். குடும்ப உறுப்பினர்களுடன் வீணான வாக்குவாதம் விரிசலை ஏற்படுத்தும். தொழில் பார்க்கும் இடங்களில் வீண் தர்க்கம், வாக்கு வாதங்கள் ஏற்படும்.

**மிதுனம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. பயணங்களில் கவனம் தேவை. வீணான வாக்குவாதம் விரிசலை ஏற்படுத்தும். வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும்.

**கடகம்:** ஆக்கபூர்வ முன்னேற்றம் காணப்படுகின்றன. உத்தியோகத்தில் எதிர்பாராத பதவி உயர்வு பாராட்டு கிடைக்கும். குடும்பத்தில் இருந்த கருத்து வேறுபாடுகள் மறையும். வியாபாரம் தடை நீங்கி ஏற்றமடையும்.

**சிம்மம்:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் பல வழிகளாலும் வந்து சேரும். சிலருக்கு தொழிலில் இருந்த தேக்க நிலை மாறி அதிர்ஷ்டம் வந்து சேரும்.

**கன்னி:** சஞ்சலமான நாள். பணவரவு குறையும். ஆடம்பரச் செலவுகளால் அவதிப்பட நேரும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளுவும், அதிகாரிகளின் கெடுபிடிகளும் அதிகரிக்கும்.

**துலாம்:** நன்மையான நாள். குடும்ப ஒற்றுமை மேம்படும். வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும். சுய தொழில் முன்னேற்றமடையும். சமூகத்தில் செல்வாக்கு, அந்தஸ்து உயரும்.

**விருச்சிகம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. எண்ணிய காரியங்கள் தடை தாமதத்துடன் நிறைவேறும். வழக்கு விவகாரங்கள் தாமதமடையும். யாருக்கும் பிணைபோவதைத்தவிர்க்கவும்.

**தனுசு:** மேன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலமும் நிம்மதியும் நிறையும். நட்பு வட்டாரத்தில் மதிப்புக் கூடும்.

**மகரம்:** தீமையான நாள். உத்தியோகத்தில் அலைச்சல்களும், பிரயாசையும் அதிகரிக்கும். நண்பர்களுடன் அளவுடன் பழகுதல் நன்று. கொடுக்கல், வாங்கலில் சிக்கல்கள் உண்டாகும்.

**கும்பம்:** விருத்தியான நாள். வருமானம் உயர்வடையும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். கொடுக்கல், வாங்கல் சுமுகமாக நடக்கும்.

**மீனம்:** மகிழ்ச்சியான நாள். குடும்ப மகிழ்ச்சி நீடிக்கும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும். திருமண காரியங்கள் ஒப்பேறும்.

**சந்திராட்டமநாள்: உத்தராடம் 2, 3, 4 திருவோணம், அவிட்டம், சதயம் பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்களில் உதயமானோர் இன்று சுப கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும்.**

## வெள்ளை வான் விவகாரம்:

# இரு வாரங்களுள் விசாரணை அறிக்கையைச் சமர்ப்பிக்குக!

### பொலிஸ்மா அதிபருக்கு சட்டம், ஒழுங்கு அமைச்சர் உத்தரவு



மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பட்டாளர் ரயன் ஜயதிலக்கவை கைது செய்வதற்காக பொலிஸார் கையாண்ட வழி முறை குறித்து விசாரணை நடத்தி இன்னும் இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு தான் பொலிஸ்மா அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார் என்று சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கருஜய சூரிய தலைமையில் கூடியது. தினப்பணிகள் முடிவடைந்தபின்னர், நாடாளுமன்ற நிலையியல் கட்டளையின் 23/2இன் கீழ் தினேஷ் குணவர்தன எம்.பி. எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

''சைட்டம் விவகாரம் தொடர்பில் தொழிற்றுறை சார் நிபுணர்களுக்கிடையிலான கூட்டம் கடந்த 20ஆம் திகதி நடைபெற்றது. சைட்டத்துக்கு எதிரான அமைப்பும் பங்கேற்றிருந்தது. அந்தக் கூட்டம் முடிவடைந்த பின்னர், வெள்ளை வானில் வந்த குழுவொன்று மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் ரயன் ஜயதிலக்கவை கடத்திச் செல்வதற்கு முற்பட்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பில் அரசு எடுத்துள்ளநடவடிக்கைஎன்ன? விசாரணை எந்தக் கட்டத்தில் இருக்கின்றது?'' என்பதே தினேஷ் எம்.பி.தொடுத்த கேள்விகளின் சுருக்கமாகும்.

இவற்றுக்குப் பதிலளித்த அமைச்சர் சாகல ரத்னாயக்க அது வெள்ளை வான் அல்ல. பொலிஸ் திணைக்களத்துக்குரிய வாகனமாகும். சுகாதார அமைச்சுக்குள் நுழைந்து அரச சொத்துகளுக்கு சேதம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டுக்காக மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தின்ஏற்பாட்டாளருக்கு நீதி மன்றத்தால் பிடிவிறாந்து பிறப் பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே கூட்டம் நடைபெறும் இடத்தில் அவர் இருக்கின்றார் என்பதை அறிந்த பொலிஸார் அங்கு சென்றுள்ளனர். 3 பொலிஸ் அதிகாரிகள் சீருடையில் சென்றிருந்தனர். 9பேர்சிவில் உடையில் சென்றிருந்தனர். எனினும், அவர்களிடம் அடையாள அட்டை இருந்தது. வாகனத்தைச் செலுத்திய பொலிஸ் சாரதியும் சீருடை அணிந்திருந்தார்.

எனினும், கைதுசெய்வதற்காக உரிய நடைமுறை பின்பற்றப்பட்டதா, அன்றைய தினம் என்ன நடந்தது என்பது பற்றி விசாரணை நடத்துமாறு பொலிஸ்மா அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளேன். இன்னும் இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை கிடைக்கப் பெறும். அதன்பின்னர் அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

மேற்படி சம்பவத்தின்போது ஏதேனும்தவறுகள்இடம்பெற்றிருக்கும் பட்சத்தில் அதற்காக அரசின் சார்பில் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்'' என்றார். (ஐ-க-2)

# முள்ளிவாய்க்காலில் கடற்படையினர் வசமுள்ள காணிகளிலுள்ள கால்நடைகளை விடுவியுங்கள்!

### கோரிக்கை விடுக்கின்றனர் உரிமையாளர்கள்

முள்ளிவாய்க்கால் பகுதியில் கடற்படையினர் வசமுள்ள 618 ஏக்கர் மக்கள் காணிகளில் உள்ள கால்நடைகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதன் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் இறுதிப்போர் இடம்பெற்ற பகுதியான முள்ளிவாய்க்கால் பகுதியில் 618 ஏக்கர் வரையான நிலப்பரப்பு இன்று வரைக்கும் கடற்படையினர் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றது.

இதில் 390 ஏக்கர் காணிகள் பொதுமக்களுக்குச் சொந்தமானவையாகவும், ஏனையவை அரச காணிகளாகவும் காணப்படுகின்றன.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கையில்- 'இவ்வாறு கடற்படையினர் கட்டுப்பாட்டிலுள்ள 618 ஏக்கர் காணிகளிலும், போரில் காணிகளை கைவிட்டுச் சென்றவர்களுக்குச் சொந்தமான கால்நடைகள் காணப்படுகின்றன.

அவற்றை விடுவித்துத் தருமாறு நாங்கள் தொடர்ச்சியாக போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

இதேவேளை, இன்றுள்ள வறட்சி மற்றும் வாழ்வாதார நெருக்கடி என்பவற்றின் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம். அதிலும் குறிப்பாக அந்தப் பகுதிகளில் உள்ள கால்நடைகள் பல்வேறு விதங்களில் கடத்தப்படுகின்றன.

எனவே, படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற கால்நடைகளை விடுவித்துத் தர வேண்டும்'. என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

# யாழ்ப்பாணத்தில் தேசிய மீலாத் விழா 2017 ஆயத்தப் பணிகள் குறித்து கலந்துரையாடல்



தேசிய மீலாத் விழா 2017, இம்முறை யாழ்.மாவட்டத்தில் நடைபெறவுள்ளதாக முஸ்லிம் சமய கலாசார விவகார அமைச்சர் எம்.எச்.எம்.ஹலீம் தெரிவித்துள்ளார். அதன் பிரகாரம் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.ஆர்.எம்.மலிக் தலைமையில் யாழ்.ஒஸ்மானியா கல்லூரியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது. இதில் யாழ். அரச அதிபர், கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதிநிதிகள் மாவட்ட அரச அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மீலாத் விழாவின் மூலம் பள்ளிவாசல்கள், மதுரஸாக்கள், அஹதிய்யா பாடசாலைகள், மீள்குடியேறி வாழும் மக்களின் பிரச்சினைகளுக்குத்தீர்வுகளை பெற்றுக்கொடுத்தல், வீட்டுப் பிரச்சினை, காணிப்பிரச்சினைகளை இனம் கண்டு அதற்கான உகந்த வழிமுறைகளைக் கையாளுதல் அத்துடன் இன ஐக்கியத்திற்கான புரிந்துணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல் இவ் விழாவின் முக்கிய நோக்கமாகும். இவ்விழா எதிர்வரும் டிசெம்பர் 9 ஆம் திகதி யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியிலும், ஜின்னா மைதானத்திலும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-19)

# காணாமற்போனோர் அலுவலகத்தை நம்ப அவர்களின் உறவுகள் தயாராக இல்லை!

## நாடாளுமன்றத்தில் சரா எம்.பி.எடுத்துரைப்பு



காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பாக நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு வேளையில் விசேட கவனவீர்ப்புப் பிரேரணை ஒன்றை எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் முன்மொழிந்து உரையாற்றினார். அந்த விடயத்தின் மீது தமிழ்க் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆற்றிய உரையின் விவரம் இங்கு பிரசுரமாகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் சமர்பிக்கப்பட்டுள்ள சபை ஒத்திவைப்புப் பிரேரணையில் உரையாற்றுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறுகின்றேன்.

காணாமற் போனோர் தொர்பான அலுவலகத்தை நிறுவுவதற்கான திருத்தச் சட்டவரைவு மீதான விவாதத்தில் முன்னர் உரையாற்றிய போது முக்கிய விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தேன். அதை திரும்பவும் இங்கே நினைவுபடுத்துவது பொருத்தமானது. 'காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விடயம் விரைந்து தீர்க்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்க முடியாது. ஆனால் இதில் பாதிக்கப்பட்டவர் கள், நீங்கள் நிறுவும் இந்த அலுவலகத்தை ஏற்றுக் கொள்வதற்குத் தயாரில்லை. ஆகவே, இந்த அலுவலகம் நிறுவப்பட்டு, அதன் நோக்கம் வெற்றியடைய வேண்டுமானால், காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவுகள் விரும்பும் வகையிலான விசாரணைப் பொறிமுறை உள்ளடக்கப்பட வேண்டும் என்று இந்தச் சபையில் கோருகின்றேன்' என உரை யாற்றியிருந்தேன்.

### எமது மக்களால் நிராகரிப்பு

காணாமற்போனோர் தொடர் பான அலுவலகத்தை நிறுவும் வர்த்தமானி அறிவித்தலில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன கையெழுத்திட்டுள்ளார். 2016ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நாடாளுமன்றத்துக்கு வந்த சட்டவரைவு மீது இந்த ஆண்டு ஜூலை மாதமே விடயம் முற்றுப் பெற்றிருக்கின்றது. அதனை வரவேற்கின்றேன்.

அதேவேளை, நான் மேலே கூறியவாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்கள் இந்த அலுவலகத்தை நிராகரித்திருக்கின்றார்கள். பன்னாட் டுச் சமூகத்தை ஏமாற்றவே இந்த அலுவலகத்தை அரசு செயற் படுத்த முனைவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்கள்.

தமது அன்புக்குரியவர்களைத் தேடும் அவர்களது குற்றச்சாட்டுக்களை இலகுவில் புறந் தள்ளி விடமுடியாது. சிறிலங்காப் பேரினவாத அரசு எமக்கு, எமது மக்களுக்கு கடந்த காலங் களில் கற்றுத் தந்த படிப்பினையின் காரணமாகவே, காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்கள் இந்த அலுவலகத்தை நிராகரித்திருக்கின்றார்கள்.

### கழுத்தை இறுகும்போது ஆணைக்குழுவை அமைப்பீர்கள்

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயம் சிறிலங்கா அரசின் கழுத்தை எப்போது இறுக்குகின்றதோ, அப்போதெல்லாம் ஜனாதிபதி ஆணைக்குழுக்களை நிறுவி விசாரணை என்ற பெயரில் இழுத் தடிப்புக்களைச் செய்தார்கள். எமது மக்கள் எந்த ஆணைக் குழுக்கள் முன்னால் தமது சோகக் கதையை திரும்பத் திரும்பச் சொல்லுவது. சரி எந்தவோர் ஆணைக் குழு அவர்களது கதைகளைக் கேட்டு அவர் களுக்கு நியாயங்களைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றதா ? இங்கிருக்கின்ற அரச தரப்புப் பிரதிநிதிகளே உங்களால் இதற்குப் பதில் சொல்ல முடியுமா ?

எங்கள் மக்கள் உங்கள் ஆணைக் குழுக்கள் மீதும், உங்கள் விசாரணையாளர்கள் மீதும் நம்பிக்கை இழந்து விட்டார்கள். அவர்கள் நம்பிக்கையை கட்டியெழுப்ப நீங்கள் என்ன செய்தீர்கள்? அவர்கள் உங்களை நம்பாமல் இருப்பதைவளர்க்கும்வகையிலேயே உங்களின் செயற்பாடுகள் அமைந்திருந் தமையை நான் இங்கே சுட்டிக்காட்டி யாக வேண்டும்.

### முன்னைய தீர்ப்புகள்

திருகோணமலை மாவட்டத்தின் குமாரபுரம் கொலை வழக்கில் அப்பாவித் தமிழ் மக்கள் 1996ஆம் ஆண்டு கொல்லப்பட்டிருந்தார்கள். சந்தேக நபர்களாக சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்யப்பட்டிருந்தார்கள். கடந்த ஆண்டு அந்த வழக்கில், சிங்கள ஜூரிமார்களை உள்ளடக்கிய நீதித்துறை எப்படித் தீர்ப்பு வழங்கியது, 20ஆண்டுகளின் பின்னராவது நீதி கிடைக்கும் என்றிருந்த எங்கள் மக்கள் ஏமாற்றப்பட்டார்கள். சிறிலங்கா இராணுவத்தினர் சுத்தவாளிகளாக விடுவிக்கப்பட்டார்கள்.

எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவி ராஜ் கொலை வழக்கில் என்ன நடந்தது ? கைது செய்யப்பட்டவர்கள் உங்கள் நீதித்துறையால் விடுவிக்கப்பட்டார்கள்.

நான் இங்கே சுட்டிக்காட்டியமை ஓரிரண்டு விடயங்கள் மாத் திரமே. இதைப் போன்ற பல சம் பவங்கள் இருக்கின்றன. நான் கூறிய இரண்டு விடயங்களும், தற்போது ஆட்சி செய்து கொண் டிருக்கின்ற கூட்டு அரசின் காலத்திலேயே நடந்தது.

இப்படி உங்கள் விசாரணை கள் மீதும், நீதித்துறை மீதும் நம்பிக்கை இழக்கச் செய்யும் வகையில் நீங்களே நடந்து கொண்ட மையால்தான், எமது மக்கள் காணா மல்போனோர் அலுவலகத்தையும் நிராகரித்திருக்கிறார்கள். அவர்கள் பன்னாட்டு விசாரணையைக் கோருகின்றனர். அவர் களின் கோரிக்கை நியாயமானது என்பதை நான் இங்கே பதிவு செய்கின்றேன்.

### பாதிப்புற்றோர் நலனில் கரிசனையே இல்லை

காணாமல்போனோர் அலுவலகத்தின் ஊடாக வழக்குத் தாக்கல் செய்ய முடியாது. ஆனால் வழக்குத்தாக்கல் செய்யக் கூடிய வகையில், சட்டவரைவு ஆரம்பத்தில் இருந்ததையும் பின்னர் அது நீக்கப்பட்டது என்பதையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அதாவது, தனித்து சிறிலங்காப் படை வீரர்கள் உள் ளிட்ட உங்களின் நலன்களை மாத்திரமே கருத்தில் கொள்கின்றீர்கள். பாதிக்கப்பட்டவர்களது எந்தக் கரிசனைகளையும் நீங்கள் கவனத்தில் எடுக்கவில்லை.

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதலை குற்றமாக்கும் சட்டவரைவு நிறைவேற்றப்பட்ட பின்னர், அதனூடாக வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகள் இருக்கின்றன என நீங்கள் கூறக் கூடும்.

ஆனால், பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதலை குற்றமாக்கும் சட்டவரைவு மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் இந்த மாதம் 5ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்பட இருந்தது. இந்தச் சட்டவரைவை நிறைவேற்ற வேண்டாம் என்று பௌத்த மதத் தின் உயர் பீடங்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்தன. இந்தப் பின்னணியில் மேற்படி சட்டம் விவாவதத்திற்கு எடுத்துக் கொள் ளப்படவில்லை. எப்போது எடுக்கப்படும் என்பதும் இதுவரை தெரியாது.

### மஹிந்தவின் பிரசாரம்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தச் சட்டம் சிறிலங்காப் படையினருக்கு எதி ரான சட்டம் என்று திரும்பத் திரும்பக் கூறி வருகின்றார். அவருடன் சேர்ந்தவர்களும் அவ்வாறுதான் கூறுகின்றனர். சிறிலங்காப் படையினருக்கு இந்தச் சட்டம் எந்த வகையில் எதிரானது என்பதை அவர்கள் இதுவரை வெளிப் படுத்தவில்லை.

சிறிலங்காப் படையினர் பல வந்தமாகக் கடத்தலில் ஈடுபட்டிருப்பார்களானால், இந்தச் சட்டத்தின் ஊடாக அவர்கள் சிக் குப்படுவார்கள். முன்னைய ஆட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ கூறுகின்றமையின் அடிப்படையில், சிறிலங்காப் படையினர் சட்டத்துக்கு முரணான வகையில் கடத்தல்களில் ஈடுபட் டிருக்கின்றார்கள். பலவந்தமாக அப்பாவிகளைக் கடத்தியிருக்கின் றார்கள். அதனாலேயே, இந்தச் சட்டத்துக்கு எதிராக அவர் குரல் கொடுக்கின்றார்.

சட்டத்துக்கு முரணான வகையில் கடத்தல்களை மேற்கொண்ட சிறிலங்காப் படையினரைப் பாதுகாக்க முன்னாள் ஆட்சியாளர் மஹிந்த மாத்திரமல்லர் தற்போதைய உங்களின் அரசும் முனைப்புக் காட்டுகின்றது. அதனால் தான், காணாமல் ஆக்கப்பட் டோர் விடயத்தில் நீங்கள் அசிரத் தையாகவும், அசமந்தமாகவும் செயற்படுகின்றீர்கள்.

படையினரைக் காப்பாற்று வதற்காக, பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்களை நீங்கள் உள்வாங்குகின்றீர்கள் இல்லை. பாதிக்கப்பட்ட மக்களின், மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களை மிதிக்கின்றீர்கள். நீங்கள் இவ் வாறு உங்கள் படையினரை காப்பாற்றுவதை நோக்காகக் கொண்டே செயற்படுவதன் காரணமாகத் தான் எமது மக்கள் உங்களின் எந்தப் பொறிமுறையையும் நம்ப – ஏற்க – மறுக்கின்றார்கள்.

### மக்கள் போராட்டம்

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 150 நாள்களைக் கடந்தும் போராடிக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களை நீங்கள் இந்த நாட்டின் பிரஜைகளாகக் கூடக் கணக்கெடுக்கவில்லை என்பது அவர்களின் போராட்ட நாள்களின் நீட்சி எடுத்தியம்புகின்றது.

சிறிலங்காப் படையினரிடம் கையளித்த தங்களது பிள்ளைகள் எங்கே என்ற கேள்வியை எட்டு வருடங்களாகக் கேட்டு வருகின்றார்கள். அந்தக் கேள்விக்கான பதிலை நீங்கள் இதயசுத்தியுடன் வழங்காத வரை காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பிரச்சினை தீராது. காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டதும், தலையிடியான இந்த விவகாரம் முடிந்துவிட்டது என்று நீங்கள் நினைக்க வேண்டாம்.

### நம்ப நடவுங்கள்

எங்கள் மக்களின் பிரச்சினை, அவர்கள் விரும்பிய வடிவிலேயே தீர்க்கப்பட வேண்டும் என்று நாங்கள் இங்கே எடுத்தியம்புகின்றமை உங்களில் பலருக்கு எரிச்சலூட்டக் கூடியதாக இருக்கும். அதற்காக நாம் பேசாமல் இருக்க முடியாது.

இப்போதும் கூட காலம் கடந்து விடவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்களின் பிரச்சினையை இந்த அரசு தீர்த்து வைக்க முடியும். நீங்கள் நிறுவ இருக்கும் காணாமல்போனோர் அலுவலகத்தை மக்கள் நம்பும்படியாக உங்களின் செயற்பாடுகள் அமைய வேண் டும்.

சிங்கள மக்களைத் திருப்திப் படுத்த– உங்கள் வாக்கு வங்கியைத் தக்க வைப்பதற்காக–சிறிலங்கா படையினரை – தவறிழைத்தவர்களை – பாதுகாக்க முனைய வேண்டாம். அந்த மனோநிலை அரசுக்கு வர வேண்டும். அவ்வாறான மனநிலை அரசுக்கு வந்ததை எங்கள் மக்கள் உணர வேண்டும். அப்போதுதான் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் இதயசுத்தியுடன் கையாளப்படும். இல்லாவிடின் தசாப்தங்கள் கடந்தாலும் இந்த விவகாரத்தைத் தீர்க்க முடியாது.



# ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...? 249

பொன்.வேணு கிருஷ்ணா

**"ஒற்றை துருவமுனை தருணம்"**

அதிகரித்து வரும் போர் அச்சுறுத்தலும் மற்றும் இரண்டாம் உலகப் போரிலிருந்து மேலாதிக்க ஏகாதிபத்திய சக்தியாக அமெரிக்கா உருவெடுத்த பின்னர் உருவாக்கப்பட்ட சர்வதேச அமைப்புகளின் உடைவும், ஸ்ராலினிச அதிகாரத்துவத்தால் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டதற்குப் பிந்தைய கால் நூற்றாண்டில் முதிர்ச்சி அடைந்துள்ள நிகழ்ச்சிப்போக்குகளின் இறுதி விளைவாகும்.

அமெரிக்க மூலோபாயவாதிகள் எதை "ஒற்றை துருவமுனை தருணம்" என்று குறிப்பிட்டார்களோ அதன் எழுச்சி, தொடர்ச்சியான பல ஏகாதிபத்திய போர்கள் மற்றும் தலையீடுகளுக்கு களம் அமைத்தது, இதில் அமெரிக்க ஏகாதிபத்தியம் உலக பொருளாதாரத்தில் அதன் அந்தஸ்து வீழ்ச்சியைத் தடுத்து சமநிலைப்படுத்திக் கொள்ள, அதன் இராணுவ அனுகூலங்களை சாதகமாக்கிக் கொண்டது.

இந்த போர்கள் ஈராக், யூகோஸ்லாவியா, ஆப்கானிஸ்தான், லிபியா, சிரியா, உக்ரேன் மற்றும் ஏனைய நாடுகளைச் சீரழித்து, மில்லியன் கணக்கானவர்களைக் கொன்று குவித்து, இரண்டாம் உலக போருக்குப் பிந்தைய மிகப்பெரும் அகதிகள் நெருக்கடியை கட்டவிழ்த்துவிட்டதுடன், இறுதியில் அவை அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு நல்வாய்ப்புகளை வழங்குவதிலும் தோல்வியடைந்தன.

இப்போதோ இந்நெருக்கடி ஒரு புதிய கட்டத்தை எட்டியுள்ளது, இதில் வொஷிங்டனின் உலகளாவிய போட்டியாளர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலகளாவிய மேலாதிக்கத்திற்கு சவால்விடுத்து வருகின்றனர்.

அதிகரித்துவரும் இந்த அபாயகரமான அபிவிருத்திகளின் அடியில் இருப்பது என்னவென்றால், ஒருபுறம், பூகோளரீதியில் ஒருங்கிணைந்த மற்றும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ள பொருளாதாரத்திற்கும் மற்றும் அது எதிர்விரோத தேசிய அரசுகளாக பிளவுபட்டிருப்பதற்கும் இடையிலானதும், மறுபுறம், பூகோளமயப்பட்ட உற்பத்தியின் சமூகமயப்பட்ட தன்மைக்கும் மற்றும் உற்பத்தி கருவிகளின் தனி சொத்துடைமை மூலமாக ஆளும் முதலாளித்துவ வர்க்கம் தனிநபர் இலாபங்களைக் குவித்துக் கொள்வதற்காக அதை அடிபணிய வைத்திருப்பதற்கும் இடையிலான உலக முதலாளித்துவ அமைப்புமுறையின் அடிப்படை



முரண்பாடுகளாகும்.

மனித இனத்தையே அழிக்க முன்நிற்கும் ஒரு புதிய உலக போரைக் கொண்டு இத்தகைய முரண்பாடுகளை தீர்ப்பது மட்டுமே, ஏகாதிபத்தியத்தின் ஒரே வழிவகையாக உள்ளது. எவ்வாறிருப்பினும் இதே முரண்பாடுகள் சர்வதேச அளவில் தொழிலாள வர்க்கத்தின் ஒரு புரட்சிகர மேலெழுச்சிக்கும் அடித்தளங்களை அமைத்து வருகின்றன.

நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு (ICFI), "சோசலிசமும் மற்றும் போருக்கு எதிரான போராட்டமும்" என்ற அதன் 2016 அறிக்கையில் குறிப்பிட்டவாறு:

"நடப்பு உலக நிலைமைகளில் இருந்து எழுகின்ற மாபெரும் வரலாற்றுக் கேள்விகளை பின்வருமாறு சூத்திரப் படுத்தலாம்: உலக முதலாளித்துவத்தின் நெருக்கடி எவ்வாறு தீர்க்கப்படப் போகிறது? அமைப்புமுறையை உலுக்கும் முரண்பாடுகள் உலகப் போரில் போய் முடியுமா அல்லது உலக சோசலிசப் புரட்சியில் முடியுமா? எதிர்காலம் பாசிசத்துக்கும், அணுஆயுதப் போருக்கும், திரும்பவியலாமல் காட்டுமிராண்டித்தனத்திற்குள் வீழ்வதற்கும் இட்டுச் செல்லப் போகிறதா? அல்லது சர்வதேச தொழிலாள வர்க்கம் புரட்சியின் பாதையை கையிலெடுத்து, முதலாளித்துவ அமைப்புமுறையை தூக்கியெறிந்து, பின் உலகை சோசலிச அடித்தளங்களின் மீது மறுகட்டுமானம்



செய்யப் போகிறதா? இவைதான் மனித குலம் முகம்கொடுக்கும் உண்மையான மாற்றீடுகளாகும்."

### செல்வந்த அடுக்குகளின் ஹம்பேர்க் கூட்டமும் மக்களின் எதிர்ப்பும்

2017 ஜூலை 7-8 இல் ஜேர்மனியின் ஹம்பேர்க்கில் நடந்த ஜி20 நாடுகளின் உச்சிமாநாட்டு நிகழ்வுகள், சமகாலத்திய முதலாளித்துவ சமூகத்தைக் கிழித்துக் கொண்டிருக்கும் இரண்டு அடிப்படை மோதல்களை அம்பலப்படுத்துகின்றன. அங்கே வங்கியாளர்கள் மற்றும் பில்லியனர்களின் போட்டி தேசிய குழுக்களுக்கு இடையிலான மோதல் தீவிரமடைந்து வருவதுடன், அவர்கள் அனைவருக்கும் எதிராக சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் அதிகரித்து வரும் போராட்டமும் உள்ளது.

உலகின் 20 முன்னணி பொருளாதாரங்களின் ஆட்சியாளர்கள், தொழிலாளர்களிடம் இருந்து கொள்ளையடித்ததைப் பங்கு போடுவதில் அவர்களுக்கிடையே சண்டையிடுவதற்காக ஹம்பேர்க்கில் ஒன்றுகூடி இருந்தாலும், வாழ்க்கைத் தரங்கள் மற்றும் ஜனநாயக உரிமைகள் மீதான அவர்களது தாக்குதல்களுக்கு எதிரான மக்களின் எதிர்ப்பை வன்முறையாக ஒடுக்குவதில் அவர்கள் பூரணமாக ஒன்றிணைந்திருந்தனர்.

8 July 2017இற்கு முந்திய வியாழனன்று, "முதலாளித்துவத்தை நிறுத்து" போராட்டத்தில் 100,000 பேர் ஒன்றுகூடத் தொடங்கியதும், பொலிஸ் 12,000 பேர் இருந்த ஒரு மத்திய அணிவகுப்பு மீது கடுமையாக தாக்குதல் நடத்தியதுடன், பலரைக் கைது செய்தது மற்றும் மற்றவர்களைக் கண்ணீர் புகைகுண்டு, மிளகுப்பொடி தெளிப்பான், இரப்பர் தோட்டாக்கள் மற்றும் நீர்பீய்ச்சிகளைக் கொண்டு தாக்கியது.

குறைந்தபட்சம் 11 போராட்டக்காரர்கள் பலமான காயங்களுடன் மருத்துமனையில் சேர்க்கப்பட்டனர், அதேவேளையில் தானியங்கி ஆயுதங்களுடன் SWAT குழு ரோந்து செல்ல




பத்தாயிரக் கணக்கான பொலிஸ் ஹம்பேர்க்கை யுத்தக்களமாக மாற்றியது. சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து மற்றும் பிரான்சில் இருந்தெல்லாம் பயணித்து வந்திருந்த போராட்டக்காரர்களை "இடது தீவிரவாதிகள்" என்று முத்திரை குத்தி, ஜேர்மன் எல்லையிலேயே அதிகாரிகள் திருப்பி அனுப்பினர்.

**ஜேர்மனியிலும் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் எங்கிலுமான அதிகாரிகள் சமூக கோபத்தின் அதிகரிப்பு மற்றும் இளைஞர்களிடையே அதிகரித்து வரும் புரட்சிகர மனோபாவத்தைக் கண்டு அஞ்சுகின்றனர். காட்டுமிராண்டித்தனமான ஒடுக்குமுறை அண்மையில் தீவிரப்படுத்தப்பட்டது.**

பொலிஸ் அதிகாரிகள், கலகக்காரர்களின் நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டி பொலிஸ் அரசு நடவடிக்கைகளை நியாயப்படுத்தினர். ஆனால், அரசியல் அமைப்புகள் மீதான ஜேர்மன் பொலிஸ் முகமைகளின் ஊடுருவல்கள் நன்கு ஆவணப்படுத்தப்பட்டவை என்பதால், அங்கே ஏற்பட்ட எந்தவொரு கலகமும், ஒரு பெரிய படைபலத்தைக் காட்டுவதற்கான ஒரு போலிக்காரணத்தை உருவாக்கப் பணிக்கப்பட்ட பொலிஸ் தூண்டுதல்தாரிகளால் உண்டாக்கப் பட்டது என்று ஒருவரால் நியாயமாக சிந்திக்க முடியும். போராட்டக்காரர்களில் பெரும்பான்மையினர் அமைதியாகவே இருந்தனர்.

ஜேர்மனியிலும் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் எங்கிலுமான அதிகாரிகள் சமூக கோபத்தின் அதிகரிப்பு மற்றும் இளைஞர்களிடையே அதிகரித்து வரும் புரட்சிகர மனோபாவத்தைக் கண்டு அஞ்சுகின்றனர். ஐரோப்பிய இளைஞர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள், அவர்கள் அரசியல் அமைப்பு முறைக்கு எதிரான "மிகப் பரந்த எழுச்சிகளில்" இணைய இருப்பதாக இந்தாண்டு ஐரோப்பிய ஒன்றியம் நடத்திய கருத்துக்கணிப்பில் தெரிவித்தனர். ஹம்பேர்க்கில் இப்போது ஒன்றுகூடும் போராட்டக்காரர்களை பீதியூட்டுவது மட்டும் ஜேர்மன் அதிகாரிகளின் நோக்கமல்ல, முதலாளித்துவ அமைப்பு முறையை எதிர்த்து உலகெங்கிலும் விரிவடைந்து வரும் சாமானிய மக்களைப் பீதியூட்டுவதே அவர்களின் நோக்கமாக உள்ளது.

ஹம்பேர்க்கில் பொலிஸ் நடவடிக்கை, ட்ரம்ப் நிர்வாகத்திற்கு எதிரான ஐரோப்பிய ஒன்றியம், பேர்லின் மற்றும் பாரிஸின் எதிர்ப்பில் உள்ள அரசியல் மற்றும் வர்க்க உள்ளடக்கத்தை அம்பலப்படுத்துகிறது. ஐரோப்பிய தலைவர்கள் ஜனநாயகம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு அறிவொளி சார்ந்த தேசியவாத-எதிர்ப்பு ஆதரவாளர்களாக காட்டிக் கொள்கின்ற போதிலும், சமூக சமத்துவமின்மையை எதிர்க்கும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது ஒரு கடுமையான தாக்குதலை அவர்கள் மேற்பார்வையிடுகின்றனர். அடிமட்டத்திலிருந்து எழும் எதிர்ப்பை ஒடுக்குவதே, ஏகாதிபத்திய மேலாதிக்கத்திற்கான அமெரிக்கசவாலை எதிர்கொள்வதற்கான அவர்களது முயற்சியின் மையத்தில் உள்ளது.

(கேள்வி தொடரும்)

# சுதந்திர வேட்கை



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

46




## அத்தியாயம் - III

## உறவில் நிகழ்ந்த பாதிப்புகள்

பாலாவும் சரி, பிரபாகரனும் சரி, இதனால் கொதிப்படைந்தார்கள். தாம் அவமானப்படுத்தப்பட்டதாக அவர்கள் கருதினார்கள். தமிழ் நாடும் புதுடில்லியும் வேண்டுமென்றே தம்மை அச்சுறுத்தி அவமானப்படுத்துவதாக எண்ணினார்கள். மாநில மற்றும் மத்திய அரச அதிகாரபீடங்களுக்குத் தெரியாமல் இத்தகைய பெரும் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பதை நம்ப, நாம் எவரும் முட்டாள்களல்லர். விடுதலைப் புலிகளுக்கும் புதுடில்லிக்கும் இடையே அரசியல் வேறுபாடு அடிக்கடி தலை தூக்கிய போதிலும், இத்தகைய காவல் துறை கடும் நடவடிக்கை இடம் பெற்றிருக்கக் கூடாது என்பதே விடுதலைப் புலிகளின் கருத்தாகும். பாதுகாப்புப் பதகளிப்பு ஏதாவது இருந்திருந்தால், அதைப்பற்றி விவாதித்து, பொருத்தமான ஏற்பாடுகளைச் செய்திருக்கலாம். விடுதலைப் புலிகளுக்கும் புலித் தலைவர்களுக்கும் எதிரான கடும் நடவடிக்கை, பாலாவையோ பிரபாகரனையோ காவல் துறை புலனாய்வுப் பிரிவினர் ஆழமாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதையே சுட்டிக் காட்டியது. யாழ்ப்பாணத்து உளப்பாங்கு பற்றித் தமிழ் நாடு காவல் துறை ஆழமாக அறிந்திருந்தால், தாம் புரிந்த அவமரியாதை பாலாவையும் பிரபாகரனையும் அச்சுறுத்திப் பணிய வைப்பதற்குப் பதிலாக, அவர்களை சீற்றத்துக்கு உள்ளாக்கி இருந்தது என்பதை அவர்கள் உணர்ந்திருப்பார்கள். உண்மையில் தம் சுயமரியாதையும் சுயகௌரவமும் கண்ணியமும் ஊறுபடுத்தப்பட்டன என அவர்கள் கருதி ஆத்திரம் அடைந்திருந்தார்கள். அவர்களுடைய எதிர்ப்பு உணர்வும் மேலோங்கி இருந்தது. இந்திய அரசின் கடும் நடவடிக்கை, இவர்கள் இருவருடைய சந்தேகங்கள் பலவற்றை உறுதிப்படுத்தின. தமிழ் மக்கள் மட்டில் இந்தியாவின் கரிசனை எவ்வளவு என்பதையும் அவர்களுக்கு உணர்த்தின. புதுடில்லியின் உள்ளார்ந்த எண்ணங்களையும் புரியவைத்தன. எப்படியாயினும் ஒரு வாரத்துக்குப் பிறகு, வீட்டுக்கு முன்பாக நிறுத்தப் பட்டிருந்த காவலர் திடீரெனத் தமது உடைமைகளையும் தூக்கிக்கொண்டு அவசர அவசரமாக வெளியேறினார்கள். எவருக்கும் எதுவித விளக்கமுமின்றி, வீட்டு மறியல் நீக்கப்பட்டது.

புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையே இராஜதந்திர முயற்சிகள் மாதக் கணக்கில் முடுக்கி விடப்பட்டிருந்தன. பெங்களூரில் நடைபெறவிருந்த சார்க் மாநறாட்டில் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் முயற்சியில் வழி கிடைத்து விட்டது என்று அறிவிக்க வேண்டும் என்ற நோக்கமே அதற்குக் காரணம். இதன் மூலம் சார்க் மாநாட்டில் தாம் அரசியல் புகழ் சம்பாதிக்க வேண்டும் என்பது ராஜீவ் காந்தியின் அபிலாஷையாக இருந்தது.

சிறிலங்கா, வெவ்வேறு யோசனைகளையும் முன்வைத்திருந்தது. அதிகாரப் பகிர்வை வெவ்வேறு வடிவங்களில் வழங்குவதோடு, கிழக்கு மாகாணத்தை மூன்று கூறாக்கும் திட்டத்தையும் அது உள்ளடக்கியது. சற்றேனும் ஏற்க முடியாத இந்தத் திட்டத்தோடு இந்திய மற்றும் சிறிலங்கா அதிகாரிகள் பெங்களூர் சென்றனர். இதை விவாதிப்பதற்காக, பாலாவும் பிரபாகரனும் அடிக்கடி புதுடில்லிக்கு கொண்டு செல்லப்பட்டனர். 'அருகமர் பேச்சு' என்ற திட்டம் எடுபடவில்லை. மாநாட்டில் அதை வெளியிடவும் முடியவில்லை. அந்தப் பேச்சு 'பெங்களூர் பேச்சு' என்று அழைக்கப்பட்டது. விடுதலைப் புலி அமைப்பு மீது தமது செல்வாக்கைப் பிரயோகிக்க தமிழ் நாடு முதலமைச்சர் எம்.ஜி.ராமச்சந்திரன் ஈடுபடுத்தப்பட்டார். ஒரு நியாயமான பேச்சின் அனுகூலம் பற்றிப் புலிகளுக்கு விளக்கி, அவர்கள் அதை ஏற்குமாறு செய்ய தமிழரான இந்திய வெளியுறவுச் செயலாளர் வெங்கட்ராமன் ஈடுபடுத்தப்பட்டார். உத்தேச திட்டத்தை முற்று முழுதாக நிராகரித்த விடுதலைப் புலிகள், சிறிலங்கா தலைவர்களுடன் அதை விவாதிக்க மறுத்தனர். திட்டத்தை நிராகரிப்பதற்கு புலிகள் வழங்கிய விளக்கத்தை எம்.ஜி.ராமச்சந்திரன் ஏற்க மாட்டார் என்றே பொதுவாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், எதிர்பார்ப்புக்கு மாறாக, புலிகளின் விளக்கத்தை எம்.ஜி.ஆர் ஏற்றுக்கொண்டார். யாரும் இதை எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் அது அங்கே நிகழ்ந்தது.



பெங்களூர் பேச்சு தோல்வி கண்டதால், ராஜீவ் காந்தியின் அரசியல் மகுட எதிர்பார்ப்பும் மண் கவ்வியது. உச்சி மாநாட்டிலே இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்பட்டிருந்தால், அது ராஜீவுக்கு ஒரு ராஜதந்திர மகுடமாக மாறியிருக்கும். ஆனால், நேர்மாறான ஒன்றே அங்கு நிகழ்ந்தது. ஜெயவர்த்தனா அங்கு நிகழ்த்திய உரை, ராஜீவை ஒரு தர்மசங்கட நிலைக்கு உள்ளாக்கியது. உச்சி மாநாட்டு அரங்கத்தைப் பயன்படுத்தி, ஆயுதம் தரித்த தமிழ் விடுதலை அமைப்புகளுக்கு இந்தியா மறைமுகமாக வழங்கும் ஆதரவை, பயங்கரவாதத்துக்கு இந்தியா வழங்கும் ஆதரவாகக் குறிப்பிட்டு நீண்டதோர் உரையை அவர் நிகழ்த்தினார்.

தீர்வுக்கான அடிப்படையாக முன்வைக்கப்பட்ட அரசியல் யோனைகளை விடுதலைப் புலிகள் முற்றுமுழுதாக நிராகரித்திருந்தார்கள். இதனால், இந்திய அரசு பெரும் மனக்கசப்புக்கு உள்ளாகி இருந்தது. விடுதலைப் புலிகளுடான இந்திய உறவு மேலும் விரிசல் அடைவதற்கு இதுவும் ஒரு காரணமாகியது. இந்திய அரசினரும் வெவ்வேறு புலனாய்வுப் பிரிவினரும் விடுதலைப் புலிகள் மீது தமது அதிருப்தியை தெளிவாக உணர்த்த முடிவு செய்தனர். விடுதலைப் புலிகளும் சரி, ஏனைய போராளிக் குழுக்களுக்கும் சரி, தொடர்ந்து இந்தியாவில் இயங்க முடியாது என்று அவர்களுக்கு உறைக்கும்படி செய்யத் தீர்மானித்தனர். தமிழ் நாடு புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் காவல் துறை ஆகியவற்றின் துணையோடு விடுதலைப் புலிகளின் தொலைத் தொடர்புசாதனங்களைக் கைப்பற்றும் இரண்டாவது மிக முக்கிய நடவடிக்கையை இந்திய அரசு மேற்கொண்டது.


பெங்களூர் அரசியல் யோசனைகளை விடுதலைப் புலிகள் நிராகரித்தமையையிட்டு இந்தியா ஆத்திரம் கொண்டிருக்றிது என்பதை உணர்த்துவதற்காக பிரபாகரனின் தொலைத் தொடர்பு சாதனங்களை இந்தியா பறிமுதல் செய்தது. இது விடுதலைப் புலிகளுக்கும் புதுடில்லிக்கும் இடையே நிலவிய உறவு மீது ஒரு பேரிடியாக அமைந்தது. இந்தியாவின் உள்ளார்ந்த எண்ணங்கள் தொடர்பாகப் பிரபாகரன் கொண்டிருந்த மதிப்பீட்டுக்குச் சிகரம் வைத்தாற்போல இந்த நடவடிக்கை அமைந்தது. அவரைப் பொறுத்தவரையில், இந்தியா தொடர்பான அனைத்து விடயங்களிலும் ஓர் ஆழமான அவநம்பிக்கையை அவர் மனதிலே பதித்தது.

பெங்களூர் பேச்சின் முறிவு இந்தியாவுக்கு அதிருப்தியைத் தோற்றுவித்திருந்தது என்பதை பாலாவும் பிரபாகரனும் உணர்ந்தே இருந்தார்கள். இந்தியாவின் அரசியல் தீர்வு எதிர்பார்ப்புகள் அவர்களுக்குப் பலத்த ஏமாற்றத்தையும் அயர்வையும் ஏற்படுத்தியிருந்தன. வடக்கும் கிழக்கும் பிரிக்கமுடியாத ஒரே தமிழ்ப் பிரதேசமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற வேணவாக் கொண்டிருந்த இவர்களுக்கு, கிழக்கு மாகாணத்தை முக்கூறுகளாக்க முனைந்த யோசனை எள்ளளவேனும் ஏற்க முடியாத திட்டமாக இருந்தது. கிழக்கு மாகாணத்தைப் பிரிக்கும் சிறிலங்காவின் யோசனையை புதுடில்லி ஆதரிக்குமேயென்றால், இந்தியாவின் எதிர்பார்ப்புகளுக்கும் விடுதலைப் புலிகளின் இலக்குக்கும் இடையே உள்ள இடைவெளி நிரவல் செய்யமுடியாத அளவுக்கு அகன்று விட்டது என்று பாலாவும் பிரபாகரனும் கருதினார்கள். பெங்களூர் பேச்சுக்குப் பின் பிரபாகரனுடைய தொலைத் தொடர்பு சாதனங்களைப் பறிமுதல் செய்த நடவடிக்கை அவர்களுடைய சந்தேகம் சரியே என்று நிரூபித்ததோடு ஏற்கனவே நலிவடைந்திருந்த உறவை மேலும் சேதப்படுத்தியது.

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir





# காத்திருந்து காத்திருந்து கந்தனின் திருவிழா காணும் நாள் வந்தது

ஈழமணித்திருநாட்டிலுள்ளவரலாற்றுப் பெருமை வாய்ந்த திருத் தலங்களில் நல்லூர் கந்தன் திருக்கோயில் முதன்மையானது. யாழ்ப்பாணஅரசின் தலைப்பட்டினமாக விளங்கிய திருவூர் நல்லூர். தமிழ் வேந்தர்கால வரலாற்றோடு தொடர்புபெற்ற இந்தத் திருக் கோயில் பெருமையை உலகம் நன்கறியும். இன்றும் ஈழத் தமிழர்களின் உயர் சின்னமாக நல்லூர் விளங்குகிறது. நல்லூரான் பெருந் திருவிழா நாளை 28ஆம் திகதி ஆரம்பமாகி, இருபத்தைந்து நாள்கள் சிறப்பாக நடைபெறவுள்ளது.

நல்லூர் கந்தன்திருவிழா ஆரம்பித்து விட்டால் மக்கள் மனதில் மகிழ்ச்சி பொங்கும். குழந்தைகள் முதல் மூத்தோர் வரை நல்லூரான் சிந்தனையே அவர்களின் அகத்தை நிறைக்கும். திருவிழாக்காலத்தை யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் தவப்பொழுதாகக் கருதுவர். நல்லூரான் திருவிழாவை முன்னிட்டு அனைவரது வீடுகளும் புனிதமடையும். வீதியெல்லாம் திருநீற்றுப் பொலிவோடு அடியார் திருக்கூட்டம் காட்சி தரும். ஆலய சுற்றுப்புறம் யாவும் காப்பியங்க ளில் நாம் படித்த இந்திர விழாபோல காட்சியளிக்கும். ஆலயத்தின் நான்கு வீதிகளிலும் சேவற் கொடிகள் வரவேற்கும்.எல்லாத் திசைகளிலுமுள்ள தெருக்களில் தண்ணீர் பந்தல்கள் காட்சிதரும். அதிகாலையிலேயே அரோஹரா அரோஹரா என்றஓசை நல்லூர் வீதியில் ஒலிக்கத்தொடங்கிவிடும்.

நல்லூரான்பெருவீதியிலே பலநூறு இளைஞர்கள் அங்கப் பிரதட்டை செய்வார்கள்.பொதுவாக இளைஞர்கள் இப்போது சொல்லுக் கேட்க மாட்டார்கள், யாருக்கும் கட்டுப்பட மாட்டார்கள் என்ற குற்றச்சாட்டுகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆனால் நல்லூரில் கொடியேறி விட்டால் பல இளைஞர்கள்முருகனுக்குகட்டுப்பட்டு விடுவார்கள். வீதியில் விழுந்து பிரதட்டைசெய்து, புழுதி மண்ணோடு ஆலய வாசலில் அமர்ந் திருப்பார்கள். காலையும் மாலையும் கந்தன் வீதிவலம் வரும் போது,தோள் கொடுப்பதற்கு முண்டி யடித்து தம்மை மறந்து அணி செய்யும் காட்சி மெய்ம் மறக்கச் செய் யும்.

பந்தல்கால் நாட்டியநாள் முதலாக நல்லூர் வீதி, களைக் கட்டத் தொடங்கி விடும். தொண்டர்களும் பணியாளர்களும் பம்பரமாக இயங்குவார்கள். ஆலயசிவாச்சாரியார் முதலாக அனைத்து அர்ச்சகர்களும் வீடுவாசல் மறந்து விடுவார்கள். பிரதம சிவாச் சாரியார் கந்தனே எழுந்து வந்தது போல தினமும் காட்சியளிப்பார்.

நல்லூர் கந்தன் ஆலயத்தில் நடைபெறும் பூசை ஒழுங்குகள் புனிதமானவை. அந்தணப் பெருமக்கள் ஒருவரோடு ஒருவர் சம்பாஷணை இன்றி மிகப் புனிதமாக கிரியைகளை நெறிப்படுத்துவர். சிவாச்சாரியார்கள் பட்டுச் சீருடைகளுடன், தினத்துக்கு தினம் வர்ண வேறுபாடுகளுடன் காட்சியளிப்பர். பக்தர் கூட்டம் கடல் போல் கோயில் உள்ளேயும் வெளியேயும் காட்சிதரும். அலங்காரக் கந்தன் அழகுக் கோலத்திலே வெவ்வேறு வாகனங்களில் வீதிவலம் வருவான். அடியார்கள் வீதியிலே ஆடுவார்கள், பாடுவார்கள்,ஆனந்தக் கண்ணீர் சொரிவார்கள்.

ஆலயத்தை நிர்வகிக்கும் எஜமானர் குகஸ்ரீ ச.குமாரதாஸ் மாப்பாண முதலியார் பக்தர்களோடு மறைந்து நின்று முருகன் வலம் வரும் காட்சியை ரசித்து மகிழ்வார். ஆரவாரமின்றி, ஆடம்பரமின்றி, தோய்த்து லர்ந்த குறியில்லா வேட்டியுடன் எங்கேயோ ஒரு மூலையிலிருந்து ஆலயத்தை நிர்வகிக்கும் அவரது அதீத ஆற்றலை சொல்ல வார்த் தைகளே இல்லை. நேரந்தவறாத பூசை.கடிகாரம் பிந்தலாம் ,மழைபெய்யலாம், மந்திரிமார் வரலாம் எதனையும் கருதாது நல்லூருக்குரிய நேரத்தில் உரிய உரிய கடமைகள் உத்தமமாக நடக்கும்.ஆண்டியும் அரசனும் அறிஞனும் நல்லூரை பொறுத்த வரை சமரசமே. அடியாரோடு அடியாராக கும்பிடலாமேயன்றி, நல்லூரில் சலுகைகளை எவரும் என்றுமே எதிர்பார்க்க முடியாது.


நல்லூரான் திருவிழாக் காலத்தில், ஆலய சுற்றாடலில் அன்னதானப் பணி தினமும் நடக்கும். துர்க்கா மணி மண்டபம், நல்லைஆதீனம், மூத்ததம்பி மடம் எனப் பல இடங்களில் அன்னம் பாலிப்பர். நல்லூரை கும்பிடச் சென்றவர்கள் பசியாலும் தோற்றுப் போக மாட்டார்கள். மழலைகள் மகிழ்வுடன் வருவதற்கு மாநகரசபை உருவாக்கும் திருவிழாகால அங்காடிகள் யாரைத் தான் ஈர்க்காது? மாலையில் கூட்டம் கூட்டமாக திருவிழாக் கால கடைத் தெருவை வலம் வருபவர்களின் ஆரவாரம் ஒரு பக்கம், கதாப் பிரசங்கங்களும் சங்கீதக் கச்சேரிகளும் இன்னொருபக்கம், மண்ணிலிருந்து மகிழ்வாக உரையாடுபவர்களின் சங்கமிப்பு பிறிதொருபக்கம் -இத்தகைய நாள் நெருங்கிவிட் டது- காத்திருந்து காத்திருந்து கந்தனின் திருவிழாவைக் காணும் நாள் வந்து விட்டது.

சைவத்தமிழ் மக்களின் ஒப்பற்ற பண்பாட்டு விழா நல்லூர் திருவிழாவே. நல்லன பலவற்றைக் கற்றுக் கொள்ளுவதும் நல்லூரிலேயே. புதிய அறிமுகங்கள் நட்புகள் உருவாகும் நாளும் நல்லூரான் திருவிழாக்காலமே. வாழ்வில் பலர் திருந்துவதும், பலரை நல்லவராக்குவதும் இந்த உற்சவகாலம்தான்.


விரதமிருப்பவர்கள் பலர் இளைத்த மேனியுடன் உருவம் மாறிஅழகாய் காட்சியளிப்பதும் இந்நாளே!

அன்பர்களே ,குடும்பம் குடும்பமாக தவப் பொழுதை அனுபவிக்க நல்லூருக்கு வாருங்கள். தனக்கு உவமையில்லாதான் தாள் போற்றி வணங்குங்கள். நாளை எம் சந்ததி நன்றே வாழ பிரார்த்தியுங்கள். அஞ்சேல் என்று அபயகரங்களோடு ஆறுமுகப் பெருமான் ஆறுதல் தருவான். வீட்டுத் தொலைக்காட்சியை விட்டுவிடுங்கள். வேலன் நினைப்போடு கும்பிட வாருங்கள். பண்பாட்டு உடைகளுடன் பாரம்பரியத்தைப் பேணிவாருங்கள். நவநாகரிகத்தின் பேரில் பக்தர்களுக்கு இடையூறாக பண்பாட்டை மீறி நடவாதீர்கள். ஆட வர்களே! வேட்டி சால்வையுடன் வலிமைமிக்க ஆடவராக வாருங்கள். காற்சட்டை, மேற்சட்டை என்பன திரு விழாகால தரிசனத்துக்கு பொருத்தமற்றவை. எத்தனை இடர் வரினும் சைவத்தமிழர்கள் தம் பண்பாட்டைக் கைவிடார் என்றபுராதன பெருமையை புழுதியிலே போடாதீர்கள் எளிமையாய் வாருங்கள்-ஏழைப் பங்காளனாக வீற்றிருக்கும் முருகனைதரிசிப்பதற்கு ஏற்ற நிலையில் வாருங்கள்.

இருபத்தைந்து நாள்களும் வாழ்வு வங்கியில் மகிழ்ச்சியைவைப்பிலிடுவதற்கு ஆயத்தமாகுவோம்! எம் வாழ்க்கையில் இறைவழிபாடே இனிய நிரந்தரவைப்பு. பொன்பொருள் தேடுவதற்கு அப்பால், அருள்தேட ஆயத்தமாகுங்கள். அருள் நிறைந்தால் அவலமில்லை, அச்சமில்லை, அருளால் ஆனந்தமடையலாம். ஆறுமுகனை நாடிவர ஆயத்தமாகுங்கள்!



-செஞ்சொற்செல்வர்
கலாநிதி ஆறு.திருமுருகன்.



# விஷமிகளால் தீக்கிரையாகியது இரட்டைப்பெரிய குள மயானம்





வவுனியா, ஜூலை 27

வவுனியா ஏ9 வீதியில் இரட்டைப் பெரியகுள மயானத்துக்கு விஷமிகளால் நேற்று முன்தினம் தீ வைக்கப்பட்டுள்ளது.

அதில் மயானம் முழுவதும் எரிந்து நாசமாகியுள்ளது.

இந்நிலையில் இதனை அவதானித்த இரட்டைப் பெரியகுளப் பிரிவுப் பொலிஸார் வவுனியா நகரசபை தீயணைப்புப் பிரிவினருக்கு தகவல் அளித்துள்ளனர்.

இதனை அடுத்து நகர சபை தீயணைப்புப் பிரிவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இதன் போது மயானத்தின் பெரும்பகுதி நாசமடைந்துள்ளது. எனினும் மேலதிகமாக இடம்பெற இருந்த பெரும் அனர்த்தமும் தவிர்க்கப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இரட்டைப்பெரியகுளப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## பனை உற்பத்திப் பொருள் கண்காட்சி நாளை ஆரம்பம்

பனைசார் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சி யாழ்ப்பாணம், நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது. வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களமும், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் பனை அபிவிருத்திச் சபையும் இணைந்து இந்தக் கண்காட்சியை நடத்தவுள்ளன.

வருடாந்தம் நடத்தும் இந்தக் கண்காட்சி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் காலை 9.30 மணி தொடக்கம் இரவு 9.30 மணி வரை இடம்பெறும். இந்தக் கண்காட்சியை வந்து பார்வையிட்டு பயன்பெறுமாறு வடக்குமாகாண கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமான க.சிவகரன் கோரியுள்ளார்.

# வடக்கில் வறட்சியை நீக்க போதிய நிதி கையளிப்பு!

## நாடாளுமன்றில் தெரிவித்தார் அமைச்சர் யாப்பா

கொழும்பு, ஜூலை 27

வட மாகாணத்தின் பல் வேறு பகுதிகளில் நிலவும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான குடிதண்ணீரைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவை யான நிதியை மாவட்ட அரச அதிபர்களுக்கு வழங்கியிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

வறட்சியின் காரணமாக பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள சுமைதொடர்பில் நாடாளுமன்ற நிலையியல் கட்டளை 23 (2) கீழ் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா கேள்வியொன்றை முன்வைத்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 48 லட்சம் ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 21 லட்சம் ரூபாவும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு 30 லட்சம் ரூபாவும், வவுனியா மாவட்டத்துக்கு 31 லட்சம் ரூபாவும் வழங்கப்பட்டிருக்கின்றது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மாவட்ட செயலாளர்கள் ஊடாக தேவையானளவு நிதி வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப் பட்டவர்களுக்கு மேலதிக பவுசர்கள் மூலம் குடிதண்ணீரை விநியோகிப் பதற்கும், குடிதண்ணீர் தாங்கிகளை வழங்குவதற்கும் இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, வட மாகாணத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ளவர்களுக்கு பவுசர்கள் மூலம் தேவையான நீரை வழங்குமாறும், பவுசர்களுக்குத் தேவையான எரிபொருள், சாரதிக்கான மேலதிக கொடுப்பனவு என்பவற்றுக்காக நிதி வழங்கப்பட்டுள்ளது.



யாழ்ப்பாணமாவட்டத்துக்கு டிராக்டர்களில் பொருத்தக்கூடிய 13 தண்ணீர் பவுசர்களும், ஒரு லொறி பவுசரும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 8 டிராக்டர் பவுசர்களும், கிளிநொச்சிக்கு 11 பவுசர்களும், மன்னாருக்கு ஒரு பவுசரும், வவுனியா மாவட்டத்துக்கு 8 பவுசர்களுமாக 41 பவுசர்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், அந்தப் பகுதிகளுக்கு 650 குடிதண்ணீர் தாங்கிகளும் வழங்கப்பட்டுள்ளன.-என்றார். (எ)

# டெங்கு நோயாளர் எண்ணிக்கையை குறைக்க உலக சுகாதார அமைப்பின் திட்டம் சமர்ப்பிப்பு

## நடைமுறைப்படுத்த சுகாதார அமைச்சர் அதிகாரிகளுடன் ஆலோசனை

கொழும்பு, ஜூலை 27

இலங்கைக்கு வருகை தந்த உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதிகளால் தயாரிக்கப்பட்டுள்ள நான்கு வார காலத்துக்குள் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கான திட்டம் நடை முறைப் படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பாக சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன உலக சுகாதார அமைப்புக்கும் சுகாதார அமைச்சின் அதிகாரிகளுக்கும் ஆலோசனைவழங்கியுள்ளார்.

இது தொடர்பாக சுகாதார அமைச்சில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விசேட பேச்சில் இந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்தச் செயற்றிட்டத்தில் பல் வேறு நடைமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் செயற்பாடுகளை கண்காணிக்கும் பொறுப்பு பல்வேறு துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

விசேடமாகதண்ணீர்தேங்கி நிற்கும் இடங்களை இல்லாதொழிப்பதற்காக பொதுமக்களை ஊக்குவிப்பது தொடர்பிலும் உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதிகள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

நாளை முதல் மூன்று நாள்களுக்கு முன்னெடுக்கப்படவுள்ள பாடசாலை மற்றும் அரச நிறுவனங்களைதுப்புரவு செய்யும்வேலைத்திட்டத்துக்கு அமைவாக இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வீடுகள் மற்றும் சுற்றாடலை சுத்தம் செய்வதற்காக ஆயிரத்து 200 பேரைக்கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி பாடசாலை சுற்றாடலை துப்புரவு செய்வதற்கான திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஓகஸ்ட் மாதம் பாடசாலைகளுக்கு விடு முறை என்பதனால் அந்த மாதத்தில் ஒருமுறை பாடசாலை சுற்றாடலைச்சுத்தம் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. (எ)

# குடிதண்ணீர் விநியோகத்துக்குத் தேவையான நீரை பெறமுடியாது திண்டாடுகிறது கரைச்சி பிரதேச சபை

நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சியால் மக்கள் குடி தண்ணீர் உள்ளிட்ட நீர்த் தேவையை பூர்த்தி செய்து கொள்வதில் கடும் நெருக்கடிகளை எதிர் கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் கரைச்சி பிரதேச சபை வறட்சியால் அதிகம் பாதிப்புக்குள்ளாகியுள்ள கிராமங்களுக்கு நீர்த் தாங்கி மூலம் குடி தண்ணீர் விநியோகத்தை மேற் கொண்டு வருகின்றது. ஆனால், குடி தண்ணீர் விநியோகத்துக்கான நீரைப் பெறுக் கொள்வதில் கரைச்சி பிரதேச சபையும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது என்று அதன்செயலாளர் க. கம்சநாதன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கரைச்சிப் பிரதேசசபையால் செருக்கன் கிராமத்துக்கு இரண்டு நாளுக்கு ஒரு தடவையும், ஆனையிறவு, தட்டுவன்கொட்டி, உமை யாள்புரம் கிராமங்களுக்கு ஒன்று விட்டு ஒரு நாளைக்கும் என நீர் விநியோக நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன. இதற்காக நாளாந்தம் நான்காயிரம் லீற்றர் நீர் இரண்டு கிணறுகளில் இருந்து பெறப்படுகிறது.

கரைச்சிப் பிரதேசசபையின் கிணறு மற்றும் கிளிநொச்சி கமநல சேவைகள் திணைக்கள கிணறு என்பனவற்றில் இருந்தே நீர் பெறப்படுகிறது.




ஆனால், கரைச்சிப் பிரதேசசபையின் கிணற்றில் நீர் வெகுவாக வற்றிய நிலையில் கிணற்றின் அடி மட்டத்துக்குச் சென்றுள்ளது. இந்தநிலையில் நான்காயிரம் லீற்றர் நீரைப் பெறுவதற்கு 4 மணித்தியா லயங்களுக்கு மேல் காத்திருக்க வேண்டும். அதுவும் இன்னும் சில தினங்கள் மட்டுமே அவ்வாறு அலுவலக கிணற்றில் நீரைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அத்துடன், தொடர்ச்சியாக இவ்வாறு வறட்சி நிலவினால் மக்களுக்கு விநியோகிப்பதற்கு கரைச்சி பிரதேச சபையாலும் புதிய நீர் மூலங்களைத் தேடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும். ஆனால், கிளிநொச்சியில் அதிக தொலைவில் இல்லாது வேறு நீர்மூலங்களை அடையாளம் காணுவது அரிதானவிடயம்.

இனிவரும் நாள்களில் தனியாரின் கிணறுகளில் அவர்களின் சம்மதத்துடன் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிக்கவேண்டும்.-என்றார். (எ)

# அ.தி.மு.க. அணிகள் இணைப்பு குறித்து டில்லியில் இரு தரப்புகளும் ஆலோசனை!

டில்லி, ஜூலை 27

உள்ளாட்சித் தேர்தலுக்கு முன்பாக இரட்டை இலை சின்னத்தை மீட்கும் வகையில் அ.தி.மு.கவின் இரு அணிகளையும் இணைக்கும் முயற்சி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதற்காக டில்லியில் இரு தரப்பினரும் முக்கிய ஆலோனை நடத்தியுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.



முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவுக்குப்பின், அ.தி.மு.கவில் பிளவு ஏற்பட்டது. தற்போது ஓ.பி.எஸ்., முதல்வர் கே.பழனிச்சாமி அணிகள் தவிர, டி.டி.வி. தினகரன் தலைமையிலும் ஓர் அணி செயற்பட்டு வருகிறது.

தினகரன் ஆதரவு எம்.எல். ஏக்கள், முதல்வர் பழனிச்சாமி தலைமையிலான அரசுக்கு ஆதரவாகவே செயற்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், ஓ.பி.எஸ். அணியில் இருந்த எம்.எல்.ஏ. ஆறுக்குட்டி, சமீபத்தில் முதல்வர் கே.பழனிச்சாமி அணியில் இணைந்தார். இது ஓ.பி.எஸ். அணிக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ஆனாலும், சசிகலா குடும்பத்தினரைக் கட்சியைவிட்டு நீக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி தொடர்ந்து தர்ம யுத்தத்தை நடத்தி வருகிறோம் என ஓ.பி.எஸ் தரப்பினர் தெரிவித்து வருகின்றனர்.

இதற்கிடையே, எதிர்வரும் ஓகஸ்ட் 5 ஆம் திகதிக்குப் பின்னர் கட்சிப் பணிகளில் முழுமையாக ஈடுபட உள்ளனர் என டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார். இதைக் கண்டு கொள்ளாத முதல்வர் பழனிச்சாமி அணி, மீதமுள்ள 4 ஆண்டுகளும் ஆட்சியை முழுமையாக நடத்தி முடிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

இந்த நிலையில், உள்ளாட்சித் தேர்தலை ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிக்குள் நடத்த வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. இரட்டை இலை சின்னத்தைப் பெறாமல் தேர்தலை நடத்தினால் தங்களுக்கு பாதிப்பு ஏற்படும் என ஓ.பி.எஸ்., பழனிசாமி அணிகள் கருதுகின்றன. ஏற்கெனவே இரு தரப்பினரும் தேர்தல் ஆணையத்தில் தங்களுக்கான ஆதரவு ஆவணங்களை சமர்ப்பித்துள்ளன. இந்த ஆவ ணங்களை தேர்தல் ஆணையம் ஆய்வு செய்து வருகிறது.

ஒருவேளை, பொதுச் செயலாளராக சசிகலா நியமிக்கப்பட்டமை செல்லாது என்று தேர்தல் ஆணையம் அறிவித்து விட்டால் அது முதல்வர் கே. பழனிச்சாமி தரப்புக்கு எதிராக அமைந்துவிடும்.

எம்.பி.க்கள், எம்.எல்.ஏக்கள் எண்ணிக்கையை வைத்து முடிவெடுத்தால் ஓ.பி.எஸ். அணிக்கு எதிர்ப்பாக மாறிவிடும். எனவே, தேர்தல் ஆணையம் முடிவை தெரிவிப்பதற்கு முன்பாக இரு அணிகளும் இணைந்தே ஆகவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இந்த நிலையில், குடியரசுத் தலைவர் பதவியேற்பு விழாவில் பங்கேற்பதற்காக டில்லி சென்றிருந்த ஓ.பன்னீர் செல்வமும், முதல்வர் பழனிச்சாமியும் அடுத் தடுத்த நாள்களில் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்தனர்.

அப்போது இரு அணிகளும் இணைய வேண்டும் என்று பிரதமர் மோடி அறிவுறுத்தினார் எனக் கூறப்படுகிறது.

இதையடுத்து, இரு அணியினரும் டில்லியில் தனித் தனியாக ஆலோசனை நடத்தினர் எனவும், அதில் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் கூறப்படுகிறது.

கட்சியில் தினகரன் ஆதிக்கம் செலுத்துகின்றமை இரு தரப்பினரும் விரும்பவில்லை. இதனால், இரட்டை இலை சின்னத்தை பெறும் முயற்சி தீவிரமடைந்துள்ளதாகவும் விரைவில் இரு தரப்பும் இணைய உள்ளன எனவும் அ.தி.மு.க. அம்மா அணி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## உயர் மட்டக் குழுவினரிடம் சசி பரபரப்பு வாக்குமூலம்!



பெங்களூர், ஜூலை 27

பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறை விதிமீறல்கள் குறித்து விசாரணை நடத்திய ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி வினய்குமார் தலைமையிலான உயர்மட்ட குழுவினரிடம் சசிகலா வாக்குமூலம் அளித்துள்ளார்.

பெங்களூர்பரப்பன அக்ரஹார சிறை விதிமீறல்கள் குறித்து டி.ஐ.ஜி. ரூபா எழுப்பிய குற்றச்சாட்டை தொடர்ந்து இது தொடர்பாக விசாரணை நடத்த ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி வினய்குமார் தலைமையிலான உயர்மட்ட விசாரணை குழுவை அமைக்க கர்நாடக அரசு உத்தரவிட்டது.

இதையடுத்து வினய்குமார் தலைமையிலான குழு கடந்த வாரம் பரப்பன அக்ரஹார சிறையில் ஆய்வு நடத்தியது.

இந்த நிலையில் இருதினங்களுக்கு முன் மீண்டும் சிறைக்கு சென்று ஆய்வு நடத்திய இந்தக் குழு சிறையில் உள்ள சசிகலா, தெல்கி உட்பட பல கைதிகளிடம் விசாரணை நடத்தி அவர்களின் வாக்கு மூலங்களைப் பதிவு செய்தது.

மேலும் சிறை ஆவணங்கள் மற்றும் கண்காணிப்பு கமரா காட்சிகள் ஆகியவற்றையும் அவர்கள் ஆய்வு செய்துள்ளனர். இதில் சசிகலா மற்றும் தெல்கி பரபரப்பு வாக்குமூலம் அளித்துள்ளனர்.

சசிகலா உயர்மட்ட குழுவினரிடம் அளித்துள்ள வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

சிறையில் பாதுகாப்புக் கருதி பல பெண் கைதிகளுக்கு தனியறை வழங்கப்பட்டுள்ளது. அதேவகையில் எனக்கும் தனி அறை வழங்கப்பட்டது. ஆரம்பத்தில் ஜெயலலிதாவுடன் சிறையில் இருந்தபோது அவர்களை நான் பார்த்துக் கொண்டேன்.

அப்போது இரண்டு கைதிகள் என்னிடம் வந்து பேசுவார்கள். இந்த நிலையில் அவர்கள் தற்போதும் என்னிடம் வந்து அன்பாகப் பேசுவார்கள், என் மீது கொண்டுள்ள பற்றின் காரணமாகவோ என்னவோ அவர்கள் என்மீது மிகுந்த அக்கறை காட்டுவார்கள். மற்றும் சிறிய உதவிகளையும் செய்வார்கள். இது என் மனதுக்கு சற்றே ஆறுதல் தரும் விதமாக இருந்ததால் அனுமதித்தேன்.

மேலும் உடற்பயிற்சி செய்ய சிறப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்றும் வேறு வசதிகள் இருக்கின்றன என்றும் கூறப்படும் தகவல்கள் மிகவும் தவறானவை. சிறை விதிமுறையின்படி நான் வெள்ளை நிற சேலை கட்ட வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. சிறை விதிமுறைகள் படிதான் நானும் நடந்து வருகிறேன்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து சசிகலா மற்றும் தெல்கிக்கு உதவி புரிந்த தனர் எனக் கூறப்பட்ட கைதிகளிடமும், வேறு சில வாக்குமூலங்களையும் வினய்குமார் பெற்றார். இவற்றில் சில சசிகலாவிற்கு ஆதரவாகவும், சில எதிராகவும் உள்ளன எனத் தெரியவருகிறது.

## மும்பையில் கட்டடம் இடிந்து விபத்து: சாவு எண்ணிக்கை 17 ஆக உயர்வு!

மும்பை, ஜூலை 27

மும்பையில் கட்டடம் இடிந்த விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 17 ஆக அதிகரித்துள்ளது. இந்த விபத்து தொடர்பாக சிவசேனாவைச் சேர்ந்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மும்பையின் கிழக்கு புறநகரிலுள்ள காட்கோபர் பகுதியில் 3 மாடி கட்டடம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை இடிந்து விழுந்தது. இதில் கட்டடத்தில் வசித்த 15 பேர் பலியாகினர். இந்த நிலையில் தற்போது பலி எண்ணிக்கை 17 ஆக அதிகரித்துள்ளது.

இந்த விபத்து தொடர்பாக சிவசேனாவைச் சேர்ந்த சுனில் ஷிதப் என்பவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அந்தக் கட்டடத்தில் தரைப்பகுதியில் அமைந்துள்ள சுனில் ஷிதப்பின் நர்சிங் இல்லம் மறுசீரமைப்பு பணியின்போது ஏற்பட்ட குளறுபடி காரணமாகவே கட்டடம் இடிந்து விழுந்துள்ளது என்று கூறி சுனிலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

விபத்து இடம்பெற்ற இடத்தில் தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.


இதுகுறித்து இந்திய பேரிடர் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்-

இதுவரை 17 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. 11 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் அருகே உள்ள பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் மீட்புப் பணி வீரர்கள் இருவர் காயமடைந்துள்ளனர் - என்று தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிரா முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் தெரிவிக்கையில்-

''இந்த விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. மேலும் 15 நாள்களுக்குள் அறிக்கை வெளியிட வேண்டும் என உத்தரவிட்டுள்ளேன்'' என்று தெரிவித்துள்ளார்.

## பெட்டிக்கடை வைத்திருந்தவரின் மகன் இன்று இந்தியாவின் ஜனாதிபதி!



இந்தியாவின் 14 வது ஜனாதிபதியாக ராம்நாத் கோவிந்த் நேற்றுமுன்தினம் பதவியேற்றுள்ளார்.

1945 ஆம் ஆண்டு தெஹாத் கான்பூர் மாவட்டத்தில் தலித் குடும்பத்தில் ராம்நாத் கோவிந்த் பிறந்துள்ளார்.

இவரின் தந்தையின் பெயர் மைகுலா, 5 மகன்கள் மற்றும் 2 பெண் குழந்தைகள் கொண்ட குடும்பத்தில் ராம்நாத் கடைசி மகனாகப் பிறந்தார்.

குடும்பச் செலவுகளுக்காகவும், தனிப்பட்ட காரணங்களுக்காகவும் தனது பாரம்பரிய தொழிலான நெசவு தொழிலை செய்யாமல் ஒரு சிறிய பெட்டிக்கடை வைத்திருந்தார் ராம்நாத்தின் தந்தை மைகுலா.

மண் தரையில் பிறந்த ராம்நாத் கோவிந்த், தான் 5 வயதாக இருக்கும் போது தனது வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் தனது தாயையும், வீட்டையும் இழந்தார்.

கான்பூர் கிராமத்தில் இருந்து 8 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் பள்ளியில் தனது படிப்பை முடித்த ராம்நாத், டி.ஏ.வி. கல்லூரியில் வர்த்தக மற்றும் சட்ட படிப்புகளை முடித்துப் பட்டம் பெற்றார்.

பா.ஜ.கவின் மூத்த தலைவர்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ள இவர் அந்த கட்சியால் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டு அதில் வெற்றியும் பெற்று, இந்தியாவின் 14 ஆவது ஜனாதிபதி ஆகியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir


# இந்தோனேஷியாவில் படகு கவிழ்ந்து விபத்து: 10 பேர் பலி!



ஜகார்த்தா, ஜூலை 27

இந்தோனேஷியாவில் உள்ள போர்னியோ தீவில் வேகமாகச் சென்ற ஒரு படகு நேற்று முன் தினம் கவிழ்ந்துள்ளது.

இந்த கோர விபத்தில் 10 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து நடந்தபோது அந்தப் படகில் 40 பேர் பயணம் செய்தனர் எனத் தகவல்கள் கூறுகின்றன.

இதுபற்றி தேடல் மற்றும் மீட்புக்குழு அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்- அந்தப் படகில் 40 பேர் பயணம் செய்திருந்தனர் என்பது தற்போது எங்களின் நம்பிக்கை. காணாமல் போனவர்கள் என்று குடும்பங்களால் கூறப்பட்டிருப்பவர்கள் மீட்கப்படுவதற்காகக் காத்திருக்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளனர்.

இந்தோனேஷியா-மலேஷியா இடையேயான நீர் வழிப்போக்குவரத்தில் அடிக்கடி படகு விபத்துக்கள் நேரிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் கடற்பாறையில் மோதி ஒரு படகு விபத்துக்குள்ளானதில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாதிரியாரைக் கட்டிவைத்து வல்லுறவு; 3 இளம்பெண்கள் கைது!



புலவாயோ, ஜூலை 27

ஸிம்பாப்வே நாட்டில் பாதிரியார் ஒருவரை கட்டிவைத்து வல்லுறவுக்கு உட்படுத்தினர் என்று கூறப்படும் 3 இளம் பெண்களை அந்நாட்டு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஸிம்பாப்வே நாட்டில் உள்ள புலவாயோ என்ற நகரில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

நகரில் உள்ள தேவாலயம் ஒன்றில் பெயர் வெளியிடப்படாத பாதிரியார் ஒருவர் பணிபுரிந்து வந்துள்ளார்.

இந்தப் பாதிரியாரிடம் 21, 23 மற்றும் 25 வயதுடைய மூன்று இளம்பெண்கள் கடனாக பணம் பெற்றுள்ளனர்.

நீண்ட நாள்களாக பணத்தை திருப்பி செலுத்தாதமையால் பணத்தை வாங்குவதற்காக பாதிரியார் அந்தப் பெண்கள் மூவரும் தங்கியிருந்த வீட்டுக்கு சில தினங்களுக்கு முன்னர் சென்றுள்ளார்.

அப்போது, வீட்டுக்குள் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் என பெண்கள் மூவரும் கூறியுள்ளனர்.

அவர்களின் பேச்சை நம்பிய பாதிரியார், வீட்டுக்குள் சென்ற போது மூவரும் திடீரென அவர் மீது பாய்ந்து கட்டிப் போட்டுள்ளனர்.

நடப்பதை அறிந்து அதிர்ச்சி அடைந்த பாதிரியார், அவர்களிடம் இருந்து தப்பிக்க போராடியுள்ளார்.

மூவரில் ஒரு பெண் உள்ளே சென்று ஆணுறையை எடுத்து வந்துள்ளார்.

மற்றைய இருவரும் பாதிரியாரை பிடித்துவைத்திருக்க மூன்றாவது பெண் பாதிரியாரை வல்லுறவுக்கு உட்படுத்தினர்.

பின்னர், இரண்டு பெண்களும் மாறி மாறி பாதிரியாரை பலாத்காரம் செய்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

## பிரான்ஸில் சாரதியைத் தாக்கி லொறியைத் திருடிய அகதிகள்



பிரித்தானியா செல்வதற்காக லொறி சாரதியைத் தாக்கி விட்டு லொறியை திருடி சென்ற அகதிகளை பொலிஸார் கையும் களவுமாகப் பிடித்துள்ளார்கள்.

பிரான்ஸில் உள்ள காலைஸ் நகரில் வசிக்கும் அகதிகள் குழு ஒன்று பிரித்தானியாவுக்குச் செல்ல முடிவு செய்தது.

அதன்படி, அங்கிருந்த லொறி சாரதியை அவர்கள் அணுகியுள்ளனர். பின்னர் அகதிகள் கும்பல் தங்கள் கையில் வைத்திருந்த செங்கல்லை வைத்து லொறி சாரதியின் தலையில் கடுமையாகத் தாக்கியுள்ளார்கள்.

இதனால் படுகாயமடைந்த சாரதியின் தலையிலிருந்து இரத்தம் கொட்டியது. வீதியில் நினைவிழந்த நிலையில் அவர் விழுந்துள்ளார்.

பின்னர், அகதிகள் அவரின் லொறியைத் திருடிக் கொண்டு சென்றுள்ளனர். சம்பவ இடத்துக்கு உடனடியாக வந்த பொலிஸார், லொறி சாரதியை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தார்கள்.

அங்கு அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில், திருடிய லொறியுடன் தப்பித்துச் சென்ற அகதிகள் கும்பலை பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளார்கள்.

பிரித்தானியா லொறி ஓட்டுநர்களுக்கு சம்பவம் குறித்த தகவலை தேசிய வாகன குற்றப் புலனாய்வு சேவை நிறுவனம் கூறியுள்ளது. மேலும், லொறி சாரதிகள் அனைவரும் எச்சரிக்கையாகவும், பாதுகாப்பாகவும் இருக்கவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## அலுவலக வேலைக்குச் செல்ல தினமும் ஆற்றை நீந்திக் கடக்கும் ஊழியர்!



பெர்லின், ஜூலை 27

ஜெர்மனியில் போக்குவரத்து நெரிசலில் சிக்கிக்கொள்ளாமல் வேலைக்குச் செல்ல தினமும் ஆற்றை 2 கிலோ மீற்றர் தூரம் நீந்தி ஊழியர் ஒருவர் அலுவலகம் செல்லும் சம்பவம் இடம்பெறுகிறது.

பெருநகரங்களில் அலுவலக பணிக்கு செல்வோர் போக்குவரத்து நெரிசலில் சிக்கி தவிக்கின்றனர். இதனால் உரிய நேரத்துக்கு வேலைக்கு செல்ல முடியாமல் கடும் மன அழுத்தத்துக்கு ஆளாகின்றனர்.

அதைத் தவிர்க்க ஜெர்மனியின் முனிச் நகரைச் சேர்ந்த பெஞ்சமின் டேவிட் என்பவர் புதுவிதமான வழியைக் கையாண்டு வருகிறார். முனிச் நகரில் நெடுஞ்சாலையை ஒட்டி 'இசார்' என்ற ஆறு ஓடுகிறது.

அந்த ஆற்றில் நீந்தி தனது அலுவலகத்துக்கு இவர் செல்கிறார். தினமும் 2 மணி நேரம் இந்த ஆற்றில் நீந்துகிறார். அப்போது தனது ஆடைகள், காலணி என்பவற்றைக் கழற்றி தண்ணீர் புகாத (வோட்டர் புரூப்) பைக்குள் வைத்துக் கொள்கிறார்.

மடி கணனியையும் அந்த பையில் பத்திரப்படுத்தி தனது முதுகில் கட்டியபடி நீந்திச் செல்கிறார். அவர் நீந்தும் வழியில் பல பாலங்களை கடந்து செல்கிறார்.

அங்கு அவரை பார்க்கும் சிலர் இவரை பார்த்து கேலி-கிண்டல் செய்து சிரிக்கின்றனர். ஆனால் அதை அவர் பெரிதாக எடுத்துக் கொள்வாரில்லை.

'ஆற்றில் நான் நீந்திச் செல்வதால் போக்குவரத்து நெரிசலில் இருந்து தப்பிக்கிறேன். இதனால் மன அழுத்தம் எதுவும் இல்லை. வழக்கத்தை விட மிக சீக்கிரமாக அலுவலகம் செல்ல முடிகிறது' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கவிழ்ந்தது லிபியா அகதிகள் படகு; 13 பேர் சடலங்களாக மீட்கப்பட்டனர்!

ரோம், ஜூலை 27

லிபியாவில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு குடியேறும் நோக்கத்தில் சென்ற அகதிகள் படகு நடுக்கடலில் விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் உயிரிழந்த 13 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.



வட ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான லிபியாவில் கடந்த 2011 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி கடாபியின் ஆட்சி வீழ்த்தப்பட்ட பிறகு அங்கு அதிகாரப் போர் உச்சகட்டத்தை எட்டியுள்ளது. பதவிவெறி பிடித்த போராளிக் குழுக்களின் மோதலில் பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து தப்பித்து உயிரைப் பாதுகாத்துக் கொள்ள லிபியாவில் வறுமை நிலையில் வாடும் மக்களில் பலர் ஜெர்மனி, இத்தாலி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் புகலிடம் தேடிச் செல்கின்றனர்.

மேலும், உள்நாட்டுப் போரால் நிலைகுலைந்துள்ள ஈராக், சிரியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்தும், வறுமையால் பாதிக்கப் பட்டுள்ள ஆபிரிக்க நாடுகளில் இருந்தும் தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாகச் செல்கின்றனர்.

பல்வேறு நாடுகளுக்குக் கடல் கடந்து செல்லும் இந்த அகதிகள், ரப்பர் படகுகள் போன்றவற்றில் பாதுகாப்பற்ற முறையில் பயணம் செய்கின்றனர். இதனால் தொடர்ச்சியாக விபத்து ஏற்பட்டு வருகிறது.

இந்த நிலையில், லிபியா எல்லை அருகே அகதிகள் பயணம் செய்த சிறிய படகு விபத்துக்குள்ளானது. இதனையடுத்து இத்தாலி நாட்டைச் சேர்ந்த மீட்புப் படையினர், மீட்பு பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் பலியான 13 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சுமார் 167 பேர் விபத்துக்குள்ளான படகில் பயணம் செய்துள்ளனர். அதிகப்படியான நபர்கள் பயணம் செய்தமையால் விபத்து ஏற்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் முதல் அகதிகள் படகு விபத்துக்குள்ளானதில் இதுவரை 2 ஆயிரத்து 370 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை – இந்தியா முதலாவது டெஸ்ட் ஒவ்வொரு இந்திய வீரருக்கும் திட்டம்

## ஹேரத் சூளுரை




விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 6 வார கால பயணமாக இலங்கைக்கு வருகை தந்துள்ளது. இலங்கையில் 3 டெஸ்ட், 5 ஒரு நாள் போட்டி மற்றும் ஒரு 20 ஓவர் போட்டி என்பவற்றில் அது விளையாட இருக்கின்றது.

இவ் வகையில் முதலில் டெஸ்ட் தொடர் ஆட்டங்கள் நடத்தப்படுகின்றன. இதன்படி, இந்தியா-இலங்கை அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி காலியில் நேற்று புதன்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

டெஸ்ட் தரவரிசையில் 7 ஆவது இடத்தில் இருக்கும் இலங்கை, தன்னை தர வரிசைப்பட்டியலில் உயர்த்திக் கொள்ள சரியான சந்தர்ப்பமாக இத் தொடர் அமைந்துள்ளது. சங்ககார, மஹேல ஜெயவர்த்தன, முரளிதரன் ஆகியோரின் ஓய்வுக்குப் பிறகு காலியான வெற்றிடத்தை நிரப்ப முடியாமல் இலங்கை அணி போராடிக்கொண்டு இருக்கிறது. புதிய கப்டன் தினேஷ் சந்டிமால் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளமையால் அவருக்குப் பதிலாக 39 வயதான ஹெரத் இலங்கைப் பொறுப்பு அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### ஹேரத்தின் திட்டம்

கடந்த காலங்களில் நிகழ்ந்ததை நாங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ள வில்லை. மற்றொரு புதிய தொடரைத் தொடங்குகின்றோம். சிறப்பாக தொடங்க வேண்டும், குறிப்பாக முதல் ஆட்டத்தில் சிறப்பாகச் செயற்பட வேண்டும். ஒவ்வோர் இந்திய வீரருக்கும் திட்டம் வைத்துள்ளோம். காலி ஆடுகளம் சிறப்பாக இருக்கும் எனக் கருதுகிறேன். இரு அணிகளுக்குமே இது உதவும் என்பதை உறுதியாக என்னால் கூறமுடியும்.

முதல் இரு நாள்களில் பந்துகள் அதிகளவில் சுழற்பந்து வீச்சுக்கு சாதமாக இருக்கும் எனக் கருதவில்லை. கடைசி இரு நாட்கள் சாதகமாக இருக்கலாம். என்று இலங்கை அணித்தலைவர் ஹேரத் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் தர வரிசையில் முதலாவது இடத்தில் இருக்கும் இந்தியா, கடைசியாக ஆடிய 7 டெஸ்ட் தொடர்களிலும் தொடர்ச்சியாக வெற்றி பெற்றுள்ளது. இந்நிலையில் புதிய பயிற்சியாளர் ரவி சாஸ்திரியின் பயிற்சியின் கீழ் இந்திய அணி விளையாடும் முதல் டெஸ்ட் தொடர் இது ஆகும்.

## ஆண், பெண்களுக்கான உலக குத்துச்சண்டை: இந்தியாவில் நடத்த அனுமதி!



சர்வதேச குத்துச்சண்டை சங்கத்தின் செயற்குழு கூட்டம் ரஷ்யாவில் 2 நாள்கள் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் அடுத்த ஆண்டு (2018) பெண்களுக்கான உலக குத்துச் சண்டைகிண்ணப்போட்டியையும், 2021ஆம் ஆண்டில் ஆண்களுக்கான உலக குத்துச் சண்டைகிண்ணப்போட்டியையும் இந்தியாவில் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இரண்டு போட்டிகளும் டில்லியில் நடைபெற இருப்பதாகவும் இதற்கான திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2 சர்வதேச குத்துச்சண்டை போட்டிகளைநடத்தும்வாய்ப்பை இந்தியாபெற்றிருப்பது குறித்து இந்திய குத்துச் சண்டை சம்மேளன தலைவர் அஜய்சிங் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். அவர்கருத்து தெரிவிக்கையில், ''இரண்டு பெரிய கிண்ணப் போட்டிகளை அடுத்தடுத்து நடத்தும்வாய்ப்புஇந்தியாவுக்கு முதல்முறையாகவழங்கப்பட்டு இருக்கிறது. போட்டிநடத்துவது குறித்து நாங்கள் அளித்த சிறப்பான அறிக்கை இந்த வாய்ப்பை பெற்றுத் தந்ததாகக் கருதுகிறேன். இந்தியாவை குத்துச்சண்டை போட்டியில் பெரிய சக்தி கொண்ட நாடாக சர்வதேச குத்துச் சண்டை சங்கம் எதிர்பார்க்கின்றது. இது போன்ற போட்டிகளை நடத்துவது நாம் அந்த இலக்கை எட்ட உதவிகரமாக இருக்கும்'' என்று தெரிவித்துள்ளார்.

## ரியல் மாட்ரிட் அணியில் நீடிக்கிறேன்: உறுதிப்படுத்தினார் கிறிஸ்டியானோ ரொனால்டோ

ரியல் மாட்ரிட் அணியில் நீடிக்கிறேன் என்று கிறிஸ்டியானோ ரொனால்டோ அதிகார பூர்வமாக அறிவித்துள்ளார். இதனால் அவர் வேறு அணிக்கு மாறுவார் என்ற வதந்தி முடிவுக்கு வந்துள்ளது.

போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த கிறிஸ்டியானோ ரொனால்டோ உலகின் தலை சிறந்த கால்பந்து வீரராகத் திகழ்ந்து வருகிறார். இவர் ஸ்பெயின் நாட்டின் முன்னணி கழகமான ரியல் மாட்ரிட் அணிக்காக விளையாடி வருகின்றார்.

இவரின் சிறப்பான ஆட்டத்தால் ரியல் மாட்ரிட் சம்பியன்ஸ் டிராபி மற்றும் லாலிகா தொடரைக் கைப்பற்றி அசத்தியது. வாரத்திற்கு சுமார் ஒன்றரை கோடி ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கும் ரொனால்டோ, அத்தோடு விளம்பரங்கள் மூலம் கோடிக்கணக்கில் சம்பாதித்து வருகிறார். கோடிக்கணக்கில் சம்பாதிக்கும் கிறிஸ்டியானோ ரொனால்டோ சரியாக வரி செலுத்தவில்லை என்று குற்றம்சாட்டப்பட்டது.

இதுகுறித்து விசாரிப்பதற்காக ஸ்பெயின் நீதிமன்றம் ரொனால்டோவை விசாரணைக்கு அழைத்திருந்தது. இதனால் கிறிஸ் டியானோ ரொனால்டோ அதிருப்தியடைந்தார். அத்துடன் ரியல் மாட்ரிட் அணியில் இருந்து விலகப்போகிறார்என அறிவித்திருந்தார்.



ரியல் மாட்ரிட் அணியில் இருந்து விலகுகிறார் என ரொனால்டோ அறிவித்ததும், மான்செஸ்டர் யுனைடெட், பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் ஆகிய அணிகள் அவருக்கு வலைவிரித்தன. இதில் மான்செஸ்டர் யுனைடெட் அணி முன்னணியில் இருந்தது. ரியல் மாட்ரிட் அணிக்கு முன் ரொனால்டோ மான்செஸ்டர் அணிக்காக விளையாடியவர். ரொனால்டோவை இழுத்துவிடலாம் என்ற நம்பிக்கையில் இருந்த மான்செஸ்டர் யுனைடெட் மற்ற வீரர்களை ஒப்பந்தம் செய்வதில் தாமதம் காட்டியது.

இந்நிலையில் தான் ரியல் மாட்ரிட் அணியில் நீடிப்பதாக ரொனால்டோ தெரிவித்துள்ளார். இதுகுறித்து ஒரு பத்திரிகைக்குப் பேட்டியளித்த ரொனால்டோ, ''கடந்த வருடம் என்னுடைய கழகம் முக்கியமான டிராபிகளை வென்றது மிகவும் சிறப்பானது. நான் அதை தனிப்பட்ட டிராபியாகத்தான் விரும்புகிறேன். அதை திரும்பவும் வென்றால் மிகவும் சிறப்பானதாக இருக்கும்.

''ஒவ்வொரு வருடமும் கடுமையாக உழைக்க வேண்டும். நான் அதைத் தொடர்ந்து செய்வேன். கால்பந்து என்னுடைய வாழ்க்கை. அதுதான் என்னுடைய விருப்பம்'' என்று தெரிவித்துள்ளார். இதனால் மான்செஸ்டர் யுனைடெட் அணிக்கு ரொனால்டோ மாறலாம் என்ற வதந்திக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

## பிரீஸ்ட்ஸ்ட்ரோக் நீச்சல் போட்டி: இங்கிலாந்து வீரர் உலக சாதனை

ரஸ்யாவின்கஸன்பகுதியில் உலககிண்ணபிரீஸ்ட்ஸ்ட்ரோக் நீச்சல் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் இங்கிலாந்தைச் சேர்ந்த 22 வயதான ஆடம் பீட்டி 50 மீட்டர் தூரத்தை 26.10 வினாடிகளில் கடந்து உலக சாதனையைப் படைத்துள்ளார்.

இரண்டு வருடத்திற்கு முன் 26.42 வினாடிகளில் 50 மீட்டர் தூரத்தைக் கடந்து சாதனைப் படைத்திருந்த நிலையில் தற்போது அந்த சாதனையை அவரே முறியடித்துள்ளார்.

இந்த சாதனை குறித்து பீட்டி கூறுகையில், ''நான் உலக சாதனைக்காகச் செல்லவில்லை. அரையிறுதிக்குத் தகுதி பெற வேண்டும் என்ற எண்ணத்தில்தான் கலந்து கொண்டேன்'' என்று தெரிவித்துள்ளார்.

தென்ஆப்பிரிக்காவைச் சேர்ந்த கேமரூன் வான் டெர் பர்க் 0.44 வினாடி வித்தியாசத்தில்தான் 2ஆவது இடம் பிடித்தார். இறுதிப் போட்டியில் பீட்டிக்கு இவர் கடும் போட்டியாகத் திகழ்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





# காலி டெஸ்டில் இந்தியா 3 விக்கெட் இழப்புக்கு 399!

## தவான் 190, புஜரா ஆட்டமிழக்காமல் 144

காலி, ஜுலை 27

இலங்கைக்கு எதிராக காலி கிரிக்கெட் மைதானத்தில் நேற்று ஆரம்பமான முதலாவது டெஸ்டில் இந்தியா முதல் நாள் ஆட்ட முடிவில் 90 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 399 ஓட்டங்கள் என்ற மிக வலுவான நிலையை எட்டியது.

ஒரு நாள் டெஸ்ட் ஆட்டத்தில் – அதுவும் முதல் நாள் டெஸ்ட் ஆட்டத்தில் – இவ்வளவு ஓட்டம் சேகரிக்கப்பட்ட குறியீட்டில் இது ஒரு சாதனை என்று கூறப்படுகின்றது.

இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய இந்தியா துடுப்பாட்டத்தைத் தேர்ந்தெடுத்தது.

ஆரம்பம் முதலே இந்தியாவின் துடுப்பாட்டத்துக்குநின்று பிடிக்கமுடியாமல் இலங்கைப் பந்து வீச்சாளர்கள் தடுமாறினர்.

27 ஓட்டங்களில் இந்தியாவின் முதலாவது இந்திய விக்கெட்டை வீழ்த்திய இலங்கை அணியால் இரண்டாவது விக்கெட்டை 280 ஓட்டங்களை இந்திய அணி பெறும்வரை அசைக்க முடியவில்லை.

இந்தியாவின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தவான் 190 ஓட்டங்களைப் பெற்று பலமான அத்திவாரத்தை இந்திய அணிக்கு அமைத்துக் கொடுத்தார்.

புஜராவும் தம்பாட்டுக்கு ஓட்டங்களைச் சேகரித்தார். நேற்று ஆட்டநேர முடிவின் போது அவர் 144 ஓட்டங்களுடனும் ரஹ்னே 39 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்தியத் தரப்பில் அணித் தலைவர் விராட் கோஹ்லி 03 ஓட்டங்களுடன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் முகுந்த் 12 ஓட்டங்களுடன் சொதப்பினர்.

இலங்கைத் தரப்பில் நுவான் பிரதீப் 64 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இன்று ஆட்டத்தின் இரண்டாவது நாளாகும். (உ)



## அசேல குணரட்ண காயம்

இலங்கை கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரர் அசேல குணரட்ன, போட்டியின் போது ஏற்பட்ட காயம் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.



இந்தியா அணிக்கெதிராக காலி மைதானத்தில் நடைபெற்று வரும் முதலாவது டெஸ்ட் போட்டியின் போது, ஷிகர் தவான் தடுத்தாடிய பந்தை பிடிக்க முற்பட்ட போது அவருக்கு கையில் காயம் ஏற்பட்டது.

இதனையடுத்து மருத்துவர்கள் உடனடியாக மைதானத்துக்கு வரவழைக்கப்பட்ட போதும் அவர் கடும் வலியால் துடித்ததன் காரணமாக அவர் உடனடியாக மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டார்.

உபாதைக் காரணத்தால், அவர் தற்போது நடைபெற்று வரும் முதலாவது டெஸ்ட் போட்டியில் விளையாடுவது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# வடக்கைச் சேர்ந்த 6 நடுவர்கள் இலங்கை கிரிக்கெட் சபையால் தரமுயர்த்தப்பட்டனர்




யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 6 கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் இலங்கை கிரிக்கெட் மத்தியஸ்தர் சபையினால் தரம் 5 இல் இருந்து தரம் 4 இற்கு தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் மத்தியஸ்தர் சங்கத்தினால் நடத்தப்பட்ட தரமுயர்த்தலுக்கான போட்டிப் பரீட்சை கடந்த வருட இறுதியில் நடைபெற்றது.

இதில் நாடுதழுவிய ரீதியில் நூற்றுக்கணக்கான கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் தோற்றியிருந்த நிலையில், தற்போது அதற்கான புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளன. குறித்த பரீட்சையில் வரையறைப் புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப்பெற்ற நடுவர்கள் தற்போது தரமுயர்த்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்ற ஆறு நடுவர்கள் தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் யாழ். அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் விளையாட்டுத்துறை ஆசிரியர் இரவீந்திரன் ரமணன், பருத்தித்துறை தபாலகத்தின் தபால் சேவை உதவியாளராகப் பணிபுரியும் தவராஜசிங்கம் கிருபாகரன், விமான உப நிகர எடைக்கட்டுப்பாட்டு அலுவலகர் பாலச்சந்திரன் சஞ்சீவ், யாழ்ப்பாணம் சுகாதாரத் திணைக்களத்தில் சாரதியாகப் பணிபுரியும் திருச்செல்வம் துஷானந்த், யாழ்.பிரதம தபால் அலுவலக உத்தியோகத்தர் சண்முகசுந்தரம் குணதாஸ் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் ப.முருகவேல் ஆகியோரே இவ்வாறு தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த தரமுயர்த்தல் பரீட்சையில் நாடுதழுவிய ரீதியில் பாலச்சந்திரன் சஞ்சீவ் அதிக உச்ச புள்ளிகளாக 95 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# நாடு திரும்பியது இந்திய மகளிர் அணி; ரசிகர்கள் உற்சாக வரவேற்பு!



இங்கிலாந்தில் நடைபெற்ற பெண்கள் உலகக் கிண்ணப் போட்டியில் இந்திய அணி மிகவும் சிறப்பாக விளையாடி இறுதிப் போட்டி வரை முன்னேறியிருந்தது.

கோப்பையைக் கைப்பற்றும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இந்திய அணி இங்கிலாந்திடம் போராடித் தோல்வியைத் தழுவிக் கொண்டது.

இறுதிப் போட்டியில் தோல்வி அடைந்த போதும் இந்திய அணி வீராங்கனைகளுக்கு பிரதமர் உள்ளிட்ட முக்கிய பிரபலங்களும் சச்சின், ஷேவாக் உள்ளிட்ட முன்னாள் கிரிக்கெட் வீரர்களும் பாராட்டுக்களைத் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், உலகக் கோப்பை தொடரில் பங்கேற்ற இந்திய மகளிர் அணி நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளது. மும்பை விமான நிலையம் வந்தடைந்த அவர்களுக்கு ரசிகர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## இந்தியா – இலங்கை டெஸ்ட் தொடர்; தரவரிசையில் மாற்றம் வருமா?

ஐ.சி.சியின் டெஸ்ட் தரவரிசையில் இந்தியா 123 புள்ளிகளுடன் முதலிடத்திலும், தென் ஆபிரிக்கா 117 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும் உள்ளன. இலங்கை 92 புள்ளிகளுடன் 7ஆவது இடத்தில் இருக்கின்றது.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி 3:0 என்ற அடிப்படையில் தொடரை முழுமையாகக் கைப்பற்றினால் புள்ளி எண்ணிக்கை 125 ஆக அதிகரிக்கும். 2:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றினால் 123 புள்ளிகளிலேயே நீடிக்கும். 1:0 என்ற கணக்கில் வென்றால் ஒரு புள்ளியை இழக்க நேரிடும். 1:1 என்று தொடர் சமனில் முடிந்தால் இந்தியாவின் புள்ளி எண்ணிக்கை 119 ஆகக் குறைவடையும்.

அதே சமயம் 1:2 என்ற கணக்கில் இந்திய அணி தொடரை இழக்கும் நிலையில் 116 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திற்கும், 0:3 என்ற கணக்கில் தொடரைப் பறிகொடுத்தால் புள்ளிகள் 114 ஆகச் சரிவடையும். அவ்வாறு நிகழ்ந்தால் இலங்கை அணி முன்னேறி 3ஆவது இடத்தைப் பிடிக்கும். இலங்கை அணி 2:0 என்ற கணக்கில் தொடரை வென்றால் 4ஆவது இடத்துக்கும், 1:0 என்ற கணக்கில் வெற்றி கண்டால் 5ஆவது இடத்துக்கும் முன்னேறக் கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

## அமெ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மேரிலண்ட் மாநில ஆளுநர் பதவிக்குப் போட்டியிடவுள்ளார்.

"பலர் என்னைக் களமிறங்குமாறு ஊக்குவிக்கிறார்கள், இதுபற்றி நான் தீவிரமாக ஆலோசித்துவருகிறேன்" – என்று அமெரிக்காவில் வாழ்ந்து வரும் இலங்கை வாழ் பெண்ணான கிரிசாந்த விக்னராஜா 'வொஷிங்டன் போஸ்ட்' நாளிதழிடம் தெரிவித்துள்ளார். இலங்கைத்தமிழ்ப் பெற்றோரின் மகளான கிரிசாந்தி மேரிலண்ட் ஆளுநர் பதவிக்குப் போட்டியிடுவதை அங்குள்ள தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த அமெரிக்கர்கள் வரவேற்றுள்ளனர்.

கிரிசாந்தி, யேல் பல்கலைக் கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தில்முதுமாணிப்பட்டத்தையும், லண்டன் ஒக்ஸ் போர்ட் பல்கலைக்கழகத்தில் அனைத்துலக உறவுகளுக்கான முதுமாணிப் பட்டத்தையும் பெற்றவர். யேல் சட்டப்பாடசாலையில் சட்டமாணி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

ஒபாமா ஆட்சிக் காலத்தில் அமெரிக்காவின் முதல் பெண்மணியான மிச்சேல் ஒபாமாவின் கொள்கை மற்றும் அனைத்துலக விவகாரங்களுக்கான பணிப்பாளராக இவர் கடமையாற்றினார். இவர் வெள்ளை மாளிகையில் பணியாற்றிய போது உலகில் 60 மில்லியன் பெண்பிள்ளைகளுக்கு கல்வியை வழங்கும் திட்டத்துக்கான முன்முயற்சியை மேற்கொண்டிருந்தார்.

வெள்ளை மாளிகையில் பணியாற்றுவதற்கு முன்னர், கிரிசாந்தி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திலும் பணியாற்றியிருந்தார். ஐ.நாவில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தார்.

இவரது பெற்றோர் இலங்கையின் உள்நாட்டுப்போரினால் அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்தனர். இவர்கள் இருவரும் பால்டிமோர் நகர பொது பாடசாலையின் ஆசிரியர்களாக பணியாற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## மெய்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பாக்கிசூட்டு சம்பவத்தில் நீதிபதி இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலராக 17 வருட காலமாகப் பணியாற்றிய சிலாபத்தைச் சேர்ந்த 51 வயதாகிய சரத் ஹேமசந்திர என்பவர் பரிதாபமாக உயிரிழந்திருந்தார்.

இவரது உடலுக்கு அரசியல் பிரமுகர்கள், பொலிஸார், பொது மக்கள், நீதிபதிகள் மற்றும் நீதிமன்ற உத்தியோகத்தர்கள் எனப் பலரும் அஞ்சலி செலுத்தினர்.

சரத் ஹேமச் சந்திரவின் பூதவுடல் அவரது சொந்த ஊரான சிலாபம் குமாரகட்டுவில் நேற்று நல்லடக்கம் செய்யப் பட்டது.

இவரது பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு மேல்மேல் நீதிமன்ற நீதிபதிகளான பிரேம்சங்கர், சசிமகேந்திரன் மற்றும் மா.இளஞ்செழியன் ஆகியோரும் மாவட்ட நீதிபதிகளான பிரபாகரன், அலெக்ஸ்ராஜா, ஜூட்சன், கருணாகரன், ரியால், வளன் ஆனந்தராஜா ஆகியோரும் மேலும் பல தமிழ், சிங்கள நீதிபதிகள், நீதின்ற உத்தியோகத்தர்கள், வடமாகாணபொது மக்கள் எனப்பலரும் சிலாபத்துக்கு வருகை தந்துள்ளனர்.

பொலிஸ் சார்ஜன்ட் சரத் ஹேமச்சந்திரவிற்கு இறப்பின் பின்னர் சப் இன்ஸ் பெக்டராக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) விடயங்களையும் வழி காட்டல் குழுவின் இடைக்கால அறிக்கையில் கொள்கைப் பிரகடனமாகச் சேர்த்துக் கொள்வது என்று நேற்றும் நேற்று முன்தின மும் நடைபெற்ற அரசமைப்பு வழிகாட்டல் குழுவில் தீர்மானிக்கப்பட்டது எனநம்பகரமாக அறிய வந்தது.

சட்டம், ஒழுங்கு தொடர்பான விடயத்தை ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட உபகுழு, மேற்படி இரு விடயங்களையும் உள்ளடக்கியதான விவரிப்பு ஒன்றை பத்து, பன்னிரண்டு பக்கங்களில் சமர்ப்பித்திருந்தது. அதனை முழுமையாக இடைக்கால அறிக்கையில் சேர்ப்பது என்றே முன்னர் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் நேற்று முன்தினம் நடைபெற்ற வழிகாட்டல் குழுக் கூட்டத்தில் அந்த நீண்ட விவரிப்பைத்தவிர்த்து விட்டு, கொள்கை விளக்கமாக இந்த விடயத்தை நேரடியாகச் சேர்த்துக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இதேசமயம், வழிகாட்டல்குழுவினால் தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையின் நகல் வடிவம் நேற்றோடு முழுமையாக வாசித்து அங்கீகரிக்கப்பட்டு விட்டதாகத் தெரிகின்றது.

எனினும் இடைக்கால அறிக்கையுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யோசனைத் திட்டமும் இணைக்கப்படவேண்டும் என்பதால் அதற்காக வழிகாட்டல் குழு காத்திருப்பதாகக் கூறப்பட்டது.

இந்த யோசனை அறிக்கையைத்தருவதற்கு சு.க.ஏற்கனவே இரண்டு வார கால அவகாசம் கோரியுள்ளது. அது வழங்கப்பட்டும் உள்ளது.

அந்த யோசனை அறிக்கை பெரும்பாலும் ஓகஸ்ட் முதல் வாரத்தில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதால், அதையும் உள்வாங்கி இடைக்கால அறிக்கையை இறுதிசெய்து முடிப்பதற்காக எதிர்வரும் 8, 9, 10 ஆம் திகதிகளில் வழிகாட்டல் குழுவைக் கூட்டுவதற்கு நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. (உ)

## நாளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இதன் அடிப்படையில் எதிர்வரும் 28 ஆம், 29ஆம் மற்றும் 30 ஆம் திகதிகளில் (வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில்) இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்குமாறு கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

அதன்படி, நாளை வெள்ளிக்கிழமை பாடசாலைகளில் கல்வி நடவடிக்கை நடைபெறா எனவும் அன்றைய தினம் மாணவர், பெற்றோர், ஆசிரியர், பழைய மாணவர் மற்றும் பாடசாலைக்கு அருகில்வசிப்பவர்கள் இணைந்து பாடசாலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சுத்தப்படுத்தும்நடவடிக்கைகளில்படுவர் என்றும் கூறப்பட்டது.

அன்றையதினம்மாணவர்கள் பாடசாலை மாணவர்களுக்கான சீருடையையோ அல்லது சிரமதானத்துக்கு பொருத்தமான வேறு எந்தவொரு ஆடைகளையேயோ அணிந்து வருவதற்கு அனுமதிவழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதே போல் சனி மற்றும் ஞாயிறுக்கிழமைகளிலும் மாணவர்களின்ஒத்துழைப்புடன்டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## நூறாவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நூறாவது அமர்வு தொடர்பாக எதிர்கட்சி தலைவர் சி.தவராசாவைத் தொடர்பு கொண்டு கேட்டபோது –

கடந்த டிசம்பர் மாதம் வரையில் வடமாகாணசபை 348 தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கின்றது. மிகுதி 7 மாதங்களையும் சேர்த்தால் சுமார் 400 வரையான தீர்மானங்கள் வடமாகாண சபை நிறைவேற்றியிருக்கும். நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் பெரும்பாலானவை தேவையற்றவை என்பதுடன், பெரும்பாலான தீர்மானங்கள் பேசி தீர்த்து கொள்ளக் கூடிய விடயங்கள் சார்ந்த பிரேரணைகளாகவே இருந்தன.

இந் நிலையில் நாம் காட்டிய எதிர்ப் பினால் தேவையற்ற தீர்மானங்கள் சபைக்கு வருவது வெகுவாக குறைவடைந்திருக்கின்றது. வெறுமனே தீர்மானங்களை நிறைவேற்றுவதனால் எந்தப் பயனும் இல்லை. காரணம் தீர்மானங்களைச் சட்டவலு அற்றவை.

இங்கே நிறைவேற்றப்பட வேண்டியவை நியதிச் சட்டங்களே ஆகும். ஆனால் நியதிச் சட்டங்களை உருவாக்காமல் தேவையற்ற தீர்மானங்களை நிறைவேற்றி வடமாகாணசபை தனது காலத்தை வீணடித்திருக்கின் றது.

மேலும் நியதிச்சட்டங்களை உருவாக்குவதற்கு உதவ பல நிறுவனங்கள் முன்வந்தபோதும் அவற்றையும் வடமாகாண சபை பயன்படுத்திக் கொள்ளாமல் 3 வருடங்கள் 9 மாதங்களைகடந்து 100வது அமர்வை நாளை நடத்தவுள்ளது.

இப்போது இந்நிலையில் மீதம் இருக்கும் காலத்திலாவது வடமாகாண சபை தனக்கு தேவையானநியதிச்சட்டங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் – எனத் தெரிவித்தார். (உ)

## மெய்க் காவலரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) லின் குடும்பத்தினருக்கு யாரும் எதிர்பாராத உதவியை நீதிபதி இளஞ்செழியன் செய்துள்ளார்.

தன்னுடன் 17 வருடங்களாக சேவையாற்றி தன்னுயிரை காப்பாற்றிவிட்டு உயிர்நீத்தவரின் இரு பிள்ளைகளையும் நீதிபதி இளஞ்செழியன் தத்தெடுத்துக் கொள்வார் என உறுதியளித்துள்ளார்.

இரு பிள்ளைகளையும் தனது சொந்த பிள்ளைகளைப் போல் பராமரித்து, தான் இறக்கும் வரை அவர்களது எதிர்காலத்திற்கு தேவையான சகல விடயங்களையும் ஒரு தந்தையின் ஸ்தானத்தில் இருந்து செய்வார் என நீதிபதி இளஞ்செழியன் உறுதியளித்துள்ளார் எனச்செய்திகள் வெளியாகியுள்ளன.

சிலாபம் பகுதியைச்சேர்ந்த 51வயதாகிய சரத் ஹேமச்சந்திர என்ற மெய்ப் பாதுகாவலரே உயிரிழந்திருந்தார். இவருக்கு ஒரு மகனும் ஒரு மகளுமாக இருபிள்ளைகள் இருக்கின்றனர்.

## முதல்வரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கூட்டமைப்பின் தலை வருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்புக் குறித்தும், அதன் பின்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சி தொடர்பில் வெளியான செய்திகள் குறித்தும் தமது கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் கருத்தைப் பிரதிபலித்து அதன் தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:–

வடமாகாண முதலமைச் சருக்கும் நாடாளுமன்றத்தின்

பக்கம் 03

## கேப்பாபிலவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கேட்டார் சம்பந்தன்.

"திட்டவட்டமான ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டும். இனியும் காலத்தை இழுத்தடிக்கமுடியாது. ஒரு முடிவு இதற்கு எட்டப்பட வேண்டும்." – என்ற தொனியில் சீற்றத்துடன் கூறினார் அவர்.

கேப்பாபிலவில் தமது காணிகளைவிடுவிக்கக்கோரும் அப்பகுதி மக்களின் போராட்டம் 150 ஆவது நாளைத் தாண்டியுள்ளநிலையில், இவ்விடயத்தை ஒட்டிய கூட்டம் ஒன்று அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனால் நேற்றுக் காலை நடத்தப்பட்டது.

அமைச்சர் சுவாமிநாதன், அவரது அமைச்சு அதிகாரிகள், இராணுவத்தளபதியின் பிரதிநிதி ஒருவர், முல்லைத்தீவுகட்டளைத் தளபதி உட்படபடை அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண முதலமைச்சரின் பிரதிநிதியாக மாகாண அமைச்சர் அனந்திசசிதரன், மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், திறைசேரி அதிகாரிகள், முல்லைத்தீவு மாவட்ட செயலக அதிகாரிகள் என்போர் பங்குபற்றினர். அத்தோடு காணிமீட்புக்காகப்போராட்டம் நடத்தும் மக்களின் பிரதிநிதிகளும் இக்கலந்துரையாடலில் பங்குகொண்டனர்.

அங்கு காணி விடுவிப்புக் குறித்து கலந்துரையாடப்பட்டது.

முதலில் அப்பகுதியில் படையினரால் 243 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டமாக மீள்குடியேற்ற அமைச்சினால் ஐம்பது லட்சம் ரூபா இராணுவத்துக்கு ஒதுக்கப்பட்டமையை அடுத்து 175 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டது.

மூன்றாவது கட்டமாக 111 ஏக்கர் காணியை விடுவிப்பதற்கு 14 கோடி 80 லட்சம் ரூபாவை

பக்கம் 03

## பெற்றோலிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பெரும்நெருக்கடி உருவானமையைத் தொடர்ந்து பெற்றோலிய விநியோக சேவையை வர்த்தமானி அறிவித்தல் மூலம் அத்தியாவசிய சேவையாக ஜனாதிபதி பிரகடனப்படுத்தினார்.

இதையடுத்து, பெற்றோலிய எரிபொருள் விநியோக மையங்களுக்குள் இராணுவமும், பொலிஸாரும் புகுந்தனர்.

அதனால், அந்த இடங்களில் பெரும் பதற்றமும் குழப்பமும் ஏற்பட்டன.

ஊழியர் பணிப் புறக்கணிப்பால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமத்தைக் கருத்தில் கொண்டு ஊழியர்களை பணிக்குத் திரும்புமாறு ஜனாதிபதி தரப்பிலும் அரசு தரப்பிலும் பகிரங்கக் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

அதற்கு ஊழியர்கள் செவிசாய்க்காமையை அடுத்தே கொலன்னாவை மற்றும் முத்துராஜவெல பகுதிகளில் உள்ள எரிபொருள் களஞ்சியசாலைகளுக்குள் பொலிஸாரும் முப்படையினர் புகுந்தனர். முடங்கிக்கிடந்த எரிபொருள் விநியோக வேலையை அவர்கள் ஆரம்பித்தனர்.

ஒன்று திரண்ட பெற்றோலிய ஊழியர்கள் அதனை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர். அதனால் பதற்றமும் களேபரமும் ஏற்பட்டன.

16 ஊழியர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டு வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த ஊழியர்களை கூட்டு எதிரணி எம்.பிக்களான தினேஷ் குணவர்த்தன டலஸ் அழகப்பெரும, சந்திரசிறி கஜதீர, விமல் வீரவன்ஸ, காமினி லொக்குகே ஆகியோர் போய்ப் பார்த்தனர்.

எனினும் ஜனாதிபதிக்கும் ஊழியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட இணக்கத்தை அடுத்து நிலைமை சுமுகமாக முடிந்தது. கைதான ஊழியர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (உ)

## தீர்ப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து தாம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

28 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் நீதிமன்றமே விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கியுள்ளமை உலகத் தமிழர்களை மகிழ்ச்சிக்குள்ளாக்கியிருப்பது மட்டுமின்றி, இந்த தடை நீக்கம் ஈழத் தமிழர்களின் உரிமை போராட்டத்தில் ஒரு முக்கியமான திருப்புமுனை என்றே கருதுகிறேன்.

ஈழத்தமிழர்கள் மீது இலங்கை இராணுவம் நடத்திய மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணையை தொடர்ந்து முடக்கி வரும் இலங்கை அரசு இந்தத் தடை நீக்கத்தின் நோக்கத்தை உணர்ந்து ஈழத் தமிழர்களுக்கு அதிகார பகிர்வு, சம உரிமை மற்றும் கண்ணியத்துடன் தமிழர்கள் வாழ்வதற்குத் தேவையான உறுதியான நடவடிக்கைகளை இனிமேலும் காலம் தாழ்த்தாமல் எடுக்க வேண்டும்.

போரின் போது காணாமல் போனதமிழர்களை அடையாளம் காணுவது, தமிழர்களின் நிலங்களைஆக்கிரமித்துள்ள இலங்கை இராணுவத்தை அங்கிருந்து வெளியேற்றி அந்தநிலங்களைத் தமிழர்களிடம் திருப்பி ஒப்படைப்பது, மனித உரிமை மீறல்கள் குறித்து சுதந்திரமான சர்வதேச விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவது, இனப் படுகொலைக்கு காரணமானவர்களை தண்டிப்பது, ஈழத் தமிழர்கள் விரும்பும் அரசியல் தீர்வை வழங்குவது உள்ளிட்ட அடுத்த கட்ட நடவடிக்கைகளில் இலங்கை அரசு விரைந்து செயல்பட வேண்டும்.

அத்துடன் ஐரோப்பிய யூனியனதடையை நீக்கியிருக்கின்ற நிலையில் ஈழத் தமிழர்களுக்கான உரிமைகள் கிடைப்பதற்கு இந்திய மத்திய அரசு உரிய அழுத்தத்தை இலங்கை அரசுக்குக் கொடுக்க வேண்டும்.

ஐரோப்பிய யூனியன் உயர் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பின் நல்லெண்ணத்தை முன்னெடுத்துச் சென்று ஈழத் தமிழர்கள் வாழ்வை சூழ்ந்துள்ள காரிருளை நீக்க மத்திய அரசும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்று உள்ளது. (உ)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) 2001 செப்டெம்பரில் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரம் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து 22 அமைப்புக்களைப் பட்டியலிட்டு அவற்றைத் தடை செய்யும் அறிவிப்பை ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டது.

2006 இல் இந்தப் பட்டியலில் புலிகள் அமைப்பு சேர்க்கப் பட்டது.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்தபின்னர் – 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் – விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்துவதற்கான எந்தவொரு ஆதாரங்களும் கிடைக்காமை காரணமாக விடுதலைப் புலிகள் அமைப்பு பயங்கரவாத பட்டியலிருந்து நீக்கப்படுவதாக நீதிமன்றம் அறிவித்தது.

விடுதலைப் புலிகளின் நிதிகளின் தொடர்ச்சியான முடக்கம் ரத்து செய்யப்படுவதையும் நீதிமன்றம் உறுதிப்படுத்துவதாகவும் தீர்ப்பின்போது அறிவிக்கப் பட்டது. (உ)

# எதிர்ப்புப் போராட்டங்களுக்கு முடிவு சைட்டத்தை தடை செய்வதுதான்

கொழும்பு, ஜூலை 27

'சைட்டம்' தனியார் மருத்துவக் கல்லூரி தடை செய்யப்பட்டால் மாத்திரமே அதற்கு எதிராக முன்னெடுக்கப்படும் போராட்டம் முடிவுக்கு வரும் என்று ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

விகாரமஹாதேவி பூங்காவில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட சைட்டத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

'சைட்டம்' நிறுவனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் என்பன இணைந்து கொழும்பு விகாரமஹா தேவி பூங்காவில் பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தின.

ஆர்ப்பாட்டம் செய்து கொண்டே இந்தக் கூட்டத்துக்கு ஆதரவாளர்கள் சமூகமளித்திருந்தனர்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசு பொதுமக்களை பிரதிபலிக்கவில்லை என்பதே உண்மையான விடயம்.

'சைட்டம்' விடயத்தில் நீண்டதூரப் பயணம் உள்ளது. ஆனால்,பல்வேறு குறுங்கால சவால்களும் உள்ளன.

'சைட்டம்'மருத்துவக் கல்லூரி முழுமையாக இல்லாதொழிக்கப்படுவதன் மூலமே அதற்கு எதிரான போராட்டம் உண்மையனதாக அமையும்- என்றார். (எ)



விகாரமஹாதேவி பூங்காவில் ஜே.வி.பி. தலைவர் அனுர எம்.பி. முழக்கம்

## நாளை மின் தடை

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை -

காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ் பிரதேசத்தில்** வலந்தலைசந்தி, சிவகாமி அம்மன் கோவிலடி, மருதபுரம், வியாவில், ஆலடி, கருங்காலி, காரைநகர் சிவன் கோவிலடி, பொன்னாலை கிருஸ்ணன் கோவிலடி, பொன்னாலை வீட்டுத்திட்டம், இளவாலை ஒரு பகுதி, ஆலடி, மெய்கண்டான், சேந்தாங்குளம் ஆகிய இடங்களிலும்-

**கிளிநொச்சி பிரதேசத்தில்** டொன்பொஸ்கோ (மாங்குளம்), வன்னிவிளாங்குளம், ஒட்டறுத்தகுளம், வடகாடு, பாலிநகர், அம்பாள்புரம், கொல்லவிளாங்குளம், உயிலங்குளம், ஐம்பது வீட்டுத்திட்டம்,பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், கரும்புள்ளியான்,தென்னியங்குளம், உயிலங்குளம் பாரதிநகர், மாங்காக்குடியிருப்பு, ஆலங்குளம், கல்விளான், 66 ஆம் இராணுவ படைமுகாம், பிள்ளையார் அரிசி ஆலை , துணுக்காய் பல்நோக்கு கூட்டுறவுச் சங்க அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களில், மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# அனைத்துத் தேர்தல்களும் ஒரேதினத்தில் கொள்கையளவில் அமைச்சரவை தீர்மானம்

கொழும்பு, ஜூலை 27

ஒரேதினத்தில் சகல மாகாண சபைகளுக்கும் தேர்தல்களையும் நடத்துவது தொடர்பில் அமைச்சரவை கொள்கையளவில் தீர்மானம் ஒன்றுக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமரால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தேர்தலை ஒரேதடவையில் நடத்தாமல், தனித்தனியாக முன்னெடுப்பதால் காலம், வளங்கள், மனித சிரமம் என்பன வீணடிக்கப்படுகின்றன. இதனால், அரச இயந்திரத்துக்கு பிரச்சினையாக உள்ளதாக அந்தப்பிரேரணையின் போது பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார் என்று அந்த வட்டாரங்கள் குறிப்பிட் டுள்ளன.

அரசு, எல்லை நிர்ணயத்தை வைத்துக் கொண்டு உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை இழுத்தடிப்புச் செய்து வந்தது. இதற்கு தற்பொழுது வேறு நியாயங்களை முன்வைக்கின்றது.

எதிர்வரும் செப்ரெம்பரில் சில மாகாணங்களின் ஆயுட்காலம் முடிவடையவுள்ளது. இதற்கான தேர்தல் நிச்சயம் வரும் என்று அனைவரிடமும் எதிர்பார்ப்புவரும் விதத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்.

இந்தச் சூழலிலேயே அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்துவது என்ற புதுக்கதையை அரசு ஆரம்பித்துள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

தற்போது பதவிக்காலம் முடிவடையும் மூன்று மாகாண சபைகளினதும் தேர்தல்களை நடத்தாமல், ஏனைய மாகாண சபைகளின் பதவிக்காலம் முடியும் வரை இழுத்தடிப்பதற்காக ஒரே சமயத்தில் அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை நடத்துதல் என்ற புதிய நாடகத்தை அரசு ஆரம்பித்துள்ளதோ என சில அரசியல் வட்டாரங்கள் கொழும்பில் சந்தேகம் வெளியிட் டுள்ளன.

# சட்டவிரோதமாக கடத்தப்பட்ட முதிரை மரக் குற்றிகள் மீட்பு!



பளை, ஜூலை 27

சட்டவிரோதமாகக் கடத்திச் செல்லப்பட்ட முதிரை மரக்குற்றிகள் பளையில் பொலிஸாரால் நேற்றுமுன் தினம் மீட்கப்பட்டுள்ளன.

மல்லாவி பகுதியிலிருந்து எருவுக்குள் மறைத்து பார ஊர்தி ஒன்றில் கடத்த முற்பட்ட மரக்குற்றிகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி -முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபரின் விசேட குற்றத் தடுப்புப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய பளை, இத்தாவில் பகுதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது அவை மீட்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போடுவதற்கு அரசு சதி!



குற்றஞ் சாட்டுகிறார் கம்மன்பில எம்.பி.

கொழும்பு, ஜூலை 27

பெண்பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதாகக் கூறி, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை பிற்போட அரசு சதித்திட்டம் தீட்டுகின்றது என,நாடாளுமன்ற உறுப்பினரும் பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவருமான உதய கம்மன் பில குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 10ஆம் திகதி, வர்த்தமானி அறிவித்தலில் வெளியான உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் திருத்தச் சட்ட மூலம், நாடாளுமன்றத்தில் இவ்வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதன்மூலம், உள்ளூராட்சி மன்றங்களில்பெண்பிரதிநிதித்துவத்தை 30 சதவீதமாக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது. இதற்கு நாம் பூரண ஆதரவை வழங்குகின்றோம்.

உள்ளூராட்சி மன்றங்களில் பெண் பிரதிநிதித்துவத்தை 30 சதவீதமாக அல்ல 50 சதவீதமாக உயர்த்தினாலும், அதனை நாம் வரவேற்போம். எனினும், பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதாகக் கூறி, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அரசு பிற்போடுகின்றதோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.- என்றார்.

## சாவகச்சேரியில் விபத்து: இளைஞன் படுகாயம்!

சாவகச்சேரி,ஜூலை 27

சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு அருகில் நேற்றுக் காலை 8 மணிக்கு இடம்பெற்றவிபத்தில்இளைஞன் ஒருவர் படுகா யமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட் டுள்ளார்.

வீதியில் முன்னால் பயணித்த 'படி'வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியதால் இந்த விபத்துஇடம்பெற்றுள்ளது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மீசாலை தெற்கு கொடிகாமத் தைச் சேர்ந்த 26 வயதான தங்கராசா அனுசன் என்ற இளைஞனே காயம டைந்தார்.

இந்தவிபத்து தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (எ-21)

## வருமான அறவீடுகள் தொடர்பான நடமாடும் சேவை

சாவகச்சேரி நகர்ப் பகுதியின் வருமான அறவீடுகள் தொடர்பான நடமாடும் சேவை இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கையில் உள்ள பூவேந்தன் பாலர் பகல் பராமரிப்புக் கட்டடத்தில் இடம்பெறும் என்று சாவகச்சேரி நகரசபையின் செயலாளர் கா.சண்முகதாசன் அறிவித்துள்ளார்.


நடமாடும் சேவையில் ஒன்பதாம் வட்டார வரியிறுப்பாளர்கள் செலுத்த வேண்டிய ஆதனவரி மற்றும் வியாபார வர்த்தக மற்றும் தொழில் வரிகளையும் சைக்கிள்களுக்கான இலக்கத் தகடுகளையும் பெற்றுக்கொள்ளலாம். சாவ கச்சேரி நகர்ப்பகுதியில் உள்ள குடியிருப்புக்கள், வணிக நிலையங்கள், தொழில் நிலையங்கள் போன்றவற்றுக்கான வரிகளைச் செலுத்தாதவர்கள் நடமாடும் சேவையில் அவற்றைச் செலுத்துமாறு அவர் மேலும் தெரிவித்தார். (எ)

## ஆலய மகோற்சவம்

யாழ்ப்பாணம்,ஜூலை 27

அளவெட்டி குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலய மகோற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ள மகோற்சவத்தில் அடுத்த மாதம் 6 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறு நாள் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.




## பூநகரியில் ஓட்டோ விபத்து மூவர் காயம்

யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி நோக்கி பயணித்த ஓட்டோ ஒன்று நேற்றுக் காலை 7.40 மணியளவில் சங்குப்பிட்டி பாலம் அருகே, வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்திற்கு உள்ளா கியது எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதில் காயமடைந்த சாரதி உட்பட 3 பேர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்துக்குறித்து பூநகரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

சசிகா லேணர்ஸ்
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

A/L எடுக்கும் மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்
இந்தச் சிட்டையைப் பூர்த்தி செய்து வரும்
மாணவர்களுக்கு சாரதியப் பயிற்சிக்கு விசேட
கட்டணக் கழிவு வழங்கப்படும்.

பெயர் ..........................................

முகவரி ..........................................

..........................................

தொ.பே.இல..........................................

## முல்லைத்தீவில் கிணற்றிலிருந்து மிதிவெடிகள், வெடிப்பொருள்கள் மீட்பு



முல்லைத்தீவு உண்ணாப்பிலவு பகுதியில் உள்ளதனிநபர் ஒருவரின் காணியில் உள்ள கிணற்றுக்குள் மிதிவெடிகள் மற்றும் வெடிபொருள்கள் காணப்படுகின்றன எனப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. குற்றவியல் சட்டத்தின்கீழ் இந்த விடயம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வெடிபொருள்களை அழிக்கும்படி முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் சிறப்பு அதிரடிப்படையினருக்கு உத்தரவிட்டது.

தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியான நிலையினால் கிணற்றில் நீர் வற்றி காணப்பட்டுள்ளதைத் தொடர்ந்து வெடிப்பொருள்கள் மேலே தெரிந்தன.

கிளிநொச்சியில் இருந்து சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் முல்லைத்தீவு பொலிஸார் அந்த இடத்திற்கு சென்று கிணற்றில் உள்ள வெடிபொருள்களை எடுத்து பாதுகாப்பான இடத்தில் வைத்து தகர்த்து அழித்தார்கள். 22 மிதிவெடிகள், துப்பாக்கி ரவைகள் 789, வெடிப்பி-43, வெடிமருந்து - ஒரு கிலோகிராம் என்பன மீட்டு அழிக்கப்பட்டுள்ளன. (உ)





கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்களுக்கான நியமனக்கடிதங்கள் வழங்கும் நிகழ்வு வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தலைமையில் நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

அறிவியல்நகர் பகுதியில் அமைந்துள்ள கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பிராந்திய பயிற்சி நிலைய மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 56 பயிற்சியாளர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

மேலும், வடமாகாணத்தின் 5 மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட பயிற்சியாளர்களுக்கு, குண்டசாலை பகுதியில் கரந்தகொல்ல என்ற இடத் தில் 2 வருடங்களுக்கு வேதனத்துடனான பயிற்சி இடம்பெறவுள்ளதாகவும் இதன்போது முதல் விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

## இ.போ.ச. பஸ் குடைசாய்ந்ததில் 35 பயணிகளுக்கு படுகாயம்



அம்பாறை-கல்முனை வீதியிலுள்ள மல்வத்தை என்னும் இடத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று நேற்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த பஸ்ஸில் பயணித்த 35 பயணிகள் படுகாயமடைந்துள்ளனர் என சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

கதிர்காமத்திலிருந்து வாழைச்சேனை நோக்கி பயணித்த பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் குடைசாய்ந்துள்ளது. இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் சம்மாந்துறை, அம்பாறை, கல்முனை வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். (உ)

## அ'புரத்தில் வெற்றிகரமாக கால் மாற்று சத்திரசிகிச்சை



மூளைச்சாவு அடைந்த ஒருவரின், காலை அகற்றி காலை இழந்திருந்த மற்றொருவருக்கு அதனைப் பொருத்தி இலங்கை தமிழ் மருத் துவர் ஒருவர் சாதனை படைத்துள்ளார். பிரபல சத்திர சிகிச்சை நிபுணர் யோ.அருட்செல்வன் வெற்றிகரமாக இந்த சிகிச்சையை அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் மேற்கொண்டு சாதனை படைத் துள்ளார். இலங்கையில் முதன் முறையாக இந்த சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(விவரமான செய்தி 7ஆம் பக்கத்தில்)



எரிபொருள் களஞ்சியங்களுக்குள் இராணுவம் புகுந்த போது...

(செய்திகள் முதலாம் பக்கத்தில்)

## ஜூலைப் படுகொலை நினைவேந்தல் நேற்று திருகோணமலையில்!



வெலிக்கடைச் சிறைச்சாலையில் 1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற படுகொலைகளும், அதனை அடுத்து இடம்பெற்ற வன்செயல்களின் மூலம் படுகொலை செய்யப்பட்ட வர்களுக்குமான நினைவேந்தல் நிகழ்வு திருகோணமலையில் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றது.

வடமாகாண உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் திருகோணமலையில் இருக்கும் கடற்கரையில் அமைந்துள்ள வெலிக்கடை தியாகிகள் நினைவரங்கில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

ஜூலை மாதம் இடம்பெற்ற இப்படுகொலைகளில் சிறை வளாகத்தில் 53 தமிழரும் நாடளாவிய ரீதியில் சுமார் மூவாயிரம் தமிழர்களும் படுகொலையுண்டமை குறிப்பிடத்தக்கது.







நல்லூரில் கடந்த சனியன்று சுட்டுக் கொல்லப்பட்ட சார்ஜண்ட் ஹேமச்சந்திரவின் இறுதிக்கிரியைகள் நேற்று சிலாபத்தில் நடந்தபோது எடுக்கப்பட்ட படங்கள். யாழ். மேல் நீதிமன்ற நீதிபதியின் மெய்க்காவலர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் என்பதால் தமிழர் பிரதேசத்தைச் சேர்ந்த நீதித்துறையினர் அனைவரும் இறுதி நிகழ்வுக்காக அங்கு திரண்டிருந்தனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.07.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.